Registered as a News Paper in Sri Lanka


දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 20.00

மே. 18 - 24, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 662



## தொடரும் படுகொலைகளும் தொடராத சமாதானமும்

## இலங்கைக்கு உதவ இந்தியா தயார்!





## இன்னொரு அந்தரங்கம்!

## வீடு - போவோம்! ரசிப்போம்!

## ஷகீவாவுக்கு போட்டி மம்தா!




## அபிராமியின் அருள்

**இந்து** சமயத்திலே சக்தி வழிபாடு சிறப்புக்குரியதும் பழமையானதும் என்று போற்றப்படும். உலக இயக்கத்தின் மூலமாக ஆதிபரா சக்தி போற்றப்படுகின்றமை இதற்குச் சான்று. சக்தியை முழுமுதற் கடவுளாக கொண்டு வழிபடும் சமயம் சாக்தமாகும். எனினும் இன்று இந்து சமயத்தின் வியாபித்த வழிபாடாக மாறியுள்ள சக்தி வழிபாடு. உலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் அபயமளிக்கும் அன்னை என்றே கூறவேண்டும். சக்தியின் வழிபாடு வீரம், செல்வம், ஞானம் என்று பல்வேறு படிநிலைகளில் வழிபடப்படுகிறது. பல்வேறு நாமங்களில் சக்தி வழிபாடு செய்யப்படுகிறது. அன்னையின் அருள் பற்றி அபிராமி பட்டர் தனது பாடலில்:

**"விழிக்கே அருளுண்டு அபிராமி**
**வல்லிக்கு வேதம் சொன்ன**
**வழிக்கே வழிபட நெஞ்சுண்டு..."** என்று போற்றுகிறார்.

**-என்.மயூரன், வவுனியா.**

## ஆன்மீகம்



## அபயமளிக்கும் தேவன்!

"ஆபத்து நேரத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு. நான் உன்னை விடுவிப்பேன்;

நீ என்னை மகிமைப்படுத்துவாய்." (சங்கீதம் - 50:15)

ஆம். சகோதர, சகோதரிகளே! தம் மக்களை நோக்கி ஆண்டவர் கூறுகிறார் இப்படி. கருணை உள்ளம் கொண்ட நம் தந்தை, தம் பிள்ளைகளின் வேதனைகளைக் கண்டு சும்மா இருந்துவிட முடியுமா? என்றும் மாறாத நம் தேவன், பாவங்களையும், பாவிகளையும் மன்னிக்க மண்ணுலகில் - மனித உருவில் - வந்துதித்த நமது தேவனாகிய கர்த்தர் என்றும் மாறாத அன்பும், கருணையும் கொண்டவர். அவரை நினைத்தால் அனைத்தும் சிறக்கும். இருளில் ஒளி கிடைக்கும். திக்குத் தெரியாத காட்டில் கூட திசை தெரியும். அவரே நமது வழி - வாழ்வு என்று துதித்துப் போற்றுவோம்.

ஆழி சூழ் உலகத்தை ஆளும் நமது தேவன், ஊழி சூழ் நமது வாழ்வை ஒளி பெறச் செய்வார்.

**-மதி, ஹெந்தளை.**

## அண்டை வீட்டாரை நேசியுங்கள்


பொதுவாகவே அண்டை வீட்டினரோடு எதனால் அடிக்கடி பிரச்சினைகள் உருவாகின்றன? அவர்களுடைய வளர்ச்சி கண்டு பொறாமை கொள்வது, அவர்களை அவதூறு பேசுவது - இது போன்ற சின்னச் சின்ன உரசல்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டியனவாகும்.

நபி (ஸல்) அவர்கள் மொழிந்தது: 1. விலக்கப்பட்டதைத் தவிர்த்துக் கொள்வீர்களாக. 2. மேலும் அல்லாஹ் உமக்கு விதித்த பாக்கியத்தைக் கொண்டு திருப்தியடைவீராக! நீர் மனிதர்களுக்குள் பெருஞ் சீமானாவீர். 3. இன்னும் உம்முடைய அண்டை வீட்டாருக்கு நன்மை புரிவீராக! நீர் மெய்யான விசுவாசி. 4. நீர் உமக்காக விரும்புவதை (இதர) மனிதர்களுக்காகவும், விரும்புவீராக! நீர் உண்மை முஸ்லிமாவீர். 5. சிரிப்பை அதிகப்படுத்தாதிருப்பீராக. ஏனெனில் அதிகச் சிரிப்பானது இருதயத்தை மரணிக்கச் செய்யும்.

அறிவிப்பவர்: அபுஹுரைரா(றலி)

**-நுஸ்ரத் பெனாஸீர் நிபாஸ், மூதூர் - 06.**

## கவிதைப் போட்டி இல.659



**பரிசுக்குரிய கவிதை**

### வரமாட்டோம்

உறவுகளின் உயிர் பறித்தீர்
உண்டு பிரண்ட இடம் பறித்தீர்
பேச்சுச் சுதந்திரம் பறித்தீர்
பேசாத மக்களை
எருதுகள் என்றெண்ணி நடத்தினீர்
திசை மாறிப் புலம் பெயர்ந்தோம்
ஏதிலியர் என வாழ்கின்றோம்
பாவிகள் வாழும்
எங்கள் பயங்கர பூமிக்கு
இனியொரு நாள்
வரமாட்டோம்.

*-எம்.ஷாலினி, தேவநகர்.*

### கட்டாயம்

கட்டாயப் பயிற்சிக்கு
கணவனைப் பிடித்துவிட்டு
என்னையும் ஏன்
பிடிக்கிறீர்
என் பிள்ளை
அநாதையானால்
யாருக்கும் வேணும்
சுதந்திரம்
ஐயர்லாந்தில் இருக்கும்
தலைவரின் பிள்ளைகளை
முதலில் பிடித்து
பிறகு வா
இப்போது கையை விடு.

*-எம்.ஏ.பைரூஸ், கிண்ணியா.*

### விதவைத் தாய்

நான் விதவையாகி...
இவள் அநாதையாகி
நாம் அகதிகளாகி
ஏங்கித் தெருவில் கிடக்க
என் துணையை ஏன்
பிரித்தாய்...? இறைவா!
ஏன் பிரித்தாய்...?

*-எஸ்.எச்.எம்.ரம்ஷாத், கல்முனை - 07.*

### கல் மனம்

கர்ப்பிணிப்
பெண்களின்
வேடத்தில் செய்யும்
கருணையில்லாச்
செயல்களால்...
பாவம்!
பிள்ளை பெற்ற
இவளிடம் கூட
இரக்கம் காட்ட
முடியாதுள்ளது!

*-க.கமால்தீன், ஏறாவூர் - 02.*

### ஏக்கம்!

கண்ணாக எமைக் காத்த
தந்தையை பலியெடுத்தான்
எச்சமாய் எனக்கிருக்கும்
என் தாயையும்
பலி கொடுத்தால்
அவனியில் ஆவேனோ
அநாதையாய்...!

*-எஸ்.வர்மன், வெள்ளவத்தை.*

### பரிதாபம்

நேற்றுப் பெண்ணாய்
இன்று கர்ப்பிணியாய்
நாளை தாயாயும்
என்று எண்ணியோ...

*-வை.கீதன், மட்டக்களப்பு.*

## கவிதைப் போட்டி இல.662



*எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.05.2006.*

கவிதைப் போட்டி இல.663
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772,
கொழும்பு.



### இதுதான்

தந்தையின் கொலையும் தாயின்
கதறலும்
சிதறிய தலைகளும் சிதைந்த
உடல்களும்
சின்னதின் மனதில் பெரிய வடு விடுக்கும்
பசுமரத்தாணியாய் பல யுகம் நிலைக்கும்.
தொடர் யுத்தத்தின் தொடக்கமும்
இதுதான்.

*-சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.*

### தலையெழுத்து!

எறிகணையின்
பரிசுகளோ?
கிளைமோரின்
விளைவுகளோ?
யுத்தத் தீவினையால்
கதறுவதே இந்தத்
தீவினரின்
தலையெழுத்தோ?

*-ரேணுகா றிபாய்தீன், ஏறாவூர்.*

### மனிதாபிமானம்

இனவாதத்தால்
பிணமாய்ப்போன -
என்
மன்னவனின்
இடத்தை
நிரப்பிடுமா இந்த
மனிதாபிமானம்.

*-ப.விஜய குமாரி, தலவாக்கலை.*

### அராஜகம்

தமிழ் மக்களின்
விழி துடைப்பதாய்...
வீறாப்புப் பேச்சில்
போராடும் கூட்டங்கள்
தன்னினத்தின்
விழிகுத்தி
கருவறுக்க நினைப்பதுதான்
எந்த வகை தகுமோ?

*-கேக்கே.டீன், ஏறாவூர் - 02.*

### மரண ஓலம்

உத்தரவாதத்தில்
உறுதியில்லை
இனவாதத்தினால்
இளவே
விழுகிறது.

*-காமீம் செய்னுலாப்தீன், கிண்ணியா - 05.*

## உங்கள் பக்கம்

### முரசு வெய்திக்கு பயனளிக்கும் பதில்

**04.05.2006** அன்று வெளியான தினமுரசு வாரமலரின் 'உங்கள் பக்கம்' பகுதியில் சுகாதார அதிகாரிகள் கவனமெடுப்பார்களா? என்ற தலைப்பில் வெளியான செய்தி எனது கவனத்தை ஈர்த்துள்ளது.

செங்கலடி கிராமிய வைத்தியசாலையில் வளப் பற்றாக்குறை பல நிலவுகின்ற போதிலும், இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர்.

வார இதழில் அ.லிங்கநாதன் செங்கலடி என்பவரால் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நான் மறுக்கின்றேன். பொறுப்பதிகாரியாகிய எனக்கு இக்குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக எந்தவிதமான முறைப்பாடும் பொதுமக்களிடமிருந்து இதுவரை கிடைக்கவில்லை.

பொதுமக்கள் யாராவது பாதிக்கப்பட்டிருந்தால் எனக்கு முறைப்பாடு செய்யும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

எனது மறுப்பறிக்கையை தினமுரசு வாரமலரில் பிரசுரிக்குமாறு தயவுடன் வேண்டுகின்றேன்.

*-வைத்திய அதிகாரி கே.சுகுமார், கிராமிய வைத்தியசாலை, செங்கலடி.*

## வாசகர் சாலை

### தினமுரசு...

என் உள்ளத்தில்
தினம் உதிப்பது
ஐந்தெழுத்து அதுதான்
தினமுரசு
காத்திரமான
செய்திகளை
கல்விக்கான புதிர்களை
கடிக்கும் சிந்தியா
பதில்கள்
கவிதைப் பூங்காக்கள்
தேன் சொட்டும்
தேன் கிண்ணம் -
இன்னும்
அதிசய உலகம்
போன்ற
நற்பணியாற்றும்
என் முரசு - உன்
சேவையில் யாரும்
குறை காணாத நிறை
குடமே
நீ
அனைவருக்கும் அறிவு
எனும்
அமுதூட்டி
அனைவரையும்
அரவணைத்து
காத்திடும்
என் முரசே
உன் சேவை என்றும்
தேவை
இவ்வையகம்
உள்ளவரை
வாழ்க வளமுடன்
என்று
வாழ்த்துகிறேன்
மனமார
வாழ்க உன் பணி
வளர்ந்த உன் சேவை.

*-றஸீன் றஸ்மின், மூந்தல்.*

அன்பின் முரசுக்கு,
முதல் இதழிலேயே
எங்கள் இதயங்களைக்
கொள்ளை கொண்டுவிட்டாய்
அறுநூற்று ஐம்பது என்ன....
அதையும் தாண்டி
வெற்றிநடைபோட
பல கோடி வாழ்த்துக்கள்.

*-மு.ப.நுஸ்ஹா ஷிபா, காத்தான்குடி - 05.*

### தேனிலும் இனிய தமிழ் வணக்கங்கள்!

தமிழால்
தமிழுக்கு
சேவை
புரிந்து!
தமிழால்
தமிழருக்கு
உழைத்து!
தமிழருக்காக
தமிழால்
தலை
நிமிர்ந்து
நடை போடும்
தினமுரசே!
வாழ்க,
வளர்க....!
உன்...
தமிழ்ப் பணி
தடையின்றி
தொடர்ந்திட
வாழ்த்துவதில்
வளமடைகின்றான் -
இந்த
தமிழின் மகன்....

*கா.சுபாஷ், டிக்கோயா.*

### நிகர் இல்லா முரசே

முரசே உன்னை வர்ணிக்க வார்த்தையே இல்லை. இருந்தும் உனக்கு நன்றி சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஏழு கடல் தாண்டி வாழும் எங்களுக்கு சுனாமியைப் பற்றி விபரமாக அறியத் தந்தாய். மிக்க நன்றி முரசே 660 இதழில் தேன் கிண்ணப் பகுதியில் கவிதை எழுதச் சொல்வாள் என்ற தலைப்பில் வெளியான கவிதையை எழுதிய அ.அரசரெத்தினம் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவிக்கின்றேன்.

*-ரி.என்.ராசாத்தி, லெபனான்.*

### வெற்றி நடைபோடும் முரசு

என் அன்பின் இனிய
தினமுரசே; நீ சுமந்து வந்த
செய்திகள் சூப்பர்
உன் 650வது இதழை
தொடர்ந்து
வெற்றி நடைபோடுவதற்கு
எம் மாணவர்களின்
சார்பில் வாழ்த்துகின்றோம்.

*-ஆர்.நிரோஷன், புத்தளம்.*

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# கொலைக் குற்றவாளிகளைக் கூண்டிலேற்றுங்கள்
# அல்லைப்பிட்டி மற்றும் தீவக மக்கள் கோரிக்கை




"கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக வடக்கில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களில் மிக மோசமான, இரத்தத்தை உறைய வைக்கும் படுபயங்கரப் படுகொலைகள் கடந்த 13ஆம் திகதி சனிக்கிழமை ஊர்காவற்றுறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அல்லைப்பிட்டி, புளியங்கூடல், வேலணை, வங்களாவடி ஆகிய இடங்களில் 13பேர் துடிக்கப் பதைக்கக் கொல்லப்பட்டுள்ளனர். இச் சம்பவங்கள் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்க வேண்டும்" என்று ஊர்காவற்றுதுறை வெகுஜன ஒன்றியம் விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளது. அல்லைப்பிட்டியில் நான்கு மாதம், மற்றும் நான்கு வயதுடைய இரு பச்சிளம் குழந்தைகள் உட்பட ஒன்பது பேர் சுட்டுக் கொல்லப் பட்டமை மனிதநேயம் கொண்ட எவராலும் மன்னிக்கப்பட முடியாதது. இதனால் அல்லைப்பிட்டியே அதிர்ந்து போயிருக் கிறது.

கடற்படையினரே இதனைச் செய்தார்களென்று புலிகளும், புலிகளே இதனைச் செய்தார்களென்று கடற்படையினரும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இரு தரப்புகளுமே அத்துமீறல்களில் ஈடுபட்டதைக் கடந்த காலச் சம்பவங்கள் நிரூபிக்கின்றன. கொக்கட்டிச்சோலை, மைலந்தன்னை, குமுதினிப் படகுப் படுகொலைகளின் கதாநாயகர்கள் படையினர்தான். இதனைப் போன்று காத்தான்குடி, ஏறாவூர், அரந்தலாவ, டொலர் கென்ட் பாம் படுகொலைகளைப் புரிந்தவர் கள் புலிகள்தான். அதிகப்படியான தமிழ் மக்களைக் கொன்றவர்களும் புலிகளே. எமது ஊர்காவற்றுறைத் தொகுதியில் மட்டும் முப்பதுக்கு மேற்பட்ட மாற்றுக் கருத்துக் கொண்ட இளைஞர்களைப் புலிகள் சுட்டுக் கொன்றிருக்கின்றார்கள். அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் உட்பட பெருமளவு தமிழ் தலைவர்களைக் கொன்ற வர்களும் அவர்களே. மக்களைக் கொன்று விட்டு, மற்றவர்களின் தலைகளில் பழியைப் போடும் கெட்டித்தனமும் தந்திரமும் புலிகளுக்கு உண்டு என்பதும் எமக்குத் தெரியும்.

எனவேதான், புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவிக்கும் கருத்தை எம்மால் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. புலிகளின் சித்திரவதைக்கூடப் பொறுப்பாளராகவிருந்த ஆஞ்சநேயரே இன்று இளம்பரிதியாக உருவெடுத்திருக்கிறாரென்பதும் எமக்குத் தெரியும். சித்திரவதைக்கூடத்தில் செத்தவர்களும் சித்திரவதைப்பட்டவர்களும் தமிழர்கள்தான். எனவே நிராயுதபாணிகளான மக்களாகிய எங்களால் ஒரேயொரு கோரிக்கையைத் தான் விடுக்க முடியும். மனிதத்தைச் சாகடிக்காதீர்கள். மக்களை இலக்கு வைத்துத் தாக்காதீர்கள். இந்த அழிவுகளுக்கும் அவலங்களுக்கும் மூலகாரணமான யுத்தத்தை நிறுத்த இரு தரப்புகளுமே இணைந்து செயற்பட வேண்டும். யுத்தமும் நித்தம் சாவுகளும் எமக்கு வேண்டாம்.

-இவ்வாறு அறிக்கை கூறுகிறது.

## குருதியுறைய வைக்கும் இன்னொரு கோரச் செயல்
## -ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

அரசியலுரிமைக்காக எண்ணித் துணிந்து ஏங்கிக்கொண்டிருக்கும் எமது மக்கள், இன்று உயிர் வாழும் உரிமையையும் இழந்து நிற்பதன் அடையாளம்தான், தீவக மக்கள் மீதான கோரப் படுகொலை! கொலைக் கலாசாரத்தின் கோரப் பசிக்கு இளவயதினர், முதியவர்கள் என்றில்லாமல் குழந்தைச் செல்வங்களும் இரையாகி வருவதன் இன்னொரு கொடிய நிகழ்வுதான் தீவகத்தில் நடந்தேறியிருக்கும் மனிதப் படுகொலை.

தமிழ் பேசும் மக்களின் வாழ்விடங்கள் எங்கும் தொடரும் படுகொலைகளின் வரிசையில் யாழ். தீவக மண்ணின் அல்லைப்பிட்டி,புளியங்கூடல், வேலணை ஆகிய இடங்களில் நிகழ்ந்த படுகொலைகள் எமது நெஞ்சைப் பிளந்திருக்கின்றன.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கை வருமாறு:

யாழ். தீவகம் சொல்லித் தீராத சோகங்களுக்கு முகம் கொடுத்த மண். சொல்லியும் ஆறாத வடுக்களைச் சுமந்து நின்ற மண். ஈ.பி.டி.பி. யினராகிய எங்களுக்கு வாழ்வு கொடுத்த மண்ணும் இதுதான்! நாங்கள் வாழ்வு கொடுத்த மக்களும் இங்கேதான். துயர் துடைத்தவர்கள் நாங்கள். வடுக்களைப் போக்கியவர்கள் நாங்கள். நகமும் தசையும் போல் நாளும் பொழுதும் எங்களுடன் உறவாடிக் கொண்டிருக்கும் தீவக மக்கள் குருதியில் சரிந்து கிடப்பது கண்டு துடிதுடித்து நாங்கள் துயரப்படுகின்றோம்.

மனித உயிர்களை மலிவுச் சந்தையில் வைத்து வியாபாரம் நடத்தும் சுய லாப அரசியலில் சுவை கண்டவர்களுக்கு இந்தப் படுகொலைச் சம்பவங்கள் மகிழ்ச்சியை கொடுக்கலாம்...மக்களின் உயிரிழப்புக்களை உள்ளூரிலும் சர்வதேசத்திலும் சொல்லியழுது, அதில் தங்களது உயிர்வாழ்வை தக்கவைத்து, யுத்த எண்ணங்களைப் பலப்படுத்தும் சக்திகளுக்கு இந்தப் படுகொலைகள் அரசியல் ஆதாயங்களைக் கொடுக்கலாம்...ஆனால், யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். அழிவுகளிலிருந்து மக்கள் காப்பாற்றப்பட வேண்டுமெனக் கருதி படுகொலைகளை யார் புரிந்தாலும் அவற்றை வன்மையுடன் கண்டிக்கிறோம். ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எமது மக்கள் குருதியில் சரிந்து கிடக்கும் துயரப் பொழுதிலும் கூட, வழமைபோல் படுகொலைகளுக்கான பழியை ஈ.பி.டி.பி. யினராகிய எம்மீது சுமத்தும் புலிகளின் பொய்யான கட்டுக்கதைகளும் உலாவருகின்றன. கறைபடியாத எங்கள் கரங்கள் மக்களின் குறை தீர்க்கும் கரங்களேயொழிய, மனிதப் படுகொலைகளில் வெறி தீர்க்கும் கரங்களல்ல என்பது மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் தெரிந்த உண்மை.

ஏன் என்று கேள்வி எழுப்பும் சுதந்திரத்தையும் பறிகொடுத்து விட்டு எமது மக்கள் நிற்கிறார்கள். இந்தப் படுகொலைகளை யார் புரிந்தாலும் அதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்!


பதற்றமான சூழலுக்குள் எமது தேசத்தைப் படுகொலைக் களமாகத் தொடர்ந்தும் வைத்திருக்க விரும்பும் சக்திகளின் மக்கள் விரோத செயல்களை நாம் வன்மையாகக் கண்டிகின்றோம். கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். தண்டிக்கப்படவேண்டும். அரசாங்கம் நடத்தவிருக்கும் விசாரணைக்கு மக்கள் தயக்கமின்றி முன்வந்து ஒத்துழைப்பு வழங்கவேண்டும் படுகொலை செய்யப்பட்ட மக்கள் எமது கட்சியின் நீண்ட கால உறுப்பினர்களின் உறவினர்கள்.

எமது உறுதிக்கும் உழைப்பிற்கும் உறுதிக்கு உறுதியாகப் பலம் கொடுத்து நின்ற மக்கள். இவர்களுக்கு எமது இறுதி மரியாதையைச் செலுத்துகின்றோம்.

இழப்புக்களின் வேதனையில் வதைபடும் எங்கள் தீவக உறவுகளின் துயரத்தில் நாம் பங்கெடுக்கின்றோம். துப்பாக்கிகளின் இலக்குகளாக அப்பாவி மக்களை பலியெடுப்பதை நிறுத்துங்கள். குருதியுறைய வைக்கும் மனிதப் படுகொலைகளின் இறுதிப் பலியாக தீவக மக்கள் மீதான இப்படுகொலைகள் இருக்கட்டும்.

-இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய மத்திய பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தமிழக முதல்வருடன் பேச்சுவார்த்தை


தமிழக முதல்வர் கருணாநிதி

தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றிருக்கும் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியுடன் இந்திய மத்திய அரசின் பாதுகாப்புத்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனரென்று நம்பத் தகுந்த தமிழக வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கையின் இன்றைய கொந்தளிப்பான சூழ்நிலை தொடர்பாக எதிர்வரும் முப்பதாம் திகதி டோக்கியோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இந்தியாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், கருணாநிதியுடனான சந்திப்பு மிக முக்கியமானதென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். தமிழகத்தில் தி.மு.க. தலைமையில் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றிருக்கும் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியில் காங்கிரஸ் கட்சியும் அங்கம் வகித்தாலும், அமைச்சரவையில் அங்கம் வகிக்காமல் வெளியிலிருந்தே ஆதரவு வழங்குவதென்று தமிழக காங்கிரஸ் முடிவெடுத்துள்ளது.

மத்தியில் ஆட்சியிலிருக்கும் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு, இலங்கையின் அண்மைய நிகழ்வுகள் தொடர்பாக காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவதானிகள் கருதுகின்றனர். இலங்கை ஆயுதப் படையினருக்குப் பயிற்சிகள் வழங்கவும், இராணுவ உபகரணங்கள் வழங்கவும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அண்மையில் இணக்கம் தெரிவித்திருந்தார். இலங்கையில் அரச படையினருக்கும் புலிகளுக்குமிடையிலான மோதல், முற்று முழுதான யுத்தமாக வெடிக்கக் கூடிய ஆபத்தான சூழ்நிலை எழுந்திருப்பதால் அதன் தாக்கங்கள் தமிழகத்திலும் பரவாது தடுக்க வேண்டிய தேவையேற்பட்டிருப்பதாக தமிழக அதிகாரியொருவர் தெரிவித்தார். மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் படுகொலைகளும் வன்செயல்களும் அதிகரித்திருப்பதால் மீண்டும் வடக்கிலிருந்து அகதிகளாக மக்கள் தமிழகத்துக்கு வருவதால், அகதிகளின் போர்வையில் இந்தியாவின் பந்தோபஸ்துக்கு விரோதமான சக்திகள் தமிழகத்துக்குள் நுழையாதவாறு எச்சரிக்கையாக இருக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவிததார்.

## பெற்றோல் விலை மீண்டும் அதிகரிக்குமா?

சர்வதேசச் சந்தையில் எண்ணெய் விலை ஓரளவு குறைந்துள்ளபோதிலும், இலங்கையில் விலை அதிகரிக்கக்கூடிய சாத்தியங்களே தென்படுவதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரியொருவர் கூறினார். மான்ய விலையில் பெற்றோல் வழங்குவதால் பெற்றோலியக் கூட்டுதாபனத்துக்கு வருடாந்தம் இருநூறு கோடி ரூபா நட்டமேற்படுகிறது. இதனைச் சமாளிப்பதற்கு மேலதிக நிதியுதவியை வழங்குமாறு திறைசேரியைக் கோரியுள்ளோம். ஆனால், பெரும்பாலும் திறைசேரி கையை விரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே மாற்று வழிகள் கையாளப்பட வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

## அவுஸ்திரேலியாவிலிருந்து சமாதானக் குழு

அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழ் கல்விமான்களின் குழுவொன்று அடுத்த மாதம் இலங்கை வரத் திட்டமிட்டுள்ளது. இலங்கையின் சமாதான செயலக உறுப்பினர்களையும் புலிகளின் சமாதான செயலக அங்கத்தவர்களையும் தனித்தனியே கலந்துபேசி, நிலைமைகளை ஆராய்ந்து உதவுவதற்காகவே இக் குழு இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மெல்போர்ன் நகரில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை சமாதானச் சபையின் அங்கத்தவர்களே இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மலையகத் தோட்டங்களில் மரங்களை வெட்டி இலாபமீட்டும் கம்பனிகள்

"மலையகப் பெருந்தோட்டங்களில் மரங்களை வெட்டி விற்பதில் தோட்டக் கம்பனிகளும், நிர்வாகங்களும் அதிக சிரத்தை காட்டி வருவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. மரங்கள் வெட்டுவதை நிறுத்துமாறு பல தடவைகள் இ.தொ.கா. கம்பனிகளைக் கேட்டுள்ளது. ஆனால் இது வரையிலும் அதனைச் செவிமடுத்ததாகத் தெரியவில்லை" என்று இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்."

பல வருடங்கள் வளர்த்துப் பாதுகாக்கப் பட்ட மரங்களை குத்தகைக்காரர்களுடன் பேரம் பேசி விற்று கம்பனிக்காரர்களும், நிர்வாகங்களும் அதில் கிட்டும் இலாபத்தில் சுகபோகங்களை அனுபவித்து வருகிறார்கள்.

கடந்த காலங்களில் பல ஆயிரக்கணக்கான மரங்கள் கம்பனியினால் விற்கப்பட்ட போதிலும் தொழிலாளர்களுக்கு இதில் எவ்வித நன்மையும் கிட்டவில்லை. சட்ட விரோதமாக மரங்களை வெட்டி இலாபம் ஈட்டிக் கொள்ளும் கம்பனி களிலிருந்து அந்த இலாபத்தில் 50 சதவீதம் தோட்டத் தொழிலாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

## புலிகளின் கடல் பயணம் பற்றி ஜப்பானியக் கூட்டத்தில் ஆராயப்படும்

ஜப்பானில் நடைபெறவிருக்கும் இணைத்தலைமை நாடுகளின் மாநாட்டில் இலங்கைப் படையினரின் டோராப் படகுகள் மீது புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல், புலிகளின் சட்டவிரோத கடல் பயணம் ஆகியவை பற்றி ஆராயப்பட விருப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடல் வலய நடவடிக்கைகளைக் காத்திரமாக முன்னெடுப்பது பற்றியும் ஆராயப்படுமெனத் தெரியவருகிறது. சர்வதேச சட்டத்தின்படி கடலில் உரிமை கொண்டாடும் பாத்தியதை சம்பந்தப்பட்ட நாடுகளுக்கே இருக்கின்றது. எந்தவொரு ஆயுதக்குழுவும் அத்துமீறியப் பயணங்களையும் அடாவடித்தன நடவடிக்கைகளையும் இறைமையுள்ள நாடொன்றின் கடல் வலயத்தில் மேற்கொள்ள முடியாது என்று இலங்கை சமாதான செயலகத்தின் தலைவரான கலாநிதி பாலித கொஹனே தெரிவித்திருக்கிறார். அத்துடன் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப் பட்ட ஒப்பந்தப்படிகூட புலிகள் கடலில் உரிமை கோர முடியாது. புலிகளின் கடற் பயணங்கள் சட்ட விரோதமானவை யென்று இலங்கை யுத்த நிறுத்தக் கண் காணிப்புக் குழுவும் அறிவித்திருக்கிறது என் றும் பாலித கொஹனே சொன்னார். கடற் புலிகள் டோரா படகுகள் மீது நடத்திய தற்கொலைத் தாக்குதல்கள் போன்ற சம்பவங்கள் இனியும் நடைபெற அனுமதிக்கக் கூடாதென்று இலங்கை, இணைத்தலைமை நாடுகளைக் கேட்டுள்ளது. இலங்கையின் கடல் வலயத்திலும் சர்வதேச கடல் வலயத்திலும் புலிகளின் நடமாட்டத்தை அறவே இல்லாதொழிக்கும் நடவடிக்கைப் பற்றி ஆராயவே இந்தியா அழைக்கப் பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

## அந்தப் பயங்கர அனுபவத்தை விளக்குகிறார் கண்காணிப்புப் பிரதிநிதி

வெற்றிலைக்கேணிக் கடலுக்கு அப்பால் 710 சிப்பாய்களை ஏற்றிச்சென்ற 'பேர்ள் குறூஸ்' கப்பலைக் குறிவைத்துப் புலிகளின் தற்கொலைப் படகுகள் நடத்திய தாக்குதல் பற்றி, அச் சம்பவத்தில் உயிர் தப்பிய கண்காணிப்புக் குழு உறுப்பினர் விலாவாரியாக விளக் கினார். கடந்த 16ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கூட்டத்திலேயே இந்த விளக்கத்தை அவர் அளித்தார். வடக்கு - கிழக்குக் கடலில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடு படும் ஒன்பது வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இங்கு தமது அனுபவங்களை விளக்கினர்.

'பேர்ள் குறூஸ்' கப்பலுக்குப் பாதுகாப்பாகச் சென்ற டோரா படகுகளிலும் கப்பலிலும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கொடி ஏற்றப்பட்டிருந்ததாகவும் அவர் கூறினார். சுமார் பதினைந்து படகுகள் கப்பலைச் சுற்றிவளைத்துத் தாக்க முற்பட்டதாகவும் தான் வானொலிக் கருவியைப் பயன்படுத்தி கப்பலை நெருங்க வேண்டாமென்று எச்சரித்ததாகவும் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி சொன்னார். இதனையடுத்தே காவலுக்கு வந்த இரு டோரா படகுகளும் தாக்கத் தொடங்கியதாகவும் புலிகளின் படகுகள் வெடித்துச் சிதறுவதையும் டோரா படகொன்று மூழ்குவதையும் தான் கண்டதாகவும் அவர் சொன்னார். தன் வாழ்நாளில் மறக்க முடியாத பயங்கர அனுபவமென இதனை வர்ணித்த அவர், போதிய பாதுகாப்பு உத்தரவாதமின்றி கடலில் கண்காணிப்பு வேலைகளைச் செய்ய முடியாதென்றும் குறிப்பிட்டார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## பொறுப்பை எவரும் தட்டிக் கழிக்க முடியாது

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

**இலங்கை** தற்போது மோசமான போர்ச் சூழலுக்குள் நுழைந்து விட்டதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இருதரப்பும் கொண்டிருந்த நம்பிக்கையீனங்கள் வலுவடைந்து காணப்படுகிறது. இந்த இரு தரப்பு மோதல்களில் பொதுமக்கள் பலியாகிப் போய்க் கொண்டிருப்பது அதிகரித்துவருகிறது. அப்பாவி மக்களைத் தமது கவசமாகவும் இலக்காகவும் கொண்டு வகுக்கப்பட்டே புதிய வடிவிலான யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

யுத்தம் என்று வரும்போது அரசும் புலிகளும் எதிர் எதிர் முனைகளில் நின்று பாரிய தாக்குதல்களை நடத்தித்தான் ஆரம்பிப்பார்கள் என்ற எண்ணமோ அல்லது உத்தியோகபூர்வமான யுத்தம் பிரகடனம் செய்யப்பட்டு பின்னரே யுத்தம் நடைபெறும் என்ற எண்ணமோ ஆபத்தாகவே முடியும். தற்போது நடந்து கொண்டிருப்பது பிரகடனப்படுத்தப்படாத போர்தான். தம்மைப் பாதுகாத்துக் கொள்ள உரிய ஏற்பாடுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தையும் எச்சரிக்கையையுமே பொதுமக்கள் மீதான படுகொலைகளும், வன்முறைகளும் எடுத்துக் காட்டுகின்றன.

போர் நிறுத்த ஒப்பந்தம் என்ற மாயை இருந்து கொண்டிருக்கும்போதே யுத்தம் நடந்து கொண்டிருக்கும் என்று புலிகள் கூறுவதற்கும், படையினர் மீதும், மக்கள் மீதும் தொடர்ந்து புலிகள் தாக்குதல் நடத்தினால் தேசிய பாதுகாப்புக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று அரசு கூறுவதற்கும் பெரிய இடைவெளி இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் சமரசப் பேச்சுவார்த்தை இடம் பெறுவதற்கான சாத்தியப்பாடு வெகுதொலைவுக்குப் போய்விட்டது என்பதைச் சாதாரண ஒரு பிரஜை கூட புரிந்துகொள்ள முடியும்.

அரசாங்கத் தொழிலாளர்கள் முதல் அன்றாடத் தொழிலாளர்கள் வரை தமது இயங்கு சக்தி முடக்கப்பட்டுள்ளனர். அதேபோல் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுக்கிடக்கிறது. இதற்கு சமாந்தரமாக இடப்பெயர்வும், புலம் பெயர்வும் முன்னரைப் போல அதிகரித்து வருகிறது. பொதுமக்கள் தமது பாதுகாப்புக்கான உத்தரவாதம் இல்லாத நிலையும், எந்த வேளையிலும் ஒரு கொலையாளி தங்களை நோக்கி, தான் ஏந்தியிருக்கும் துப்பாக்கியை நீட்டக் கூடும் என்ற நிச்சயமற்ற மோசமான நிலையும் தோன்றியுள்ளது.

இரு தரப்பும் தம் தரப்புத் தவறுகளுக்கு நியாயம் தேடுவதில் காட்டுகின்ற அக்கறையில் ஒரு பகுதி அக்கறையைக் கூட மக்களின் இயல்பு வாழ்க்கை குறித்தும், மக்களின் பாதுகாப்புக் குறித்தும் காட்டுவதாகயில்லை. மக்களின் மரணத்தைக் காட்டி அரசியல் ஆதாயம் தேடுவதன் தூரநோக்கு ஆயத்தமே மக்களின் பெயரால் புரியப்படுகின்ற யுத்தமாகும். வன்னியில் இருக்கும் மக்களே பசி பட்டினியாலும், இருப்பிடமற்று இன்னொரு இடப்பெயர்வுக்கு ஆயத்தமாக வாழ்ந்து கொண்டிருக்கையில் மேலும் மேலும் மக்களை வன்னிக்குக் கட்டாயமாக இடம்பெயரும்படி கூறுவது மக்கள் மீதான அக்கறை சார்ந்த விடயமல்ல. அதேபோல், மக்கள் மீதான படுகொலைகள், மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் அச்சம், மக்கள் மீதான கட்டாய யுத்தத் திணிப்பு என்பவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் வழிமுறையெதையும் அரசு இதுவரை தெரிவித்ததாகவும் அறிய முடியவில்லை. மக்கள் விரோத சக்திகளையும், சமாதானத்தின் எதிரிகளையும் கட்டுப்படுத்த படைத்தரப்பு முயற்சி கொள்ளும் அதேவேளை, சாதாரண மக்களைப் பாதுகாப்பதும் தம் மீதான பாரிய பொறுப்பு என்பதையும் உணர்ந்து செயற்படுதல் அவசியமாகும். மக்கள் மீதான படுகொலைகளுக்கான குற்றச்சாட்டுகள் புலிகள் மீதோ அல்லது படையினர் மீதோ சுமத்தப்பட்டாலும், பொதுவாக மக்கள் மீதான படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும். மக்களை கொலை செய்வதனூடாக எந்தவொரு தரப்பும் தம் இலக்கை அடையமுடியாதென்பதை புரிந்துகொள்ள வேண்டும். தவிரவும் இவ்வாறான அப்பாவி மக்கள் மீது புரியப்படுகின்ற படுகொலைகளானது சமாதானத்துக்கோ, கௌரவமான வாழ்வை ஏற்படுத்துவதற்கோ ஒரு போதும் உதவமாட்டாது என்பதை எல்லாத் தரப்பும் வலிந்து உணர்தல் அவசியமாகும். எந்த நியாயங்களுக்காகவும் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதை ஏற்க முடியாது.

இந்தநிலை நீடிக்குமாயின் அது நாட்டில் பாரதூரமான பின்விளைவுகளைத் தோற்றுவிக்கும். இவ்வாறான படுகொலைகள் புலிகளுக்குத் தேவையான ஒன்றாக இருப்பதால் அவை நிறுத்தப்படவேண்டுமென்ற கோரிக்கையை புலிகளிடம் முன்வைப்பது நேர விரயமாகும். ஆனால் அரசுக்கு இக் கோரிக்கையை செயல் வடிவப்படுத்துவது கட்டாயக் கடமையாகும். அது சவால் மிக்க பணியுமாகும். அரசு சவால்களை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது என்பதை நாட்டு மக்களும் சர்வதேச சமூகமும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தொடரும் படுகொலைகளும் தொடராத சமாதானமும்

நரன்

"**ஒரு** வருடத்தில் மோதல்களில் ஐநூறு பேருக்கு மேல் கொல்லப் பட்டால், அதனை முற்றுமுழுதான யுத்தமென்று கூறமுடியும். அரச படையினருக்கும் புலிகளுக்கு மிடையிலான மோதல்களில் இதுவரை முந்நூறுக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளதால் நிலைமை முற்றுமுழுதான யுத்தக் கட்டத்தை நெருங்கி விட்டதென்று கூறமுடியும்."

*-யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்ரிக்சன்.*

"யுத்த நிறுத்த ஒப்பந்தம் வெறும் காகிதத்தில் மட்டுமே உள்ளது. செயலளவில் இல்லை. வெறும் அறுபது பேரினால் (கண்காணிப்புக் குழு அங்கத்தவர்கள்) மட்டும் யுத்தத்தைத் தவிர்த்துவிட முடியாது."

*-கண்காணிப்புக் குழுவின் பதில் பேச்சாளர் ரொபேர்ட் நில்சன்.*

"நான் 12ஆவது தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்திருக்கிறேன். எப்போதையும் விட இப்போது நிலைமை மிகவும் மோசமடைந்திருக்கிறது. இலங்கையின் நிலைமை பற்றி ஆராய எதிர்வரும் முப்பதாம் திகதி கூட்டப்படும் இணைத்தலைமை மாநாட்டுக்கு இந்தியாவும் அழைக்கப்படும்"

*-ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாசி.*

"இலங்கையின் இறைமையையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்குச் சகல உதவிகளையும் செய்வோம். இலங்கைப் படையினருக்குப் பயிற்சியும் உபகரணங்களும் வழங்கப்படும்."

*-இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்.*

"எமது பொறுமையைப் பலவீனமென்று யாரும் கருதக் கூடாது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலிலுள்ளது. புலிகள் தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்தி வருகிறார்கள்.

எமது பொறுமையைத் தொடர்ந்தும் சோதிக்கக் கூடாது. இந்த நிலை தொடருமானால் எமது நாட்டின் இறைமையையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க வேண்டிய நிலை ஏற்படும்."

*-ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.*

"சமபலமும் சம அந்தஸ்தும் உடையவர்களென்ற வகையி லேயே யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளோம். எம்மை ஆயுதக் குழுவென்று அழைப்பது தவறானது. நாம் இனிப் பேச்சில் மட்டுமல்ல, செயலிலும் இறங்குவோம்."

"கடற்படைக் கப்பல்களில் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் பயணிக்கக் கூடாது." அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு நாம் பொறுப்பல்ல.

*-தமிழ்ச்செல்வன்.*

"கடற்பயணங்களை மேற்கொள்ளப் புலிகளுக்கு உரிமை கிடையாது. அதற்கான விதிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இல்லை."

"கடற்படையினரோடு பயணம் செய்யக் கூடாதென்று எமக்கு எச்சரிக்கை விடுப்பது பாரதூரமானதாகும். புலிகள் வீணாக எமது செயற்பாடுகளில் தலையிடுகின்றனர்."

*-யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் ஹெலன் ஒலஸ்ரோட்டியர்.*

"விரைவில் அமையப் போகின்ற தமிழீழத்தில் மலையக மக்களுக்கும் தென்னிலங்கை வாழ் தமிழ் மக்களுக்கும் பாதுகாப்பான இடம் தருவோம்."

*-தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஈழவேந்தன் எம்.பி.*

"மக்களின் உயிரிழப்புகளை உள்ளூரிலும் சர்வதேசத்திலும் சொல்லியழுது, அதில் தங்களது உயிர் வாழ்வைத் தக்க வைத்து, யுத்த எண்ணங்களைப் பலப்படுத்தும் சக்திகளுக்கு படுகொலைகள், அரசியல் ஆதாயங்களைக் கொடுக்கலாம். யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். அழிவுகளிலிருந்து மக்கள் காப்பாற்றப்பட வேண்டும். படுகொலைகளை யார் புரிந்தாலும் அவற்றை நாம் வன்மையுடன் கண்டிக்கிறோம்."

*-ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி.*

இலங்கையில் இன்று அரச படைகளுக்கும் புலிகளுக்கு மிடையிலான முறுகல் நிலை உச்சம்பெற்று, யுத்தம் முகிழ்த்து நிற்கும் காலகட்டத்தில் பிரதான அரசியல் கட்சிகளும் முக்கிய தலைவர்களும் கூறிய கருத்துக்களே, மேலே சுருக்கித் தரப்பட்டுள்ளன. அதாவது, நான்காவது ஈழயுத்தத்துக்கான அதிர் வேட்டுக்கள் ஆரம்பமாகிவிட்டன என்பதையே இந்த அறிக்கைகள் தெளிவுபடுத்துகின்றன. கொஞ்சம் மிகைப்படுத்திக் கூறுவதானால், சமாதானத்துக்காக யுத்தம் நடத்தித் தோற்றுப் போனவர்களும் யுத்தத்துக்காகவே சமாதானம் பேசி இன்னமும் தோற்காத வர்கள் என்று மார்தட்டிக் கொள்பவர்களும் சந்திக்கு வந்து நிற்கிறார்கள். யுத்தம் சூடானில் நடந்தாலென்ன, சோமாலியாவில் நடந்தாலென்ன, ஈராக்கில் நடந்தாலென்ன, இலங்கையின் வடக்கு, கிழக்கில் நடந்தாலென்ன யுத்தத்தில் சம்பந்தப்படும் தரப்புகளை விட மிக மோசமாகப் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி மக்களே.

இந்த வகையில் இலங்கையில், குறிப்பாக வடக்கு - கிழக்கில் இடம் பெற்று வரும் மோதல்களிலும் இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்களிலும் அதிகம் பலியானவர்கள் அப்பாவித் தமிழ் மக்களே! ரணிலும், பிரபாகரனும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டபோது, வழமைபோல் இலங்கை மக்கள் குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் குதூகலித்தார்கள். சமாதானக் கீற்றுகள் தென்படுவதாகவும் நம்பிக் கொண்டார்கள். 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அரசும் - புலிகளும் யுத்தத்தை நிறுத்திக் கொள்வதாக ஒப்பந்தம் செய்து கொண்டன. ஆனால் அந்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஆறு மாதங்கள் முடிவதற்கு முன்னரேயே நெடுந்தீவுக்கும் நாச்சிக்குடாவுக்குமிடையிலான கடற்பரப்பில் புலிகளின் படகொன்று வெடித்துச் சிதறியது. புலிகளின் படகொன்று சந்தேகத்துக்கிடமாக நடமாடுவதாக கடற்படையினர் கொடுத்த தகவலையடுத்து, விரைந்த கண்காணிப்புக் குழுவினர் பரிசோதனையிடுவதற்காகப் படகில் ஏற முயன்றபோதே படகிலிருந்த புலிகள் அதனை வெடித்துச் சிதறவைத்தனர். கண்காணிப்புக் குழு உறுப்பினரொருவர் கடலில் குதித்துத் தப்பினரென்பதும் பழைய சங்கதி. புலிகள் ஏன் அப் படகை வெடிக்க வைத்தார்களென்பதற்கான காரணத்துக்கு ஆதாரங்கள் தேவையில்லை. ஒப்பந்தம் கைச்சாத்தாகிய அந்த வருடம் முடிவதற்குள்ளேயே புலிகளுக்கு எதிரான கருத்துகளைக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் முக்கியஸ்தர் ரொபார்ட் சுபத்திரன் உட்பட மாற்றுக் கருத்துக்கள் கொண்ட ஐந்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக ஆங்காங்கேயும் அவ்வப்போதும் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள், யுத்தநிறுத்த காலத்திலேயே சுட்டுக் கொல்லப் பட்டனர். 2005ஆம் ஆண்டு முடிவதற்குள்ளேயே புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.பி.டி.பி. ஆகிய இயக்கங்களைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். புலிகளுக்கெதிராகச் சர்வதேச மட்டத்தில் பிரசாரங்களை முன்னெடுத்துச் சென்ற முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் வைத்து கடந்த வருடம் ஆகஸ்ட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார். தாம் இந்தக் கொலையைப் புரியவில்லையென்று புலிகள் அறிக்கைவிட்ட போதிலும் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் புலிகள் மீது கண்டனம் தெரிவித்திருந்தன. இப் படுகொலையின் எதிரொலியாக ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது பயணத் தடையையும் விதித்தது.

கடந்த நவம்பர் மாத ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரேயே வன்செயல்களுக்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் யுத்தம் வெடிக்குமென்ற பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்ட புலிகள், வடக்கு - கிழக்கு மக்களை வாக்களிக்காமல் தடுத்ததன் மூலம் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

நவம்பர் 17ஆம் திகதி மஹிந்த ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். டிசம்பர் 17ஆம் திகதிக்கு முன்னதாகவே கடற்படையின் மீதான கிளைமோர் தாக்குதல்களைப் புலிகள் ஆரம்பித்தனர். கடந்த வருட டிசம்பர் பிற்பகுதியிலிருந்து இவ்வருட ஜனவரி மாத முற்பகுதியிலான ஆறு வார காலப்பகுதிக்குள் கிளைமோர் தாக்குதல்களால் பல டசின் கணக்கான படையினர் கொல்லப்பட்டனர். இத் தாக்குதல்களைத் தாங்கள் நடத்தவில்லையென்றும் தமிழ் மக்களே பொங்கி எழுந்து நடத்தினார்களென்றும் புலிகள் கூறினார்கள். ஆனால், மக்களுக்குத் தாங்கள் ஒரு நாள், இரு நாட்கள் ஆயுதப் பயிற்சியளித்திருந்ததைப் புலிகள் பகிரங்கப் படுத்தினார்கள். அப்படியானால், படையினர் மீதான தாக்குதல் களுக்கு மக்களைப் புலிகள் துணைப் படையினராகப் பயன் படுத்தினார்களென்பதே உண்மை.

எவ்வித தாக்குதல் நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் ஒதுங்கியிருந்த படையினரைச் சீண்டிச் சீற வைத்தவர்கள் யார்? ஏன் இதனைப் புலிகள் செய்தார்கள்? சும்மாயிருந்த படையினர், தற்காப்பு நிலைக்குச் சென்று தாக்குதலும் பதில் தாக்குதலும் நடத்தும் நிலைக்கு உந்தப்பட்டார்களென்ற உண்மையைப் புலிகளும் தமிழ் மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். மயான அமைதி, மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களாக மாறி, முற்றுமுழுதான யுத்தமாக மாறும் அபாய நிலைக்குப் பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளது. அக்கரைப்பற்று பள்ளிவாசலுக்குள் தொழுது கொண்டிருந்த நான்கு முஸ்லிம்கள் படுகொலை. திருமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை, நான்கு சிங்கள மரக்கறி வியாபாரிகள் படுகொலை, இதன் எதிரொலியாக 13 தமிழர்கள் படுகொலை, திருமலையில் இனக்கலவரத்தை ஏற்படுத்தும் முயற்சியாகக் கோமரங்கடவலயில் ஆறு சிங்கள இளைஞர்கள் வெட்டிக் கொலை, புத்தூர், வாதரவத்தையில் ஆறு தமிழ் இளைஞர்கள் படுகொலை, நெல்லியடியில் ஏழு தமிழ் இளைஞர்கள் படுகொலை, அவிசாவளையிலும் முல்லேரியாவிலும் ஆறு தலையற்ற முண்டங்கள் கண்டுபிடிப்பு, மந்துவிலில் எட்டுத் தமிழ் இளைஞர்களைக் காணவில்லையென வெளிவந்த செய்தி, அல்லைப்பிட்டியில் ஒன்பது தமிழர்கள் படுகொலை - இப்படி ஒரு கொலைச் சக்கரம் சுழன்று கொண்டேயிருக்கிறது. இந்த அனைத்துப் படுகொலைகளையும் 'இனந்தெரியாதவர்கள்' என்று கூறப்பட்ட வர்களே செய்துள்ளனரென்று கூறப்படுகிறது. புலிகள் படையினர் மீதும் படையினர் புலிகள் மீதும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டிக் கொள்கின்றனர். இவற்றை யார் செய்தாலும் கொலை செய்யப்பட்டவர்கள் யாராகவிருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அப்பாவிப் பொதுமக்கள்தான்.

அப்பாவிகளைக் கொலை செய்வதில் படையினரும் புலிகளும் சம்பவமும் சம அந்தஸ்தும் உடையவர்கள் என்பதையே கடந்த கால வரலாற்றுச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. படையினர்



மக்கள் மீது காட்டிய சாமர்த்தியத்துக்கு எடுத்துக்காட்டாக கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள், மைலந்தன்னைப் படுகொலைகள், குமுதினிப் படகுப் படுகொலைகள் என்று பட்டியல்களை நீட்டிக் கொண்டே போகலாம். வீரவேங்கைகளின் (புலிகள்) விளையாட்டைக் காட்டுவதற்கு கென்ற்-டொலர் பாம் படுகொலைகள், ஹபரனை பஸ் படுகொலைகள், அரந்தலாவைப் படுகொலைகள், ஏறாவூர், காத்தான்குடிப் பள்ளிவாசல்கள் படுகொலைகள் என்று பட்டியல்களை நீட்டிக் கொண்டே போகலாம்.

புலிகள் கிராமத்துக்குள் புகுந்து, படையினரைத் தாக்கி விட்டுத் தப்பியோட, வீரம் விளைந்து வந்த படைவீரர்கள், அப்பாவித் தமிழர்களை வெட்டியும் சுட்டும் கொன்றனர். விளைவு இராணுவ, அரசியல் ஆதாயம் புலிகளுக்கே கிட்டியது. இதைப் போன்றுதான் வீரம் செறிந்த வேங்கைகள் அப்பாவிச் சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் வெட்டியும் சுட்டும் கொல்லப்பயன் பெற்றவர்கள் சிங்கள, முஸ்லிம் கடும் போக்குவாதிகள்தான். உண்மைகள் கசக்கலாம் ஆனால் சொல்லித் தானாக வேண்டும்.

திம்புப் பேச்சுவார்த்தையைத் தவிர அனைத்துப் பேச்சுவார்த் தைகளையும் முறித்தவர்கள் புலிகள்தான். ரணிலின் அரசோடு ஒப்பந்தம் செய்து கொண்ட புலிகள், அவர் ஆட்சியிலிருந்த போதே அர்த்தமற்ற கோரிக்கைகளை முன்வைத்துக் கொண்டு பேச்சுவார்த்தை மேசையை விட்டு ஓடினார்கள். தொடர்ந்தும் இதனையே செய்து வருகிறார்கள். இம்முறையும் படையினர் மீது தாக்குதல்களை ஆரம்பித்து, இன்றைய மோசமான நிலைக்கு இட்டுச் சென்றவர்களும் புலிகளே சிங்களப் படையினரை விட்டு தமிழர்களையும் தமிழ்த் தலைவர்களையும் அதிகம் கொன்றவர் களும் புலிகள் தான்.

தமிழர்களோ முஸ்லிம்களோ கொல்லப்படும்போது இந்த இன மக்களுக்கு ஏற்படும் அதே வேதனை உணர்வுதான், சிங்களவர்கள் கொல்லப்படும்போது சிங்களவர்களுக்கும் ஏற்படும். எனவே யுத்தம் தொடரும் வரை படுகொலைகள் என்ற நச்சு வட்டம் சுழன்று கொண்டே இருக்கும்.

தமிழ் மக்கள் தமிழீழம் கேட்கவில்லை. கௌரவமான, நீடித்து நிற்கக்கூடிய சமாதானத் தீர்வையே கேட்கிறார்கள். சர்வதேசம் தலை நிமிருகிறது. இந்தியாவும் இலங்கைக் கடல் எல்லைக்கு வருகிறது. அப்பாவித் தமிழ் மக்களும் படுகொலைக் கலாசாரத் துக்கு ஆட்பட்டு அலுத்துப் போய் நிற்கிறார்கள். புலிகளே! இனியும் ஆப்பை இழுத்தால் புலி வால்கள்தான் சிக்கிக் கொள்ளும். நான்காவது ஈழயுத்தம் நிச்சயமாக உங்களுக்கு 'வோட்டர்லூ'வாக அமையப் போகிறது. ■

---

## ஊரிலிருந்து....



மூதூரில் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் விமானக் குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்ட போது ஏற்பட்ட உயிரிழப்பு மற்றும் சேத விபரங்கள் குறித்து ஒன்றிற்கு பத்தாகப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் மூதூரை விட வெற்றிலைக்கேணி கடற்சமரின் பின் வன்னியில் அதைவிட 3,4 மடங்கு அதிகமாக விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதைப்பற்றி மூச்சுக் கூட இல்லையே? ஏன் தெரியுமோ? ஓரளவு விடை தெரிந்தாலும் மாஸ்டரையே பதில் சொல்லுமாறு கூறினேன்.

குண்டு வீச்சு நடந்தது கண்காணிப்பு குழுவையே போக அனுமதிக்காத புலிகளின்ட உயர் பாதுகாப்பு வலயம். வீசின குண்டுகளும் பலம்மிக்க அரண்களையும் தகர்க்கக்கூடிய நவீனரகக் குண்டுகள்.

விஷயமுள்ள அரசு வாயால பேசாமல் செயலில காட்டியிருக்கு விஷயமில்லாதவை கடலிலையும் வானத்திலயும் கோட்டை விட்டுட்டு வாயால வீரம் பேசினம்.

தமிழ்ச்சனம் சொல்ல நினைச் சதைத்தான் மாஸ்டர் சொல்லியிருக்கிறார்.

# இலங்கைக்கு உதவ இந்தியா தயார்

அலசுவது

**- மதியூகி -**




**இலங்கையில்** போர் நிறுத்த ஒப்பந்தம் காலாவதியாகி விட்டதான நிலையில் இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகளாக இலங்கைக்கு வருகை தந்திருந்த ஜப்பானின் விஷேட பிரதிநிதி யசூசி அகாசி பெரும் ஏமாற்றத்தோடு நாடு திரும்பியுள்ளார்.

அவர் நாடு திரும்பும்போது தெரிவித்த கருத்துக்கள், இலங்கை விவகாரத்தில் இணைத்தலைமை நாடுகளின் இயலாமையை அல்லது தவறை சுட்டிக்காட்டும் விதமாக அமைந்திருந்தது. அது மட்டுமல்லாமல் இம்மாதம் 30ஆம் திகதி ஜப்பானில் நடைபெறவிருக்கும் இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் இந்தியாவை ஒரு ஆலோசகராக அல்லது பார்வையாளராக விரும்பினால் பங்காளராக இருக்க வேண்டியதன் அவசியத்தை இந்தியாவிற்கு வலியுறுத்துவோம் என்றும் கூறியிருந்தார்.

ஆகவே இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தை இந்தியாவின் தலையீடு இல்லாமலோ பங்களிப்பு இல்லாமலோ தீர்க்க முடியாது என்ற யதார்த்தம் முன்னெப்போதையும் விட உணரப்பட்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. இந்தப் பொறுப்பை இந்தியா எவ்வாறு நிறைவேற்றப் போகிறது என்பதே அடுத்த கேள்வியாக உள்ளது.

இலங்கை அரசோடு இந்தியா நெருக்கமான உறவைக் கொண்டிருக்கின்றபோதும் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று இந்தியா தடைசெய்துள்ள நிலையில், இவ்விருதரப்பையும் சம அந்தஸ்தோடு



பார்க்க முடியாத ஒரு நிலையும், பயங்கரவாதிகளாகக் கருதும் புலிகளைச் சமநிலையில் அழைத்துப் பேசுவதிலும் இந்தியாவுக்குச் சங்கடங்கள் இருக்கின்றன. அதற்கு நியாயமான காரணங்களும் உண்டு. அதாவது இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தியை புலிகள் தற்கொலை குண்டுதாரி மூலம் படுகொலை செய்தது, அது தவிர இந்தியாவில் இருக்கும் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு, ஆயுதப் பரிமாற்றங்கள் செய்வது, இந்து சமுத்திர கடற் பிராந்தியத்தில் ஆயுதக்கடத்தல், தாக்குதல்கள் நடத்துவது இவை தவிர இந்தியாவின் ஏற்பாட்டில் இலங்கையின் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்ட பதின்மூன்றாவது சட்டமும் மாகாண சபை நிர்வாகமும், மக்களின் தெரிவில் ஜனநாயகச் செயற்பாடுகளுக்கு விரோதமாக புலிகள் நடந்து கொள்வதும் இந்தியாவின் விருப்பங்களை தொடர்ந்து உதாசீனப்படுத்தி வருவதும், புலிகள் குறித்து இந்தியாவுக்குக் கவலையையும் எரிச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் இந்த சங்கடத்தைப் புலிகள் நிவர்த்திக்கும் விதமாக பிராந்தியத்தின் அமைதிக்காகவோ ஜனநாயக செயற்பாடுகளுக்காகவோ ஆக்கபூர்வமான முன் முயற்சிகளையும் எடுக்காமல் வெறுமனே இந்தியா தம்மை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதை ஒரு நியாயமான செயற்பாடாக இந்தியா எடுத்தக் கொள்ளவில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை புலிகளையும், தமிழ் மக்களையும் சமாந்திரமாகப் பார்க்கவில்லை. ஆகையால் தான் முற்றுமுழுதான ஒரு முடிவுக்கு இந்தியா போகாமல் இலங்கை வாழ் அத்தனை சிறுபான்மையினருக்கும் குறிப்பாக தமிழர்களுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்ற தமது வலியுறுத்தலைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதோடு, அதற்கான தனது ஆதரவையும் வெளிக்காட்டி வருகிறது.

இதற்கு அண்மைய உதாரணம் திருமலை சந்தைப்பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து நடந்த தமிழ் மக்கள் மீதான தாக்குதல்கள் வன்முறையின் போதும் விமானப்படையினர் மூதூர் பகுதியில் நடத்திய தாக்குதலின்போதும் உடனடியாக இலங்கை அரசோடு தொடர்பு கொண்டு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதும், அவ்வாறான பொதுமக்கள் மீதான தாக்குல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டதாகும். இந்த சம்பவங்களின் போது இந்தியாவின் நிலைப்பாடு மிகத் தெளிவாக அதாவது என்னதான் இந்தியா தூரத்துப் பார்வையாளராக இருந்து கொண்ட போதும் கூட, இலங்கை தமிழ் மக்கள் மீதான தனது அக்கறையை குறைத்துக் கொள்ளவில்லை என்பதாகும்.

இணைத்தலைமை நாடுகளின் அழைப்பு, இலங்கையில் தோன்றிவரும் யுத்தச்சூழல் என்பன இந்தியாவை இன்னொரு நகர்வை நோக்கி நிச்சயம் தள்ளிவிடும் என்றே எதிர்பார்ப்புகள் அதிகரித்து வருகின்றன. அதேநேரம் இலங்கை அரசு இந்தியாவிடம் இரண்டு விதமான உதவியை நீண்டகாலமாக கோரிவருகிறது. அவையாவன புலிகளை அரசியல் ரீதியாக பேச்சுவார்த்தைக்குக் கட்டாயப்படுத்தும் அழுத்தத்தை வழங்குவது, அடுத்தது நிலைமை மோசமடைந்தால் யுத்தத்தின் போது போர் தளபாடம், பயிற்சி, தொடர்பான விடயங்களில் உதவுதல் என்பனவாகும். இதில் இந்தியாவுக்கு சில தயக்கங்கள் இதுவரை காலமும் இருந்து வந்தது. அதற்குக் காரணம், இலங்கை அரசுக்கு அந்த உதவிகளை வழங்கினால் அது தமிழ் மக்கள் மத்தியில் தவறான எண்ணத்தை ஏற்படுத்திவிடும். அதாவது தமிழ் மக்களுக்கு எதிரான போரை நடத்துவதற்கு இந்தியா உதவியுள்ளது என்ற சங்கடம் இந்தியாவுக்கு உள்ளது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் மக்களின் பெயராலும், மக்களுக்குள்ளிருந்து கொண்டும் தாக்குதலை நடத்திவிட்டு மக்களை பலிக்கடாக்களாக்க புலிகள் துணிந்துவிட்டதானது இந்தியாவை தனது

> **இணைத்தலைமை நாடுகளின் இலங்கை தொடர்பான முன்னெடுப்புகளுக்கு இந்தியா இதுவரை காலமும் வழங்கிய ஒத்துழைப்பை நீடிக்கப் போகிறதா? அல்லது இந்தியாவின் தனித்துவத்தை எதிர்காலத்தில் வெளிக்காட்டப் போகிறதா? என்ற கேள்விக்கு இந்தியா பிராந்திய சூழ்நிலையை கவனத்தில் கொண்டு சில முடிவுகளை எடுக்கவுள்ளதாக அறிய முடிகிறது.**

நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்த வற்புறுத்துகிறது. தனது ஆதிக்கத்துக்குட்பட்ட பிராந்தியத்தில் இறைமையுள்ள ஒரு அரசையும் அந்த நாட்டு மக்களையும் ஒரு பயங்கரவாத அமைப்பு தாக்குவதையோ ஒரு பயங்கரவாதம் தலையெடுப்பதையோ இந்தியா பொறுமையோடு கை கட்டிப்பார்த்துக் கொண்டிருக்காது என்ற நிலைப்பாட்டை இந்தியா வெளிக்காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே இணைத்தலைமை நாடுகளின் அழைப்புக்கும் இலங்கை அரசின் உதவிகள் தொடர்பான கோரிக்கைக்கும் சாதகமான பதிலை இந்தியா வழங்க வேண்டியுள்ளது. இதில் முதல் கட்டமாக இம் மாதம் இந்தியா சென்றிருந்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இந்திய பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் சில சாதகமான பயன்மிக்க ஆலோசனைகளையும், இணக்கத்தையும் தெரிவித்திருப்பதாக அறியமுடிகிறது.

இதற்கிடையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல்மாற்றம், இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பான என்ன வகையான அழுத்தத்தை மத்திய அரசுக்கு வழங்கமுடியும் என்பது எதிர்பார்ப்புகளைக் கூட்டியுள்ளது. தமிழக முதல்வராக பதவி ஏற்றிருக்கும் கலைஞர் கருணாநிதி எந்தளவுக்கு அழுத்த சக்தியாக இருக்கப்போகிறார் என்ற கேள்விகள் எழும் அதேவேளை, மத்திய அரசின் நிலைப்பாட்டை தமிழகத்தின் அரசியல் மாற்றம் பாதிக்குமா? மாற்றங்களை ஏற்படுத்துமா? என்பதெல்லாம் பொறுத்திருந்து அவதானிக்க வேண்டியவை.

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம் பார்க்க...)

## அதிரடி அய்யாத்துரை



**பாராளுமன்றத்துக்கு** ஒழுங்கா வருகை தர முடியாதவை தங்கட விபரத்தை சொன்னால், அவையை பதவியாலை இறக்கிப் போட்டு அதில அக்கறையானவையை நியமிக்க வசதியா இருக்குமெண்டு அதிகாரமானவர் பென்னாம் பெரிய அணு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார். அதுமட்டுமில்லாமல், தாங்கள் சாந்த சனத்தின்ர பிரச்சினையை பாராளுமன்றத்தில தான் கதைக்க முடியும் - தான் 1972ஆம் ஆண்டு எம்.பி.யாக தெரிவு செய்யப்பட்ட நாளில இருந்து பாராளுமன்றத்துக்கு ஒழுங்காக வந்ததாகவும் அதை தன்ர தொழிலாக தான் மதித்ததாகவும் அதிகாரமானவர் சொல்லியிருக்கிறார். முன்னோடியா இருந்தவர் அதைப்பற்றிச் சொல்லேக்க நியாயமாகத்தான் படுகுது. இனியெண்டாலும் எங்கட எம்.பி.மார் ஒழுங்கா பார்ளிமெண்டுக்குப் போவினமோ எண்டு பார்ப்பம். இல்லாட்டில் பதவியைத் துறந்து விட்டுப்போட்டு வேறு யாராவது ஒழுங்கா வேலை செய்ய விடுவினமே எண்டதை பொறுத்திருந்துதானுங்கோ பார்க்க வேணும், எண்டாலும் பதவியில இருக்கிறவைக்கு அதிகாரமானவர் அப்ப அப்ப டோஸ் குடுத்துக் கொண்டு தான் இருக்கிறாருங்கோ.

**கண்காணிப்புக்** குழுக்காரர் தங்களுக்கு பாதுகாப்புத் தேவை எண்டு முன்னம் ஒருக்காலும் அலறி அடிச்சுக் கொண்டு திருஞ்சிச்சினம். பிறகு இப்ப ரெண்டெழுத்தார் எச்சரிக்கவும் 'பழைய குருடி கதவைத் திறவடி' எண்ட கணக்கா தங்களுக்கு பாதுகாப்பு வேணுமெண்டும், தங்கட கடல் வலயம் தொடர்பான கண்காணிப்புகளில புதிய நடைமுறைகள் வகுக்கப் போயினம் எண்டும் சொல்லினம். உதுக்கு சனம் என்ன சொல்லுதுகள் தெரியுமோ, ரெண்டெழுத்தார் விரட்டின விரட்டில நல்லாப் பயந்து போயிட்டாங்களாம்.

கடலில ரெண்டெழுத்தாருக்கு உரிமை இல்லையெண்டால் அதை உறுதியாச் சொல்லி பிரச்சினையை முடிக்க வேண்டியதுதானே. ரெண்டெழுத்தார் எச்சரிக்கினம் எண்டதுக்காக இவையே பின்வாங்கினமெண்டால் சாதாரண சனம் தங்களுக்கு எதிரான தாக்குதலை எப்புடிங்கோ துணிஞ்சு வந்து சொல்லுவினம் எண்டு சனம் கேக்குதுகள். பாவம் எஸ்.எல்.எம்.எம்.காரர். ஆப்பை இழுக்கப் போய் வாலை நல்லா மாட்டிக் கொண்டு நிண்டு முழிக்கினம்.

**அதிகாரமானவரின்ர** வாசஸ்தலத்துக்கு அருகாமையில ஒரு காணியை வாங்கிப்போட்டிருக்காராம் மண்ணெண்ணையார். அதுவும் அந்த இடத்துப் பெறுமதியை விடவும் மூன்று மடங்கு அதிகமாகவே கொடுத்துத்தான் வாங்கியிருக்கிறாராம். காணி வாங்கின விவகாரம் பாதுகாப்போடை சம்பந்தப்பட்டது எண்டதாலை புலனாய்வு துறையினர் துருவித் துருவி விசாரிச்சுக் கொண்டிருக்கினமாம். மறுபக்கத்தில் மண்ணெண்ணையாருக்கு அவ்வளவு காசு எங்கால வந்ததெண்ட சந்தேகங்களும் எழுந்திருக்காம். அவர் ஒரு பிஸினஸ்காரர் எண்டது உண்மைதான். அதுக்காக இவ்வளவு காசு அவருக்கு இருக்க வாய்ப்பில்லையே. ஒருவேளை ரெண்டெழுத்தார் தான் மண்ணெண்ணையாரை அணுகி காசைக் கொடுத்து வாங்கியிருப்பினமோ எண்ட சந்தேகமும் இருக்குதாம்; மண்ணெண்ணையார் அப்புடிச் செய்வாரோ எண்டு கேட்டால், ஏன் செய்ய மாட்டார் தனக்கொரு கொமிஷன் கிடைக்குதெண்டால் மனிசன் என்ன வேணுமெண்டாலும் செய்வார். முதலில அவர் ஒரு பெஸ்ட் வியாபாரி பிறகுதான் அவர் எம்.பி. எண்டதை மறந்து போடாதேங்கோ எண்டினம். இல்லாட்டில் ரெண்டெழுத்தார் வன்னிக்கு ஒருக்கா வரச் சொன்னாலே போதும். ஆள், நாடி நாளமெல்லாம் ஆடிப்போடுவார் எண்டும் ஏளனமாச் சொல்லினம். ஒரு தன் மானத் தமிழனைப் பற்றி உப்பிடி சொல்லலாமோ...

**சம்மந்தமானவர்** போன போக்கிலேயே பாதுகாப்பாக இருக்கிறார், அதாவது சம்மந்தமானவருக்கும், திருவானமலைக்கும் எந்தச் சம்பந்தமுமில்லையெண்ட முடிவோடை இருக்கிற மாதிரித் தெரியுது. அவர் வருவாரோ இல்லையோ எண்ட விவாதங்கள் ஒரு பக்கமாக புகைஞ்சு கொண்டிருக்கேக்க, எங்க சாத்திர வேந்தனார் திருவானமலைக்கு ஒரு தலைமையில்லையெண்டும், அதுக்கு தான் தான் பொருத்தமான தலைமை எண்டமாதிரியும் தன்ர ஸ்டைலை மாத்திக் கொண்டு திரியிறாராம். உது எப்புடி இருக்குத் தெரியுமோ "அண்ணன் எப்படா சாவான் திண்ணை எப்படா காலியாகும்." எண்ட கதை மாதிரியிருக்குதுங்கோ. கூத்தமைப்பு எம்.பி.மார் தாங்களாக ஒண்டையும் செய்யல்லையெண்டதை எத்தனை தடவைதான் மழுப்பி மழுப்பி டீ.வி.யில கதைக்கிறது எண்டு நழுவிக்கொண்டிருக்கேக்க, சாத்திர வேந்தனார் மட்டும், கோள் போட்டு ரங்கமணியிற்றக் கேக்கிறாராம் இண்டைக்கு நான் வரட்டே இல்லாட்டில் கமிங் வீக் நாள் வரட்டே எண்டு. ரங்கமணி நடத்திறது பெருங் கூத்தெண்டால் அதுக்குள்ள சாத்திரவேந்தனின்ர கூத்து ஒரு கூத்தா இருக்குங்கோ. உதைத்தான் ஊர் ரெண்டுபட்டால் கூத்தாடிகளுக்கு கொண்டாட்டம் எண்டுவினமோ...

**நாட்டு** நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வாரதாலை, சனங்கள் மூட்டை முடிச்சுகளோடை எங்க ஓடுறதெண்டு திக்கித் திணறிக் கொண்டிருக்கினம். கொஞ்சப்பேர் அண்டை நாட்டுக்கான விசாவுக்காக விண்ணப்பிச்சிருக்கினமாம். அதில முன்னமே வீசா கேட்டுப் போட்டுப் போகாமல் நிண்டு வீசா காலாவதியாகிப் போனவையும் தங்கட வீசாவை புதுப்பிக்கச் சொல்லிக் கேட்டிருக்கினமாம். உதாலை அண்டை நாட்டுத் தூதரகம் வழமையை விடவும் நிரம்பி வழியுதாம். உதில இன்னொரு ஜோக் தெரியுமோ, ஒரு மேலை நாட்டுத் தூதரகத்தில போய் ஒருவர் தனக்கு பயமா இருக்கு எண்டு வீசா கேட்டதுக்கு உங்களுக்கு ஏதாச்சும் நடந்துதோ, யாரும் நேரடியா வந்து உங்களை அச்சுறுத்திச்சினமோ எண்டெல்லாம் கேட்டிச்சினமாம். இல்ல நான் கேக்கிறன் அவன் அவன் கொலை வெறியோடை அலையுறான் அம்புட்டால் போட்டுத்தள்ளிட்டு அவன் பாட்டுக்கு போய்க் கொண்டே இருக்கிறான். உந்த நிலையில கொலைகாரனிட்ட இருந்து தப்பி வந்து வீசா கேளுங்கோ எண்ட விதமா காரணம் கேக்கிறது மேலைத்தேய நாடுகளின்ர மேதாவித்தனத்தைத் தானுங்கோ காட்டுது. உந்த விசயத்தில அண்டை நாடு கிரேட்டுங்கோ. கடலாலை போனாலும், ஆகாயத்தாலை போனாலும் அகதி முகாமைத் திறந்து வச்சிருக்கினம் அதுக்காக ஒரு தேங்சுங்கோ...

**கொலைக்கு** மேல் ஒரு கொலை, கொலைக்கு ஒரு கொலை, கொலையோ கொலை எண்டு ஒரே கொலைப் புராணமாக் கிடக்கு. அதுவும் யாழ்ப்பாணத்தில ஒரு இரவுக்குள்ள எத்தினை கொலை நடத்திருக்குதோ எண்ட பீதி சனத்தைப்போட்டு படுத்தாத பாடுபடுத்திக் கொண்டிருக்குங்கோ. சுட்டுப்போட்டுக் கிடக்காம், வெட்டிப்போட்டுக்கிடக்காம். அதில அஞ்சுபேராம் இதில மூண்டு பேராம் எண்டதுதான் ஒரே செய்தியாக் கிடக்குங்கோ.

சனம் படுத்து எழும்பிறதிலையே சந்தேகமாத் தான் இருக்குதுகளாம். யார் வருகினம் யாரைச் சுடுகினம் எண்டது ஒண்டும் தெரியுதில்லையுங்கோ. ஒருசாரார் எடுத்த எடுப்பில சொல்லினம் படைத் தரப்புத்தான் செய்தது எண்டு எதைவச்சுக்கொண்டு சொல்லுறியள் எண்டு. கேட்டால், அவர் சொன்னார் இவர் சொன்னார் எண்டினமாம். அதுபோலை மறுதரப்பார் ரெண்டெழுத்தார்தான் செய்தது எண்டினம். எப்புடிச் சொல்லிறியள் எண்டு கேட்டால் வாய் துறக்கினமில்லையுங்கோ.

யாரோடை என்ன கதைக்கிறது யார் இன்னார் எண்டு ஒண்டையும் புரிஞ்சு கொள்ள முடியாமல் சனம் கதை கேட்டால் பேந்தப் பேந்த முழிக்கினம். உதே நிலைமை தொடருமானால் அவன் அவன் ஆளுக்கொரு சடலத்தைத் தூக்கித் தோலில போட்டுக்கொண்டு விக்கிரமாதித்தன் மாதிரித் திரியப்போராங்களுங்கோ எண்டு சனம் பயந்து கொண்டு சொல்லுதுகளுங்கோ.

# வீடு





**எல்லோருக்கும்** வாழ்நாள் பற்றிய ஆசைகளை சுமந்து கொண்டு கற்பனை அலை அடித்துக் கொண்டேயிருக்கும். ஆசை அதிகரிக்க அதிகரிக்க முயற்சி உந்தித்தள்ளி விடுகிறது. இதில் நினைத்த இடத்தில்போய் விழுந்தவர்கள் மிகக்குறைவானவர்கள். இடைப்பட்ட தூரத்தில் வீசப்பட்டவர்கள் அதிகமானவர்கள். தள்ளப்பட்ட தாண்டவத்துக்கு பொலித்தீன் பேக்கும், கார்ட்போட் பெட்டியும் வீசி எறியப்பட்டுவிடவும், ஏற்கனவே அழுக்கு மூட்டைகளாகக் கிடக்கும் உடுபிடவைகளை எடுத்துக் கொண்டும், கையில் அகப்பட்ட அவர்களின் பொக்கிஷங்களுடனும் எதிரில் இருக்கும் வங்கியின் தாழ்வாரத்துக்கு ஓடிய ஓட்டமும் அப்போது ஒரு பெண்ணின் கையில் ஒரு குழந்தை அது நனைந்து கொண்டு அழுததும் என் அருகில் நின்று கொண்டிருந்த வர்களுக்கு வேடிக்கை; எனக்கு வேதனை. பார்த்துக் கொண்டிருக்கும் போதே அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்த அந்த இடம் ஒரு சூறாவளி தாக்கியதுபோல் பிய்த்து எறியப்பட்டுவிட்டது. அவர்களோடு இருக்கும் ஒரு சொறிநாய் கூட அவர்களோடு ஓடிச்சென்று பாதுகாப்புத் தேடிக் கொண்டதை மறப்பது எனக்கு முடியாத காரியமாகிவிட்டது.

அந்த நேரத்தில் அந்த தெருவாசிகளும் சிரித்தார்கள் அவர்களைப் பார்த்து சிரிப்பவர்களைப்பார்த்து அதாவது எனக்கு அருகிலிருப்பவர்களைப்பார்த்து அவர்களின் சிரிப்புக்கும் இவர்களின் சிரிப்புக்கும் எனக்கு அர்த்தம் பிடிபடவில்லை. ஒரு பைத்தியம் இன்னொரு பைத்தியத்தைப் பார்த்து சிரிப்பதுபோல் இருந்தது.

இடத்திலேயே கிடந்து வாழ்வையும், இயற்கையையும் சபித்துக் கொண்டிருப்பவர்கள் மிச்சப்பட்ட எல்லோரும் இப்படி எல்லோருடைய விருப்பங்களில் தனக்காக சிம்மாசனத்தைப் போட்டு அமர்ந்து கொள்வதில் பிரதான பங்கை வகிப்பது வீடு பற்றிய விருப்பம்தான்.

சொந்தமாக ஒருவீடு எல்லாத்தேவைகளுக்கும் வசதியான வகையில் அமைந்தால் அதுதான் மண்ணுலகில் ஒருவருக்குச் சொர்க்கம். சில வீடுகள்பற்றி எனக்குள் எப்போதுமே தொகை தொகையான சிந்தனைகள் எழுந்துகொண்டேயிருக்கும்.

பலமாடிகள் ஒருங்கே பெற்ற



தருவது -தேசன்

ஒருவருக்குச் சொந்தமான வீடுமுண்டு, பலர் வாழும் ஒரே மாடி வீடுமுண்டு. கூரையும் நிலமுமான தனி வீடுமுண்டு, சகோதரர்கள் இருப்பதற்காகக்கட்டிய இரட்டை வீடுகளுமுண்டு, குடும்பங்கள் வாழ்ந்துவிட்டு வருடக் கணக்காக பூட்டப்பட்ட பாழடைந்த வீடுகளுமுண்டு. எனக்கென்னவோ எப்போதும் ஈட்டிகொண்டு குத்திக்கொண்டிருப்பது தெருவோரத்தில் பொலித்தீன் பேக்கினாலோ, கார்ட்போட் பெட்டியினாலோ மறைக்கப்பட்டுக்கிடக்கும் தெருவோர வீடுகள்தான்.

அவர்களின் வாழ்க்கை பற்றி அவர்களுக்குக் கவலையில்லை போல் இருக்கும். ஆனால் எனக்கு கவலை நெஞ்சையடைக்கும். அப்படியான அவலக்காட்சியை ஒரு மழைநாளில் கொழும்பு வீதியொன்றில் நான் கண்டிருக்கிறேன். கடுமையான மழை தெருவோரத்தில் வாழ்ந்த குடும்பம் அவ்வளவு நாட்களாக அந்த சிறிய இடமே சொர்க்கமாக நினைத்து வாழ்ந்திருக்கும். ஆனால் மழையின்

இந்த சம்பவம்பற்றி என் நண்பர் ஒருவரிடம் ஒருநாள் பேசிக் கொண்டிருந்தேன். அவரிடம் சொந்தமாக பெரிய வீடு இருக்கிறது அவரின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் புதிர் போலவே இருந்தது. அவருக்கும் அவரது மனைவிக்குமிடையில் அவ்வளவாகப் பொருத்திப் போகாத வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது. அதற்காக எனக்கு ஒரு தேநீர் போடச் சொல்வதைக்கூட விரும்பாமல் குளிர்பானங்கள் எதையாவது தந்து சமாளித்து விடுவார்.

அவர் கூறும்போது இவ்வளவு பெரிய வீடு எனக்கு இருந்தாலும் எனக்கென்னவோ சந்தோசம் அந்த தெருக்குடிசையிலேயே இருப்பதாக உணர்கிறேன் என்றார். எனக்கு ஒரு அறை, உனக்கு ஒரு அறை விருந்தாளிக்கு ஒரு அறை, சாமிக்கு ஒரு அறை, சாப்பிடுவதற்கு ஒரு அறை, பிள்ளைகளுக்கு ஒரு அறை, குளிப்பதற்கு, மலசலத்துக்கு என்றெல்லாம் தனித்தனியாக யாரை ஏமாற்றிக் கொண்டு இந்த வாழ்க்கை. அவர்களுக்கு இவை எல்லாமே அந்த எழுந்தால் தலையில் முட்டும் ஒரே ஒரு குடிசைதானே. கௌரவத்துக்காக நாங்கள் ரொம்பவும்தான் எங்களையும், எங்கள் வாழ்க்கைமுறைகளையும் சுற்றத்தையும் வடிவமைத்துக் கொண்டு விடுகிறோம் என்று நண்பர் சொல்லச் சொல்ல எனக்கு வியப்பாக இருந்தது. அவரே எந்தவித கவலையும் இல்லாமல் மிக யதார்த்தமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

என் சிந்தனை இன்னொரு திசையை நோக்கிப் பாயத்தொடங்கியது. ஒருவேளை அந்த தெருக்குடிசைக்காரன் தன் வாழ்வு ஒரு மாடி வீட்டில் அல்லது தனியான வீட்டில் இல்லாமல் போய்விட்டதே; அப்படி இருந்திருந்தால் எப்படியிருந்திருக்கும் இப்படி மழைக்கும், வெய்யிலுக்கும், காற்றுக்கும் ஈடுகொடுக்க வேண்டி வந்திருக்காதே தவிரவும் வீதியால் போவோர்களின் ஏளனமான பார்வையையும் சிரிப்பையும் அனுபவிக்க வேண்டியிருந்திருக்காதே என்று நினைத்துக் கொள்வானாக்கும். அவனைப் பொறுத்தவரை அவன் நினைக்கும் நிம்மதியெல்லாம் ஒருவசதியான வீட்டில்தான் குவிந்து கிடக்கும்.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)




இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**

## தேய்மானமா? பரிமாணமா?

சூரியன் எப்.எம். நிகழ்ச்சித் தயாரிப்பாளருக்கு... நான் சூரியன் வானொலியின் பிரியமான நேயர். ஏனெனில் அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதாவது அபர்ணாசுதன் அண்ணா பரீட்சார்த்த ஒலிபரப்பை நடத்தியதில் இருந்து - கேட்டு வருகின்றேன். எல்லா நிகழ்ச்சிகளும் எனக்குப் பிடித்திருந்தாலும் என்னை மிகவும் கவர்ந்தது 'நேற்றைய காற்று' நிகழ்ச்சியாகும். அதை ஆரம்பத்தில் ரவூப் அண்ணா, ரமணன் அண்ணா - அவர்களைத் தொடர்ந்து மப்றூக் அண்ணா ஆகியோர் சிறப்பாக நடத்தி வந்தார்கள். அவர்களிடம் இயல்பாக வெளிப்பட்ட கவிதைத்தனமும் கற்பனை வளமும் இரசிக்கும்படியாக அமைந்தது. அண்மைக்காலமாக மப்றூக் அண்ணாவையும் காணவில்லை. இது பெருத்த ஏமாற்றமாகும். மாற்றங்கள் அவசியமாயினும், கட்டாய மாற்றங்கள் நிகழ்ச்சிகளின் தரத்தைக் குறைக்குமென்பதை நிகழ்ச்சித் தயாரிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கவனமெடுக்கவும்.

*–சூரியப்பிரியை.*

## தயாரிப்பாளரின் கவனத்திற்கு...!

தற்போது 'ஐ' அலைவரிசையின் நிகழ்ச்சிகள் தரம் ஏறிவரும் வேளையில், உதயதரிசனம், மதிய நேர நிகழ்ச்சிகள் என்று நிகழ்ச்சிகள் தரம் கூடிக்கொண்டு வந்தாலும் திருஷ்டிப்பரிகாரமாக ஆனந்தமாலையும் அமைந்துவருகிறது.

இந்நிகழ்ச்சியில் அடிக்கடி பங்குகொள்ளும் கவி பெயர் கொண்ட அம்மணியின் தவறான தமிழ் உச்சரிப்பையும், தேவையற்ற சிரிப்பையும் தயாரிப்பாளர் கவனத்தில் கொள்ளாதது ஏனோ!

*–ஆர்.பாத்திமா, பேஸ்லைன் ரோட், கொழும்பு.*

## சிறுகதை, கவிதை எழுத்தாளர்களுக்கு....

முரசுக்காக சிறுகதைகளை எழுதிவரும் அன்பு எழுத் தாளர்களே! எதிர்காலத்தில் எழுத்துப் பணியில் ஈடுபட இருப்பவர்களே! முரசுக்காக சிறுகதைகள் எழுதுகின்றபோது கையெழுத்துப் பிரதியாக இருந்தால் மூன்று பக்கங்களும், தட்டச்சு செய்திருந்தால் ஒன்றரைப் பக்கம் வரக்கூடிய விதத்திலும் எழுதி அனுப்பி வையுங்கள்.

கவிதை எழுதுபவர்கள் தொடர் சங்கிலியாக எழுதாமல் எடுத்துக்கொள்ளும் விடயத்தை சிறியதாகவும் சுவையாகவும் எழுதுமாறு கேட்டுக்கொள்கிறோம். முரசு எழுத்தாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும் அதேவேளை, புதிய புதிய எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கவும் வாசகர்கள் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

நன்றி.

**- ஆசிரியர்**

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒருவருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 4,300 | ரூ.2,150 | ரூ.1,100 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 4,900 | ரூ.2,450 | ரூ.1,250 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 3,800 | ரூ.1,900 | ரூ. 950 |
| உள்ளூர் | ரூ. 1,500 | ரூ.750 | ரூ. 375 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரைப் பெற விரும்புவோர் **D.D. Enterprises** என்ற பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமை யாளர், தினமுரசு **16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka** என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

உள்ளூரில் சந்தா பெற விரும்புவோர் சந்தாத் தொகையை காசுக் கட்டளையாக வெள்ளவத்தை தபாற்கந்தோரில் மாற்றும் வண்ணம் **"Manager, Thinamurasu Varamalar 16A, Nelson Place, Wellawatta, Colombo-06.** என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

ஈ.மெயில் :- **(E-mail):– murasu@sltnet.lk**




மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக சக்தியால் பிரிந்தவர்கள் ஒன்று சேர, கணவன் - மனைவி பிணக்கு தீர்ந்து, ஒற்றுமையாக இருக்க, திருமணம் கை கூட, மனங்கவர்ந்த காதலன் காதலி ஒன்று சேர, கல்வி ஞான கவசம் பெற, குபேர வாழ்வு கிட்ட, வெளிநாட்டு பிரயாணத்தடை நீங்க, சகல தோஷங்களும் நிவர்த்தி செய்து கொள்ள அனைத்து விடயங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

அத்துடன் அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு நடக்க இருப்பது, எண்ணியது எண்ணியவாறு எத்தனையாம் திகதி எத்தனை மணிக்கு நிறைவேறும் என்பதை திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளவும், மற்றும் கைரேகை பார்த்து தெரிந்து கொள்ள பிறந்த திகதி தேவையில்லை.

வாங்கும் பணத்திற்கு உத்தரவாதம் கொடுப்பதென்றால் அது நான் மட்டுமே! வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகையும் 24 மணித்தியால தொலைபேசி சேவையும் உண்டு.

Prof.Dr P .K. Samy (J.D.G.N) JP
Malayala Manthirika Uchchatta Peedam
Sri Durkadevi Aalayam ,162, Kotahena Street,
May field Road, Colombo - 13, Srilanka

T/NO 2342463/2342464
2470615
Fax :- 0094 -11 - 2344831
web- www.drpksamy .com




**"புலிகளின் இணையத்தள அபகரிப்பு உச்சக் கட்டத்தில் உள்ளதா?" என்ற தலைப்பில் கடந்த பதினோராம் திகதி 'டெயிலி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் வெளியான கட்டுரையின் சுருக்கம் இங்கே தமிழில் தரப்படுகிறது. தனுகா என்ற புனைபெயரில் அரசியல் ஆய்வாளரொருவர் இக் கட்டுரையை எழுதியிருந்தார்.**

# புலிகளும் இணையத்தளப் பயங்கரவாதமும்

**பயங்கரவாதம்** சம்பந்தமாகப் புலமை பெற்ற ஒருவரின் கருத்துப்படி, செப்டெம்பர் மாதம் பதினாராம் திகதி அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் பெரும் பகுதித் திட்டமிடலும் ஒருங்கிணைப்பும் இணையத்தளம் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விமானக் கடத்தல்காரர்கள் இணையத் தளத்தையே பயன்படுத்தினார்கள். "அவர்கள் அதனை நன்கு பயன்படுத்தியுள்ளனர்" என்று அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பணியகப் பணிப்பாளர் ரொனால்ட் டிக் கூறினாரென்று கூறப்படுகிறது.

1997ஆம் ஆண்டு காலப் பகுதியில் புலிகள் இயக்கம், தமது நிதி சேகரிப்புக்கான தமது பிரசாரங்களை மேற்கொள்வதற்கு ஷெபீலட் பல்கலைக் கழகத்தின் தொலைத் தொடர்பு அமைப்பின் வலையமைப்புக்குள் வைரஸ் தாக்குதல்களை மேற்கொண்டு அப் பல்கலைக்கழக கல்விமான்கள் சிலரின் சட்டரீதியான குறியீடுகளையும் இரகசியக் குறியீடுகளையும் மிகக் களவாகவே பயன்படுத்திக் கொண்டது.

ஒரு வருடத்திற்குப் பின்னர் வெளிநாடுகளிலுள்ள குறிப்பிட்ட தொகை இலங்கைத் தூதரகங்களுக்கு நாளாந்தம் கிட்டத்திட்ட ஆயிரம் மின்னஞ்சல்களைப் புலிகள் இயக்கம் அனுப்பி வைத்தது. கிட்டத்தட்ட இரு வாரங்களுக்கு இவ்வாறு மின்னஞ்சல்களை அனுப்பியது. தொலைத் தொடர்புகளைச் சீர்குலைப்பதற்காகவே இணையத்தள கரும்புலிகள் இதனைச் செய்கிறார்கள் என்று கூறி உண்மையிலேயே புலிகள் இக் குற்றச் செயல்களை ஏற்றுக் கொண்டனர்.

கணனிகளையும் தொலைத் தொடர்பு தொழில் நுட்பத்தையும் குறிப்பாக இணையத்தளத்தைத் தாக்குதல் நடத்துபவர்கள் தமது சொந்த அரசியல் அல்லது சமயரீதியிலான இலக்குகளை ஈட்டுவதை முன்னெடுத்துச் செல்வதற்காக ஏனையவர்களுக்கு தீங்குகளை அல்லது பாரதூரமான சீர்குலைவுகளை ஏற்படுத்துவதையே இணையப் பயங்கரவாதமென்று விக்கிபெடியா என்ற அமைப்பு வர்ணிக்கிறது. இணையத்தளங்களால் வழங்கப்படும் இரகசியங்களைத் தனிநபர்களோ அல்லது குழுக்களோ பயன்படுத்தலாம். அதாவது மக்களை, குறிப்பிடத்தக்க குழுக்களையும், சமூகங்களையும் முழு நாடுகளையும் அச்சுறுத்துவதற்கு இவ்வாறு செய்கிறார்கள்.

இந்த வரைவிலக்கணம் சம்பந்தப்பட்ட விவகாரம் போதிய அளவுக்கு விளங்கப்படுத்தபடவில்லைப் போல் தெரிகிறது. இதனை விட சிறந்த விளக்கத்தை அமெரிக்காவின் மத்திய புலனாய்வுப் பணியகம் வழங்கியுள்ளது. "இணையப் பயங்கரவாதம் என்பது தகவல் தொடர்பு, கணனி அமைப்புகள் கணனி மென்பொருள் மற்றும் தரவுகள் மீது அரசியல் நோக்கோடு முன்கூட்டியே திட்டமிட்டு நடத்தப்படும் தாக்குதலே இது. இது தேசியத்தன்மையற்ற குழுக்களால் அல்லது இரகசிய முகவர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் தற்காப்பு தன்மையற்ற இலக்குகளுக்கு எதிராக இது வன்செயலை ஏற்படுத்துகிறது" என்று மத்திய புலனாய்வுப் பணியகம் குறிப்பிட்டு விளக்குகிறது.


பயங்கரவாதிகள் தமது இலட்சியத்தை மேலும் முன்னெடுப்பதற்கு இணைய பயங்கரவாதத்தில் ஒரேயடியாகத் தங்கியிருந்தாலென்ன, அல்லது ஏனைய மரபு ரீதியான பயங்கரவாத நடவடிக்கைகளுக்குமப்பால் மேலதிகமாக இணையப் பயங்கரவாதத்தைப் பயன்படுத்தினாலென்ன. இவ்வாறு செயற்படும் பயங்கரவாதிகள் இணையப் பயங்கரவாதிகளென்று வர்ணிக்கப்படுகிறார்கள் என்றும் கூறப்படுகிறது. இணையப் பயங்கர வாதம் பற்றிய இந்த இரண்டு வரைவிலக்கணங்களுமே உண்மையில் அச்சுறுத்தலாகவே விளங்குகின்றன. அதற்கான காரணங்கள் வருமாறு :-

* அதன் நவீனத்துவமும் திறனும்
* நிதி நிறுவனங்கள், உற்பத்தி அமைப்புகள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள்
*ஆகியவை தமது செயற்பாடுகளுக்கு கணனித் தொழில் நுட்பத்தில் தங்கியிருப்பது.
இலத்திரனியல் பரிவர்த்தனைகளில் நிதிச் செயற்பாடுகள் மேலும் மேலும் தங்கியிருப்பதால் ஏற்படுகின்ற அபாயம்.

ஆகியவையே இக்காரணங்களாகும்.

இணையப் பயங்கரவாதமென்ற ஒன்று இல்லையென்று சிலர் வாதிடுகிறார்கள். கணனிகளில், தகவல் யுத்தம் மற்றும் தகவல்களை தாக்குதல் ஆகியவையே செய்யக் கூடிய மிக மோசமான செயற்பாடுகள் என்றும் இவை வெறுமனே குற்றங்களாக மட்டுமே வர்ணிக்கப்படமுடியுமென்றும் பயங்கரவாதம் என வர்ணிக்கப்பட முடியாதென்றும் அவர்கள் விளக்கம் தெரிவிக்கிறார்கள். இந்தப் பயங்கரவாதமென்ற முத்திரை மிகப் பிழையான முறையில் மோசமாகப் பயன்படுத்தப்படுவதாக இவர்கள் கூறுகின்றனர். ஏனென்றால் இலத்திரனியல் பயன்பாடுகளைப் பயன்படுத்தி மக்களுக்கு மரணத்தையோ உடற் காயங்களையோ ஏற்படுத்தும் அச்சத்தை உருவாக்குவதால் இது பிழையானதென்பதே அவர்களின் வாதமாகும்.

இணையப் பயங்கரவாதம் பற்றிய வரைவிலக்கணமொன்றை மேற்கொள்ள வேண்டிய தேவையேற்பட்டுள்ளது. ஏனென்றால் வெறுக்கத்தக்க வெப்தளங்கள் மற்றும் வெறுக்கத்தக்க மின்னஞ்சல்கள் ஆகியவை செயற்திறன்மிக்க கணனி அமைப்புகளுக்குள் நுழைவது அதிகரித்துள்ளது. இதனால் கணனிகளையும் இணையத்தளங்களையும் துஷ்பிரயோகம் செய்யும் இந்த உலகளாவிய செயற்பாடுகளைக் கையாளுவதற்கு தேசிய சட்டவாக்கங்களோடு கூடிய சர்வதேச



மாநாடொன்று தேவைப்படுகிறது.

1996ஆம் ஆண்டு நிகழ்ந்த ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடலாம். வெள்ளை இன மேலாதிக்க இயக்கமொன்றுடன் இணைந்து கொண்டதாகக் கூறப்பட்ட கணனிகளைத் தாக்கும் ஒருவர் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கிய இணையத்தள சேவை வழங்கும் நிறுவனமொன்றினை வெற்றிகரமாகச் செயலிழக்கச் செய்தார். அத்துடன் தகவல்களைக் சேகரித்து வைத்திருக்கும் அந்த அமைப்பின் ஒரு பகுதியையும் தற்காலிகமாகப் பழுதாக்கினார். இது இணையப் பயங்கரவாதமென்று இனங் காணப்படவில்லை.

ஏனென்றால் இக் கணனிகளைத் தாக்கியவர் தனது அரசியல், சமூக, சமய, சித்தாந்தங்களை மேலும் முன்னெடுத்துச் செல்லும் நோக்கங்களைக் கொண்டிருக்கவில்லையென்பதால் அவ்வாறு கூறப்பட்டது.

1998ஆம் ஆண்டு உலகளாவிய தொலைத்தொடர்பு நிறுவனம் (IGC) ஆயிரக்கணக்கான மின்னஞ்சல் செய்திகளால் தாக்கப்பட்டது. பாஸ்க் பிரிவினை வாதிகளை ஆதரிக்கும் யுஸ்கால் ஹெரியா சஞ்சிகைக்காக வெப்தளமொன்றினை உலகளாவிய தொலைத் தொடர்பு நிறுவனம் உருவாக்கியதை எதிர்த்தே, அதனை விரும்பாதவர்கள் ஆயிரக்கணக்கான போலி மின்னஞ்சல்களை அனுப்பி வைத்தனர். இதனால் அந்த நிறுவனம் குறிப்பிட்ட வெப்தளத்தை நீக்க வேண்டியேற்பட்டது. இது இணையத் தளத்திலுள்ள ISP க்களின் சாதாரண செயற்பாடுகளைக் குழப்பியடித்ததால் இது பயங்கரவாத நடவடிக்கையென வர்ணிக்கப்பட்டது.

அந்த வைரஸ் தாக்குதலை நடத்தியவர்கள் தமது அரசியல் இலட்சியத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு முன்கூட்டியே திட்டமிடப்பட்ட முறைமையொன்றினைப் பயன்படுத்தி இணையத் தளத்தைச் சீர்குலைத்ததால் இது இணையத்தள பயங்கரவாதமென அழைக்கப்பட்டது.

'இணையத்தளப் பயங்கரவாதமும் தகவல் யுத்தமும் என்ற தனது நூலில் மைக்கல் வடிஸ், அரசாங்க நிலையிலிருந்து இணையத்தள பயங்கரவாதமென்றால் என்னவென்று விளக்குகிறார். அதாவது தனது பிரசாரத்தைப் பரப்புவதற்காக இணையத்தை பயன்படுத்துவதே இணையப் பயங்கரவாதமென்று அவர் விளக்குகிறார். இணைய தொழில் நுட்பத்தையும் தகவல் தொழில்நுட்பத்தையும் தனது பிரசாரச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தும் அமைப்புகளில் ஒன்று, புலிகள் இயக்கம். இவர்கள் இணையத்தளத்தை நிதி சேகரிப்பதற்காக பயன்படுத்துகிறார்களென்று வடிஸ் கூறுகிறார். வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்பவர்களில் சிலர் இணையத்தளம் மூலம் நிதி பரிவர்த்தனை செய்து கொள்கின்றனர். இந்த வகையில் நிதி சேகரிப்பில் புலிகள் இயக்கம் முன்னணி வகிக்கிறது.

இணையத் தொழில்நுட்பம், புலனாய்வுத் தகவல்களைச் சேகரிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. தனிநபர்களின் மின்னஞ்சல்களில் வைரஸ் தாக்குதல்களை மேற்கொண்டு புலனாய்வு தகவல் சேகரிப்புகளுக்கு எந்தளவுக்கு புலிகள் இயக்கம் இணையத் தொழில்நுட்பத்தை பயன்படுத்துகிறது என்பது இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. இது முக்கியத்துவமற்றது என்பதற்காக அல்ல இவ்வாறான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழிவகை இல்லாததாலேயே திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை.

பயங்கரவாதிகள் இணையத்தளத்தின் மூலம் உலகெங்கிலுமுள்ள தமது சதிகார சகபாடிகளுடன் தொடர்புகொள்ள முடியும். இதற்கான செலவும் குறைவானது. இதனைத் திறமையாகவும் செய்ய முடியும். அரசாங்கத்தின் சட்ட அமுலாக்கல் அல்லது பாதுகாப்பு நிறுவனங்களுக்குத் தெரியாமலேயே இதனைச் செய்து கொள்ள முடியும். இந்த உலகளாவிய வசதியை ஆகக்கூடிய அளவுக்கு பயன்படுத்திக் கொண்ட அமைப்புகளில் புலிகள் இயக்கமும் ஒன்று. ஆனால் புலிகளின் இணையத்தள அச்சுறுத்தல் எந்தளவுக்குப் பெரியதென்பது மதிப்பிடப்படவில்லை. இலங்கை அரசாங்க தகவல் தளங்கள் மீது தாக்குதல்கள் நடத்துவதற்கு புலிகள் இணையங்களைப் பயன்படுத்தி வந்துள்ளனரென்பது என்பது தெரிய வந்துள்ளது.

வெப்தளங்களைத் தாக்கி அரசியல் பிரசாரங்களைச் செய்வதற்கும் புலிகள் இணையதளங்களைப் பயன்படுத்தியுள்ளார்கள். காடுகளில் அல்லது பாலைவனங்களில் போர் புரியும் கிளர்ச்சிவாதிகள் இணையத்தள உலகத்துக்கும் யுத்தத்தைக் கொண்டு வந்துள்ளனர். இணையத்தள மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆரம்பித்த காலத்திலிருந்தே பயங்கரவாதிகளுக்கு சாதகமான ஒரு அம்சமாக இது பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. மெக்ஸிகோவின் சபாடிஸ் அமைப்பும் இலங்கையில் புலிகள் இயக்கம் போன்றவையும் இத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி சர்வதேச மட்டத்திற்குச் சென்றுள்ள குழுக்களாகும். நிதி சேகரிப்பு, மற்றும் பிரசாரச் செயற்பாடுகளுக்கு உலகளாவிய வகையில் இணையத்தை இவர்கள் பயன்படுத்துகின்றனர்.

புலிகளின் இணைய அச்சுறுத்தலை இலங்கை அரசாங்கம் இறுதியில் உணர்ந்துள்ளது. ஆனால் அதற்கு எதிரான உபாயங்களும் முறைமைகளும் போதியளவு இல்லை. சிக்காக்கோ பல்கலைக்ககைத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஜெகநாதன், புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் வெப்தளங்கள் பற்றியும் தமிழீழ வெப்தளங்கள் பற்றியும் குறிப்பிடுகையில், கீழ்க்கண்டவாறு கூறுகிறார். "புலிகளுக்கான பிரதேசத்தையே தேசியம் என்ற முறையில் அவர்கள் பார்க்கிறார்கள். புலிகளின் நோக்கத்தை நம்புபவர்களும் இதனையே சொல்கிறார்கள். அமெரிக்காவிலோ அல்லது அவுஸ்திரேலியாவிலோ புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமது நாட்டுக்குத் திரும்பும் நோக்கைக் கொண்டிருக்கவில்லையென்ற போதிலும் தமிழீழம் உண்மையானதென்றே இந்த இணையத்தைப் பார்ப்பவர்கள் நம்புகிறார்கள். அதாவது தாம் வாழ்வதற்கு இடமாக அல்ல. கௌரவத்திற்குரிய இடமாகவே அவர்கள் தமிழீழத்தைக் கருதுகிறார்கள் என்று பேராசிரியர் ஜெகநாதன் கூறுகிறார்.

புலி எதிர்ப்பு இயக்கங்கள் மீது அச்சுறுத்தல்களைக் கட்டவிழ்த்து விடுவதற்காக வைரஸ்களையும் பிழையான மின்னஞ்சல்களையும் பயன்படுத்த நிதர்சனம் உட்பட பல வெப்தளங்களை புலிகளின் புலனாய்வுத் தலைவர் பொட்டம்மான் உருவாக்கியுள்ளாரென்று குற்றம் சாட்டப்படுகிறது. புலி எதிர்ப்புச் செய்திகள் நீக்கப்படாவிட்டால் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்போவதாக வட அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமுள்ள வெப்தள கம்பனிகள் மீது புலிகளின் உறுப்பினர்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர்.

புலிகளின் வெப்தளமான நிதர்சனம் போன்றவை Go - Daddy என்ற நிறுவனத்தோடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கூறப்படும் சட்டவிரோத செயற்பாடுகள் பற்றி தாம் தீர்ப்பு வழங்கவேண்டிய தேவையில்லையென்று குற்றம் சாட்டுபவர்களுக்கு இக் கம்பனிகள் பதில் கூறி வருகின்றன.

புலிகள் தமது முகவரமைப்புகள் மற்றும் இரகசிய ஸ்தாபனங்களுக்குள் வலைப் பின்னலை ஏற்படுத்துவதற்கு இணைய முறையை பயன்படுத்துகின்றனர். இணையத்தள வலைப்பின்னலில் இருக்கக்கூடிய திறமையையும் செலவுக் குறைவையும் புலிகள் பயன்படுத்துகின்றனர். புலிகளின் ஆயுதக் கொள்வனவுப் பிரிவான KP பிரிவு இதனை பெரிதும் பயன்படுத்துகிறது. யாராலும் கண்டுபிடிக்க முடியாதபடி இவ்விணைய வசதியை இவர்கள் பயன்படுத்துகின்றனர். புலிகள் துப்பாக்கிகளிலேயே தங்கியிருப்பதால் அதற்குத் தேவையான உதவு நடவடிக்கையாகவே இணையப் பயங்கரவாதத்தை பயன்படுத்துகின்றனர்.


*நன்றி டெய்லி மிரர்*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

**இருப்பினும்** அன்றைய கால தேச வர்த்தமானம் அனுசரணையாக இல்லாமல், நடிகர்களைத் தாண்டி தங்கள் முகங்களைக் காட்டிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடாதிருந்திருக்கலாம்.

எது எப்படியிருப்பினும், பாலசந்தரின் வரவுக்குப் பிறகு தமிழ் சினிமா தன் சட்டையை மாற்றிக் கொள்ளத் தொடங்கியது என்பதுதான், நானும் திரு.கே.ஆர்.ராமசாமி



அவர்களும் காரில் பயணித்தவாறே பேசிக் கொண்ட விஷயம்.

பாலசந்தர் மீது கே.ஆர்.ஆர். அவர்களுக்கு அளப்பரிய மரியாதை இருந்ததை, அன்றுதான் நானும் அறிய நேர்ந்தது.

இசையிலும், மொழியிலும் அவருக்கிருந்த ஈடுபாடும், நடிக்க வராதவர்க்கு அவர் தன் நயங்களை சொல்லித் தந்து களிமண்ணைக் கைவினைப் பொருளாக மாற்றிய ரசவாத வித்தையும், பாலசந்தரின் ஆரம்பப்படங்களிலேயே தெரிந்தது என்று கே.ஆர்.ஆர். பத்தி பத்தியாக என்னிடம் பேசிக் கொண்டிருக்கையில், பாலசந்தர், சிவாஜி அவர்களை நடிக்க வைத்து இயக்கிய படம் ஒன்றே ஒன்றுதான் என்பதும் - அதிலும் இயக்குநரின் முகவரி பல இடங்களில் மென்மையாக வரையப்பட்டுள்ளது என்பதும் - என்னால் விளக்கிச் சொல்லப்பட - திரு.கே.ஆர்.ஆர். என் கருத்தை ஆமோதிக்கும் வகையில் பலமாகத் தலையை ஆட்டினார்.

எங்களது கார், அப்பொழுது 'சேத்தியாத் தோப்பு' என்னும் ஊரில் எல்லையைக் கடந்து கொண்டிருந்தது.

அப்போது, ஊரின் எல்லையை ஒட்டி அமைந்திருந்த ஒரு டூரிங் தியேட்டரில் பாலசந்தர் இயக்கிய படம் ஒன்று ஓடிக் கொண்டிருப்பதை கே.ஆர்.ராமசாமி அவர்கள் கவனித்துவிட்டு "யோவ்! காரை நிறுத்துய்யா!" என்று என் டிரைவரிடம் ஆணையிட்டார்.

"வாலி! வாங்க... தியேட்டருக்குள்ள போயி, கொஞ்ச நாழி படத்தைப் பாத்துட்டுப் போவோம்" என்று என்னைக் கையைப் பற்றி என் பதிலுக்க காத்திராமல் - தியேட்டரை நோக்கி இழுத்துச் சென்றார்.

'நெய்வேலி போய்ச் சேர நேரமாகியிடுமே' என்று நான் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவர் கவனம் பூராவும், கொட்டகையில் திரையிடப்பட்ட அந்தப் படத்தைப் பார்ப்பதிலேயே ஆழ்ந்திருந்தது.

படம் முடிந்துதான், நாங்கள் நெய்வேலியை நோக்கிப் பயணித்தோம்.

படத்தைப் பார்த்துவிட்டு வந்தபின், பாலசந்தரைப் பற்றி வார்த்தைகூட கே.ஆர்.ஆர். பேசாதது எனக்கு வியப்பாக இருந்தது.

அவர் முகம் முழுதும், ஏதோ சிந்தனை அப்பிக் கிடந்தது போல் எனக்குத் தோன்றிற்று.

"என்னண்ணே! ஏதோ யோசனையில் ஆழ்ந்திட்டீங்களே?" என்று அவர் சிந்தனையைக் கலைத்தேன் நான்.

ரத்தினச் சுருக்கமாகத் திரு.கே.ஆர். ராமசாமி அவர்கள் வருத்தம் தோய்ந்த குரலில் தன் கருத்தை எடுத்துரைத்தார்.

"இவ்வளவு பெரிய அறிவாளி, கடைசியில சினிமா வேண்டாம் தனக்கு வீணைதான் முக்கியம்னு, கோடம்பாக்கத்த விட்டுட்டுப் போயிட்டாரே - அதெநெனச்சாத்தான்யா ரொம்ப வருத்தமாயிருக்கு..." என்று கே.ஆர். ராமசாமி சொன்னதும் அவர் முகத்தை நான் உற்றுக் கவனித்தேன்.

கை வீணை செய்த புண்ணியும், கலர் ஃபிலிம் செய்யவில்லையே என்ற கவலை அவர் முகத்தில் மெல்லியதாகப் படந்திருந்ததை, என்னால் அந்த மங்கிய மாலைப் பொழுதிலும் கண்டு கொள்ள முடிந்தது.

(தொடரும்.......)




## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....

**இதைத்** தடுப்பதற்காக மிக நீளமான செய்திகளையும் குறுகிய கால அளவிற்குள், அதாவது சில செக்கன்டுகளுக்குள் அடக்கி ரேடியோ மூலம் அனுப்புவார்கள். இந்தச் செய்தி குறுகிய கால எல்லைக்குள் முடிந்துவிடுவதால் எப்போது வருமென்று எதிர்பார்த்து எதிரிகளால் கிரகிக்க முடியாது. செய்திகளைப் பெறுகின்றவர்கள் சில செக்கன்டுகளுக்குள் அடக்கப்பட்ட அந்தச் செய்தியைப் பதிவு செய்து கொண்டு விரிவாக்கும் கருவியின் மூலமாக அதற்கு இயற்கையான ஒலி வடிவத்தை உண்டாக்கி செய்திகளை தெரிந்து கொண்டு விடுவார்கள்.

சங்கேதக் குறிப்புகளாக (Code) செய்திகளை அனுப்புவது ஒரு முறை. சங்கேதக் குறிப்பு எதை உணர்த்துகிறது என முன்கூட்டி அறிந்தவர்களால் மட்டுமேதான் அடங்கியுள்ள செய்தியைப் புரிந்துகொள்ள முடியும். சங்கேதக் குறிப்புகளாக அனுப்பப்படும் செய்திகளைப் புரிந்துகொள்ளவும் எதிரிகள் முயற்சிப்பதுண்டு. அனுப்பப்படுகின்ற சங்கேதக் குறிப்புகள் அனைத்தையும் பதிவு செய்து வைத்துக் கொண்டு அதை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு இன்ன சங்கேதக் குறிப்புக்கு இதுதான் அர்த்தமாக இருக்க வேண்டும் என்று யூகிக்கும் ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபடுவார்கள். இது மிகவும் சிரமமான காரியம் என்றாலும் இதைக் கண்டுபிடிப்பதன் மூலம் ரகசியங்களை அறிவதும் சுலபம்.

இரண்டாவது உலகப் போரின்போது ஜெர்மன் 'U' படகுகள் எங்கே அணிவகுத்திருக்கின்றன; எந்த இடத்தை எப்போது தாக்கவேண்டும் என்கிற செய்திகள்




சங்கேதக் குறிப்புகள் மூலம் ஜெர்மன் ராணுவ தலைமை நிலையத்திலிருந்து அனுப்பப்பட்டன. இந்தச் சங்கேதக் குறிப்புகளை பிரிட்டிஷார் முன் கூட்டியே அறிந்து வைத்திருந்ததால் ஜெர்மன் 'U' படகுகள் நினைத்தபடி செயல்பட முடியாமல் தடுக்கப்பட்டது.

இரண்டாவது உலகப் போரின் போது லிபியா போர்க்களத்தில் மிகத் திறமையாக செயல்பட்டுக் கொண்டிருந்த ஜெர்மன் தளபதி ரோமெல் சங்கேதக் குறிப்புகளின் மூலம் கெஸ்ஸர்லிங் என்கிற ஜெர்மனியப் படைத் தளபதிக்கு, எட்டாவது பிரிட்டிஷ் படையை எந்த இடத்தில் சந்தித்துத் தாக்கவேண்டும் என்கிற தகவலைக் கொடுத்தார். அந்தச் சங்கேதக் குறிப்புகளை பிரிட்டிஷார் கண்டுபிடித்துவிட்டதால் ரோமெல் தலைமையில் செயல்பட்ட ஜெர்மானிய படைகளால் எதிர்பார்த்தபடி வெற்றி பெறமுடியாமல் போயிற்று.

1942 இல் ஜப்பானியர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தாக்கவேண்டும் என்று சங்கேதக் குறிப்புகள் மூலம் தங்கள் விமானப் படைக்குத் தகவல் கொடுத்தார்கள். யுகு என்கிற இடத்தின்மீது திடீர்த் தாக்குதல் நடத்தவேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். இந்த ரகசிய செய்தி அமெரிக்க ராணுவத்திற்குக் கிடைத்தது. யுகு என்பது எந்த இடம் என்று அவர்களுக்கு விளங்கவில்லை. அமெரிக்க கடற்படையைச் சார்ந்த அட்மிரல் நிமிட்ஸ் என்பவர் மட்டும் பசிபிக் மகா சமுத்திரத்தில் எங்கோ மையப் பகுதியில் அமைந்துள்ள ஒரு துறைமுக நகரத்தைத்தான் யுகு என்று குறிப்பிடவேண்டும் என்கிற முடிவுக்கு வந்தார். உடனே அவர் அதை உறுதி செய்ய ஓர் தந்திரம் செய்தார். பசிபிக் கடலின் மையப் பகுதியிலிருந்த துறைமுகம் ஒன்றில் முகாமிட்டிருந்த அமெரிக்கக் கடற்படை தளபதியிடம், தன்னுடைய கடற்படைக்குப் போதுமான தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று பேர்ல் ஹார்பர் துறைமுகத்திற்கு ரேடியோ தகவல் கொடுக்கச் சொன்னார்.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

**தாய்லாந்தின்** தாய்பே நகரில் அண்மையில் ஒரு குறுந்திரைப்படம் திரையிடப்பட்டது. 'ராதர் நியூட் தேன் நியுக்' எனும் இத்திரைப்படம், பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் தாய்லாந்து அரசாங்கத்தினால் ஆரம்பிப்படவுள்ள அனுவாயுத செயல்பாடுகளுக்கு எதிரான ஒரு மொடல் அழகியைப் பற்றிக் கூறுகிறது.

தாய்லாந்து நாட்டவர்களைப் பாதுகாக்கும் அமைப்பின் மூலம் இத்திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது. இது, அதிலொரு காட்சியாகும்.








**எந்தவிதமான** ஆர்ப்பாட்டமும் இன்றி அமெரிக்க, கனடா திரைப்பட வசூல்களை எல்லாம் தாண்டி தற்போது ஒரு திரைப்படம் வசூலில் சாதனைப் படைத்துக் கொண்டிருக்கிறது!

திரைப்படத்தின் பெயர் சைலன்ட்

பேய்களின் நகரமொன்றில் காணாமற் போன தனது புதல்வியைத் தேடித் திரியும் ஒரு தாயைச் சுற்றி இத் திரைப்படத்தின் கதை பின்னப்பட்டுள்ளது. ஒரு வாரத்துக்குள் இத்திரைப்படம் 20 மில்லியன் அமெரிக்க டொலர்களை வசூலித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்!

சைலன்ட்! ஆர்ப்பாட்டம் இன்றிய பணவசூலிப்புக்கு இன்னொரு பெயர்?....

**பிரபல** நடிகை ஜெகிரா நயிட்லி, தனது காதலனைப் பறித்துக் கொண்டார் என இன்னொரு நடிகையான சொபியா எண்டர்சன் கூறுகின்றார்.



இதனால் தனது காதலரான ரொக் பாடகர் கெஸ் ஜேம்ஸ் தன்னைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டார் என்பது தான் சொபியாவின் குற்றச் சாட்டு.

இந்தக் குற்றச் சாட்டை மறுக்கும் கெகிரா, தான் கனவில் கூட மேம்ஸை கண்டதில்லை என்கிறார். எது, எப்படியோ, இந்த இருவரும் தனிக் குடித்தனமே நடத்துகின்றனர் என்பது தான் ஊடகப் பேச்சாக இருக்கிறது!

**பிரபல** ஹொலிவுட் நடிகையான நிக்கொல் கிட்மேன் அண்மையில் திருமணம் செய்து கொண்டார். பிரபல கன்ட்றி பாடகரான சீன் அர்பனுக்கும் இவருக்கும் இத்திருமணம் நடந்தது.




இதற்கு முன்பதாக கிட்மேன் பிரபல நடிகர் டொம் குருஸ் என்பவரைத் திருமணம் செய்திருந்தார். பின்னர் 2002ஆம் வருடம் விவாகரத்துச் செய்து கொண்டார்.

டொம் குருஸ் அதன் பின்னர் இளம் நடிகையான கெத்தீ ஹோம்ஸ் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார்.

இதற்கு பழிவாங்கும் நோக்கிலேயே கிட்மேன் தற்போது இரண்டாவது திருமணம் செய்து கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. நல்லதொரு பழி வாங்கல்!

## கலையே!...

**ரசிகர்கள்** காணுகின்ற தனது தோற்றமானது உண்மையானதல்ல என பிரபல பாடகி ஜெனிபர் லோபஸ் கூறுகின்றார்.



தான் வாழ்க்கையைப் பற்றி அறியாத, பணத்துக்கு அடிமையான, ஆட்டம் போடுகின்ற ஒரு பெண் என்றே பலரும் நினைக் கிறார்கள் எனக் கூறும் லோபஸ் தான் அப்படியான ஒரு பெண்ணல்ல என்றும் தானொரு கலையம்சம் பொருந்திய கலைஞி என்றும் கூறுகிறார்.

எப்டியோ, 'கலையோடு' இருந்தால் சரி!




**ஹொலிவுட்** நடிகரும், பாடகருமான வில் ஸ்மித், அண்மையில் இந்தியாவுக்கு வருகை தந்திருந்த போது பொலிவுட் நடிகை ஐஸ்வர்யா ராயைப் பற்றியும் பேசினார்.

ஐஸ்வர்யா விரும்பினால், அவருக்கு அமெரிக்க குடியுரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் தான் தயார் என்றும் கூறினார். இதற்கு ஐஸ்வர்யா மௌனம் சாதிக்கவே, இன்னுமொரு யோசனையையும் ஸ்மித் முன்வைத்தார்.

அதாவது, தான் நடிக்கும் புதிய படத்தில் ஒரு பாத்திரம் வழங்கப் போவதாகக் கூறினார்.

இருந்தாலும் ஐஸ்வர்யா தற்போது அதிகம் பிஸியாக இருப்பதால் அதுவும் கைகூடவில்லை.

இதனால், தூண்டில் போடப்பட்டும், இரை அகப்படவில்லை என்று பொலிவுட் வட்டாரங்கள் கூறுகின்றன.

# பூலான் தேவியின் மறுபக்கம்

**முன்னாள்** கொள்ளைக்காரி பூலான்தேவி "எம்.பி." மர்ம மனிதர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். "எம்.பி." யாகி இருந்ததால் பூலான்தேவிக்கு டெல்லியில் பாராளுமன்றத்துக்கு அருகே உள்ள அசோகா ரோட்டில் 44ஆம் எண் வீடு



ஒதுக்கப்பட்டு இருந்தது.

பாராளுமன்ற கூட்டம் நடைபெறும் காலங்களில் பூலான்தேவி அந்த வீட்டில் தங்கி இருந்து சபைக்குச் சென்று வருவது வழக்கம்.

2001ஆம் ஆண்டு ஜுலை மாத இறுதியில் பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கி நடைபெற்று வந்தது. எனவே, பூலான்தேவி டெல்லி வந்து பாராளுமன்ற கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.



### முகமூடி மனிதர்கள் சுட்டனர்

25.07.2001 அன்று பாராளுமன்ற



கூட்டத்துக்கு சென்ற பூலான்தேவி பகல் 1.30 மணி அளவில் மதிய சாப்பாட்டிற்காக காரில் வீடு திரும்பினார். அவருடன் பாதுகாவலர் பல்வீந்தர்சிங் சென்றார்.

வீட்டு முன் சென்று கார் நின்றதும் பூலான்தேவி இறங்கினார். 'கேட்'டை திறப்பதற்காக பல்வீந்தர்சிங் முன்னால் சென்றார். அப்போது. திடீரென்று முடிமுடி அணிந்த 3 மர்ம மனிதர்கள் பூலான்தேவியை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர்.

இதைப் பார்த்ததும் பல்வீந்தர் சிங், மர்ம மனிதர்களை நோக்கி திருப்பிச் சுட்டார். ஆனால் அவரையும் அந்த மர்ம மனிதர்கள் சுட்டு வீழ்த்திவிட்டு தப்பி ஓடிவிட்டனர்.

### மரணம்

துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டு, வீட்டிற்குள் இருந்த வேலைக்காரர்கள் ஓடிவந்தனர். இரத்த வெள்ளத்தில் கிடந்த பூலான்தேவியையும், பாதுகாவலர் பல்வீந்தர்சிங்கையும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.

ஆனால், வழியிலேயே பூலான்தேவியின் உயிர் பிரிந்து விட்டது. டாக்டர்கள் பரிசோதித்து விட்டு, ஏற்கனவே அவர் இறந்து விட்டதாக அறிவித்தனர். கணவரும், உறவினர்களும் கதறி அழுதனர்.

### 5 குண்டுகள்

பூலான்தேவியின் உடலில் 5 குண்டுகள் பாய்ந்து இருந்தன. அதில் 3 குண்டுகள் தலையை ஊடுருவி இருந்தன. 2 குண்டுகள் மற்ற இடங்களில் பாய்ந்து இருந்தன.

பாதுகாவலர் பல்வீந்தர் சிங் கவலைக்கிடமான நிலையில் இருந்தார். அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தனர்.

### கண்டனம்

பூலான்தேவி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் மற்றும் அனைத்துக் கட்சி தலைவர்களும் கண்டனம் தெரிவித்தனர்.


பூலான்தேவியின் சொந்த தொகுதியான மிர்சாபூரில் வன்முறை சம்பவங்கள் நடந்தன.

உத்தரபிரதேச மாநிலத்தில் 'முழு அடைப்பு' நடந்தது.

### காரில் வந்த கொலையாளிகள்

பூலான்தேவியைக் கொன்ற மர்ம மனிதர்கள் 3 பேரும் பச்சை நிற மாருதி காரில் வந்தனர். பூலான்தேவியை எதிர்பார்த்து அவரது வீட்டு அருகில் காத்திருந்தனர். பூலான்தேவி காரை விட்டு இறங்கியதும், அவரைச் சுட்டு விட்டு, அதே காரில் தப்பிச் சென்றனர். பொலிஸார் பின் தொடர்ந்து வந்து பிடித்துவிடக் கூடாது என்பதற்காக, ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்றதும், அந்தக் காரை ரோட்டில் அனாதையாக விட்டுவிட்டு, "ஆட்டோ"வில் ஏறிச் சென்று விட்டனர்.

கொலையாளிகள் விட்டுச் சென்ற காரை பொலிஸார் கைப்பற்றினர். காருக்குள் 2 கைத்துப்பாக்கிகள் 9 வெற்றுத் தோட்டாக்கள், சுடப்படாத குண்டுகள் 2, முகமூடிகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.



பூலான்தேவி அவரின் கணவர் உமத்சிங் உடன்...

கைப்பற்றப்பட்ட அந்த குண்டுகள், வெளிநாட்டுத் துப்பாக்கிகளில் பயன்படுத்தக்கூடியவை. எனவே கொலைக்கு வெளிநாட்டு துப்பாக்கியை பயன்படுத்தி இருப்பது தெரியவந்தது.

### உடல் தகனம்

பிரேதப் பரிசோதனையின் பின்னர், பூலான்தேவியின் உடல் அவருடைய வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டது. பிரதமர் வாஜ்பாய் சென்று, மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். பூலான்தேவியின் தாயார் மூலாதேவிக்கு ஆறுதல் கூறினார்.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, முன்னாள் பிரதமர் விபி.சிங், சமாஜ்வாடி தலைவர் முலாயம்சிங் யாதவ் உட்பட பல்வேறு கட்சி தலைவர்களும் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் பூலான்தேவியின் உடல் தனி விமானத்தில் வரணாசி கொண்டு செல்லப்பட்டது. அந்த விமானத்தில் பூலான்தேவியின் தாயார் மூலாதேவி, உணவர் உமத்சிங், சகோதரி முண்ணி, ருக்மணி, மைத்துனர் ஹர்கோவிந்த் ஆகியோரும் சென்றனர்.

வரணாசி போய் சேர்ந்ததும் பூலான்தேவியின் உடல் வேன் மூலம் மிர்சாபூருக்கு கொண்டு செல்லப்பட்டு சுடுகாட்டில் தகனம் செய்யப்பட்டது சிதைக்கு கணவர் உமத்சிங் தீ மூட்டினார்.

(பக்கம் புரளும்)

# 2ஆம் உலகப் போர் 15

**ஹிட்லர்** 'தோல்வியடைந்து தற்கொலை செய்து கொண்டதும், ஜெர்மனியை நேசநாடுகள் பங்கு போட்டுக் கொண்டன. மேற்கு ஜெர்மனி என்றும், கிழக்கு ஜெர்மனி என்றும் இரண்டு நாடுகளாக பிரிக்கப்பட்டன. அமெரிக்க, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளின்




சார்புடைய அரசாங்கம் மேற்கு ஜெர்மனியிலும், ரஷிய சார்புடைய அரசாங்கம் கிழக்கு ஜெர்மனியிலும் அமைக்கப்பட்டன. ஜெர்மனி தலைநகரமான பெர்லின், குண்டு வீச்சின் காரணமாகப் பாழடைந்துபோய் விட்டது.

அந்த நகரமும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு மேற்கு பெர்லின் மேற்கு ஜெர்மனியிலும், கிழக்கு பெர்லின் கிழக்கு ஜெர்மனியிலும் சேர்க்கப்பட்டன.. 1950இல் கிழக்கு ஜெர்மனியில் இருந்து ஏராளமான பேர் மேற்கு ஜெர்மனிக்கு அகதிகளாக குடியேறினார்கள். அகதிகள் போவதற்கு பெர்லின் நகரம்தான் வழியாகப் பயன்பட்டது. எனவே, அகதிகள் போவதை தடுக்க கிழக்கு பெர்லினையும், மேற்கு பெர்லினையும் பிரிக்கும் வகையில் பெரிய சுவர் ஒன்றை கிழக்கு ஜெர்மனி அரசாங்கம் அமைத்தது.

பெர்லின் சுவர் என்று இது அழைக்கப்பட்டது. அமெரிக்காவின் உதவியுடன் மேற்கு பெர்லின் நகரம் புதுப்பிக்கப்பட்டது. உலகின் அழகிய நகரங்களில் ஒன்றாக அந்த நகரம் கம்பீரமாக எழுந்தது. ஆனால் கிழக்கு பெர்லின் நகரம் மிக மிக மெதுவாகவே வளர்ச்சி அடைந்தது. இரண்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தாலும் ஜெர்மனி மக்கள் உணர்ச்சியால் ஒன்றுபட்டவர்கள்தானே. இரண்டு நாடுகளும் ஒன்றாக இணைய வேண்டும் என்று விரும்பினார்கள். இரண்டு ஜெர்மனிகளையும் ஒன்றாக இணைப்பது என்று இரு நாடுகள் இடையேயும் 1990இல் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி 1990 அக்டோபரில் 3ஆம் திகதி இரு ஜெர்மனிகளும் ஒரே நாடாக இணைந்தன.

பெர்லின் சுவர் இடித்து தள்ளப்பட்டது. அணுகுண்டு வீச்சினால் பேரழிவுக்குள்ளான ஜப்பான் அந்த சோதனைகளை எல்லாம் எதிர்கொண்டு பொருளாதார துறையில் படிப்படியாக முன்னேறியது. ஜப்பானிய மக்களின் அயராத உழைப்பினால், இன்று உலகிலேயே எலக்ரானிக் துறையில் தலைசிறந்து விளங்குகிறது. உலகின் பணக்கார நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது. போரின் போது அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுடன் தோளோடு தோள் நின்று ஹிட்லரை எதிர்த்து போர் புரிந்த ஸ்டாலின், பின்னர் ரஷியாவில் தன் எதிரிகளை ஒழித்துக்கட்டிவிட்டு சர்வாதிகாரியானார். ரஷியாவில் நடப்பது வெளி உலகுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டன. ரஷியாவில் இரும்புத்திரை போடப்பட்டு விட்டதாக சர்ச்சில் வர்ணித்தார்.

இரண்டாவது உலகப் போரின்போது இந்தியாவில் சுதந்திரப் போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. போர் முயற்சிகளுக்கு இந்தியாவின் ஆதரவை இங்கிலாந்து கோரியது. போர் முயற்சிகளில் பிரிட்டனுக்கு இந்தியா ஆதரவாக இருந்ததால் இந்தியாவுக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் டொமினியன் அந்தஸ்த்து கொடுக்கப்படும் என்று அறிவித்தது. இது சம்பந்தமாக 1942 மார்ச் மாதத்தில் இங்கிலாந்து மந்திரி கிரிப்ஸ் இந்தியாவுக்கு வந்து காந்தியையும் மற்ற தலைவர்களையும் சந்தித்துப் பேசினார். ஆனால் பேச்சுவார்த்தை வெற்றி பெறவில்லை. உலகப்போரில் ஹிட்லருடன் சேர்ந்திருந்த ஜப்பான், தொடக்கத்தில் பல வெற்றிகளைப் பெற்றது. பிரிட்டன் வசம் இருந்த மலாயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளைக் கைப்பற்றியது. இந்தியா மீதும் ஜப்பான் படையெடுக்கலாம் என்றும் கருதப்பட்டது.





இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி இருந்து வருவதால் ஜப்பானியர் இந்த நாட்டின் மீது படையெடுக்கும் அபாயம் உள்ளது. எனவே, இந்தியாவில் இருந்து பிரிட்டிஷார் உடனே வெளியேற வேண்டும் என்று காந்தி அறிக்கை வெளியிட்டார். வெள்ளையனே வெளியேறு என்று புகழ் பெற்ற தீர்மானத்தை 1942 ஒகஸ்ட் மாதத்தில் காங்கிரஸ் நிறைவேற்றியது. எனினும் இந்திய இளைஞர்கள் பெருமளவில் இராணுவத்தில் சேர்ந்து போர் முனைக்குச் சென்றார்கள். குறிப்பாக ஜப்பானை எதிர்த்துப் போர் புரிய சிங்கப்பூர், மலாயா, பர்மா ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்ட படைகளில் இந்திய இளைஞர்கள் அதிக அளவில் இருந்தனர். யுத்த காலத்தில் இந்தியாவில் கடும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. உணவுக்கு ரேஷன் கொண்டு வரப்பட்டது.

தமிழ்நாட்டில் அரிசி ரேஷன் அமுலாகியது. வாரா அரிசியின் அளவு குறைக்கப்பட்டு கோதுமை, மக்காச்சோளம் ஆகியவை தரப்பட்டன. கடைகளில் ரொட்டி வாங்க வேண்டும் என்றால் கூட அரிசியை குறைத்துக் கொண்டு அதற்கு சமனான கூப்பனை பெற்றுக் கொண்டு அதைக் கொடுத்துத்தான் ரொட்டி வாங்க முடியும். சென்னை, மதுரை, திருச்சி, கோவை, முதலிய நகரங்களில் பாதுகாப்பு குழிகள் வெட்டப்பட்டன. அடிக்கடி அபாயச் சங்கு ஊதி ஒத்திகை பார்ப்பார்கள். அப்போது ரோட்டில் நடந்து போகிறவர்கள் பதுங்கு குழிகளில் ஒழிந்து கொள்ள வேண்டும்.

இரவில் விளக்கு வெளிச்சம் எதிரி விமானங்களுக்குத் தெரியக் கூடாது என்பதற்காக, தெருவிளக்குகளுக்கு மேல் கறுப்பு மூடிகள் போடப்பட்டன. கச்சா பிலிமுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதால், சினிமா படங்களை நீளமாகத் தயாரிக்கத் தடை போடப்பட்டது. 13 ஆயிரம் அடிக்குள் தயாரிக்க வேண்டும் என்று உத்தரவு விடப்பட்டது. இந்த உத்தரவு நல்லதாகவும் அமைந்தது. படங்களில் பாடல்கள் குறைக்கப்பட்டு விறுவிறுப்பு கூடியது. மிகப்பெரிய வெற்றிப் படங்களான ஹரிதாஸ், ஸ்ரீவள்ளி, நாம் இருவர் ஆகியவை இந்தக் கால கட்டத்தில் குறைந்த நீளத்தில் தயாரிக்கப்பட்டவைதான்.

(தொடரும்)





நிலத்தின் கீழ்பல் லுலோகங்கள் ஆயினை
நீரின் கீழெண் ணிலாநிதி வைத்தனை
தலத்தின் மீது மலையும் நதிகளும்,
சாருங் காடுஞ் சுனைகளும் ஆயினை.

- சுப்பிரமணிய பாரதியார்

## குரங்கு பாசம்



கா கருங்குளம் என்னும் ஊரில் ஒரு ராஜாவும், ராணியும் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஏழு ஆண் குழந்தைகள் இருந்தனர். ஆனால் ஆசைக்கு ஒரு பெண் குழந்தை இல்லை என்ற ஏக்கம் அவ்விருவருக்கும் இருந்து வந்தது. சில காலம் சென்றதும் ராணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்து இரண்டு மணி நேரத்தில் ராணியின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டு அவள் இறந்தாள்.

பிறகு ராஜாவும் இரண்டு ஆண்டுகள் சென்று இறந்து விட்டார். தன் அப்பா, அம்மா ஆசையாக வளர்க்க வேண்டும் என்று நினைத்த தன் தங்கையை அவர்கள் நினைத்தது போல் வளர்க்க வேண்டும் என்று எண்ணிய அந்த ஏழு பிள்ளைகளும், தன் தங்கையை தாய், தந்தை இல்லாத குறையின்றி வளர்த்தார்கள். அவளுக்கு கண்மணி என்று பெயர் சூட்டி கண் இமைக்குள் வைத்து கவனித்தார்கள். அவள் தலைமுடியையே முத்தால் அலங்கரித்தார்கள். அவ்வளவு செல்லமாக வளர்த்தார்கள்.

கண்மணி ஒரு குரங்கு வளர்த்தாள். அதனை குரங்கு என்று நினைக்காமல் தன் எட்டாவது அண்ணன் போல் பாசத்தைக் காட்டி வளர்த்தாள். அதுவும் அவளை தன் தங்கை போல் பாவித்து வந்தது. சில ஆண்டுகள் கழிந்தது. கண்மணி பெரியவள் ஆனாள். ஒருநாள் அவர்கள் சொந்தக்காரர் தன் வீட்டு திருமண அழைப்பிற்கு வரும்படி அழைத்தார். அவர்களும் வண்டி கட்டிச் சென்றனர்.

அவர்கள் வண்டியில் செல்லும்போது தன் குரங்கையும் அழைத்துச் சென்றாள் கண்மணி. வழியில் ஒரு வேதாளம் வந்து வண்டியை மடக்கியது. கண்மணியை பார்த்தது. அவள் அண்ணன்களிடம் உங்கள் தங்கை மிகவும் அழகாக இருக்கிறாள்; அவளை எனக்குத் திருமணம் செய்து தாருங்கள் என்று கேட்டது. அந்த வேதாளத்தைப் பார்க்கவே அவர்களால் முடியவில்லை. அப்படி ஒரு அகோரமான தோற்றம் அந்த வேதாளத்துக்கு. என்ன செய்வது என்றே புரியவில்லை.

அந்த ஏழு அண்ணன்களுக்கும் உடனே ஒரு யோசனை தோன்றியது. அந்த வேதாளத்தைப் பார்த்து என் தங்கையை உனக்கு திருமணம் செய்து தர சம்மதித்து விட்டோம். ஆனால் அவளுக்கு தீராத தலைவலி.

**பாப்பா முரசு சிறுகதை**

ஆகையால் அவளுக்கு மருந்து வாங்க வேண்டும் என்று கூறினார்கள். என்ன மருந்து என்று அவ்வேதாளம் கேட்க, அந்த ஏழு அண்ணன்களும் பல்லுக்கு மெதுவான கல்லும் கொண்டைக்கு மெதுவான பூவும் என்று கூறினர். அம்மருந்தையே நாங்கள் தேடி திரிகிறோம்.

அது இல்லாவிட்டால் எங்கள் தங்கை உயிருக்கே ஆபத்து வரும் என்று கூற, உடனே அந்த வேதாளம் நான் அந்த மருந்து வாங்கிக் கொண்டு வருகிறேன். ஆனால் நீங்கள் தப்பிக்க என்னை ஏமாற்ற முயன்றால் உங்கள் அனைவரையும் கொன்று விடுவேன் என்று கூறி விட்டு, மருந்து வாங்கச் சென்றது. உடனே அந்த ஏழு பேரும் தன் தங்கையைக் கூட்டிக் கொண்டு அவ்வூரில் உள்ள அரண்மனைக்குச் சென்றனர்.

ஆனால் குரங்கு அங்கேயே இறங்கி அவசர அவசரமாக வைக்கோல்களைத் திரட்டி அதற்கு தீவைத்து எரித்துக் கொண்டு பக்கத்தில் இருந்து அழுதபடி இருந்தது. மருந்து வாங்கப்போன வேதாளம் வந்தது. எங்கே கண்மணி; நீ ஏன் அழுது கொண்டிருக்கிறாய் என்று வினவியது. உடனே அக்குரங்கு நீ மருந்து வாங்கி வர நேரமானதால் என் தங்கை தலைவலி தாங்க முடியாமல் இறந்து விட்டாள். அவளைத்தான் எரித்துக் கொண்டிருக்கிறோம் என்றது.

அண்ணன்கள் ஏழு பேரும் மனசு சரியில்லாமல் அழுது கொண்டு வீட்டிற்குச் சென்றனர். ஆனால், என்னால் தாங்க முடியாது இதோ நானும் என் தங்கையுடன் சேர்ந்து இதில் விழுந்து சாகப் போகிறேன் என்றதும் சற்றும் யோசித்து பார்க்காத வேதாளம், நீ ஏன் சாகப் போகிறாய் அவளை மணக்க நினைத்த நான்தான் சாகவேண்டும் என்று சொல்லியபடி தீயில் விழுந்தது. பின்பு அந்த குரங்கு பயந்து கொண்டிருந்த கண்மணியிடமும் அவள் அண்ணன்களிடமும் விஷயத்தைக் கூறியது.

யாராலும் சமாளிக்க முடியாத அந்த வேதாளத்தைக் குரங்கு கண்மணியிடம் உள்ள பாசத்தினாலும் அறிவுக் கூர்மையினாலும் வென்றது. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்?

## ஆத்திசூடி

### புகழ்ந்தாரைப் போற்றி வாழ்

நீ உலகம் போற்றிப் புகழும் அறிவுடைய பெரியோர்களை மதித்து அவர்களின் அறிவுரைகளைக் கேட்டுத் தெளிந்து அதனை வாழ்வில் கடைபிடி.

-ஔவையார்


எஸ். நிரஞ்சலா, கண்டி.

## கரும்பு


கழியாய்க் கழியாய்க் கரும்பு
கட்டுக் கட்டாய்க் கரும்பு
கழனிச் சேற்றில்
விளைந்த — செங்
கரும்பு கரும்பு கரும்பு.

கட்டிக் கட்டிக் கரும்பு
கடித்துத் தின்னும் கரும்பு
வெட்டித் துண்டுப்போட்டு
— கடையில்
விலைக்கு விற்கும் கரும்பு

வெல்லம் மிட்டாய்
சர்க்கரை
விரும்பிச் செய்யும் கரும்பு
நல்ல பொங்கல் நாளில்
— படையல்
நடுவில் வைக்கும் கரும்பு



## அதிசய உலகம்




**சிறுத்தை** இன விலங்குகள் பெரும்பாலும் நிலத்தில்தான் மான், காட்டெருமை, போன்றவற்றை வேட்டையாடும் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் ஜாகுவார் இன சிறுத்தைகள் நீரிலும் இரையைத் துரத்தி வேட்டையாடும் திறன் கொண்டவை.

இரை விலங்கு, நீர் அருந்த நீர்நிலைக்கு வரும்போது அவற்றை துரத்தும். இரை விலங்கு புத்திசாலித்தனமாக தண்ணீரில் குதித்து தப்பி விடலாம் என்று நினைத்தால் அது வீணாகிவிடும். ஏனென்றால் எவ்வளவு வேகமாக நீந்தினாலும் ஜாகுவார் சிறுத்தை அதைவிட வேகமாக நீந்தி தண்ணீருக்குள்ளேயே இரையை மடக்கி விடும்.

பெரிய இரை கிடைக்காவிட்டால் ஜாகுவார் கவலைப்படுவதில்லை. எனென்றால் சின்ன எலி கிடைத்தால் கூட அதை பிடித்து தின்று விடும். இதேபோல் பூச்சிகளையும் பிடித்து தின்று பசியைப் போக்கிக் கொள்ளும்.


**பெரும்பாலான** பாம்புகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் ரகத்தைச் சேர்ந்தவை. சிலப் பாம்புகள் குட்டி போடுகின்றன. படத்தில் நீங்கள் பார்க்கும் அபூர்வ பாம்பான கிலுகிலுப்பைப் பாம்பு குட்டி போடக்கூடியது.

ஒரு பெண் பாம்பு ஐந்து முதல் ஏழு குட்டிகளைப் போடும். சரி இதற்கு ஏன் கிலுகிலுப்பைப் பாம்பு என்று பெயர் வந்ததாம்?... வேறொன்றுமில்லை. இதன் வாலில் இருந்து கிலுகிலுப்பையில் இருந்து வரும் ஒலி போன்ற சத்தம் எழும். அதனால் அதுவே பெயராகி விட்டது. கடுமையான விஷம் கொண்ட இந்த பாம்புகளின் குட்டிகள் லேசுபட்டவை அல்ல. பிறந்த அன்றே இவை கடித்தால் உயிர் போய்விடும். ஒரு எலியை இதன் விஷம் ஒரு நிமிடத்தில் கொன்று விடும்.

பெரிய மிருகங்களை எச்சரிக்கை செய்வதற்காகவும் இவை ஒலியெழுப்புகின்றன. இந்த கிலுகிலுப்பைப் பாம்புகள் தென் அமெரிக்கா கண்டத்தில் உள்ள அரூபா தீவுகளில் அதிகம் காணப்படுகின்றன.




## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 23.05.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 644**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 642

**பரிசுக்குரியவர்:**
செல்வி. ஏ.ஜே.பாத்திமா பஸ்னா,
61/1A/1 மகாபுத்கமுவ. கொடிகாவத்த.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செல்வி து.மதுரா. தரம் 5B, நிலஅளவையாளர் விடுதி, தியத்தலாவ. | சகிரா நியாஸ், தரம் 1, கொட்டிகோட், பலபத்வல, மாத்தளை. |
| கி.சதர்சன், திருவேரகம், தும்புறுகிரிய வீதி, ஹட்டன். | ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| பிர்னா முஜாஹித், மக்குளூற்று, வெள்ளைமணல். | பா.அபிலாஷி, தரம் 2, 18, வெலிங்டன் அடை வீதி, திருகோணமலை. |
| ஆஷிக் இலாஹி, 100, சங்கமித்த மாவத்தை, கொழும்பு - 13. | ஆகாஸ், தரம் 2, பள்ளிமுனை, மன்னார். |
| சாஜிதா, 3A, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லரி, கொழும்பு - 12. | எம்.ஷர்பீன், 46 வைத்தியா வீதி, தெகிவளை. |

## உங்கள் பொது அறிவு எப்படி?

### தெரிந்து கொள்ளுங்கள்

1. அமெரிக்காவின் தேசிய விளையாட்டு - பேஸ் போல்.

2. உலகில் மிக அதிக அளவு விற்பனையாகும் பொருள் பெட்ரோல். இரண்டாவது கோப்பி.

3. மிகவும் ஒளிமயமான நட்சத்திரம் என்று அழைக்கப்படுவது சீரிஸ்.

4. ராஜா ரவிவர்மா வரைந்த 'தந்த நிறச் சேலையில் இளம் பெண்' என்ற ஓவியம் 1977இல் லண்டனில் நடந்த ஏலத்தில் 3 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. அதன் இப்போதைய மதிப்பு 25 லட்சம் ரூபாய்.

5. உலகின் உயரமான மிருகமான ஒட்டகச் சிவிங்கியால் இரட்டை மாடி பஸ்ஸின் மேல் கூரையை சர்வ சாதாரணமாகப் பார்க்க முடியும்.


6. ஏழு குன்றுகளின் நகரம் என்று அழைக்கப்படுவது ரோம்.

7. மக்கள் வாழத் தகுந்த நில அமைப்புக் கொண்ட கிரகம் நான்கு - மெர்குரி, வீனஸ், பூமி, மார்ஸ்.




**கிட்டாரில்** பல வகை உண்டு அதுபோல இங்குள்ள கிட்டாரோ மோபோ எனப்படும் கிட்டார் வகையாகும். மோபோ எனப்படுவது கறுப்பு இன மக்களின் இசையாகும். இக் கருவியினை வாசிக்கத் தெரிந்தவர்கள் சிலரே. கறுப்பு இனத்தவர்களுக்கு உலகில் ஒரு அங்கீகாரம் கிடைத்த பின்னர் இவர்களின் இசையும் சேர்ந்து வளர்ந்து வந்தது. படத்தில் உள்ளவர் தனது 73 ஆவது வயதில் மோபோ இசைக்காக வழங்கப்படும் BB King எனும் பட்டம் பெற்றவராம். பார்த்தீர்களா? எவ்வளவு முதுமையில் இவருக்கு விருது கிடைத்துள்ளது என்று...








**எட்வர்ட்** டிம் டைம் வெல் எனப்படும் லண்டன் நாட்டைச் சேர்ந்த இந் நபர், திமிலங்கத்தை காப்பாற்றும் அமைப்பில் சேர்ந்து இருக்கும் முக்கிய பங்காளியாவார். அத்திலாந்திக் கடலில் காணப்படும் அதிகளவான திமிலங்களைச் சிலர் வேட்டையாடி வருகின்றனர். இதனால் இவற்றின் தொகை குறைவடைந்து வருகின்றது. குடித்தொகையொன்று அதிக கூடியளவில் குறைவதாலும், கூடுவதாலும் சூழல் மாசடையும் என்பதால், திமிங்கிலத்தின் குடித்தொகையை நிலையான மட்டத்தில் பேணுவதற்காகவே இவ் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**எங்கும்** கணனி எதிலும் கணணி என்ற நிலை இப்போது உருவாகி விட்டது. என்பது எல்லோருக்கும் தெரியும் தான். புதிய புதிய கணனி வகைகள் வந்து குவிந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் தற்போது வெளிவந்துள்ள புதிய ரக கணனியே இது இன்டெல் நிறுவனம் தயாரித்துள்ள இக் கணனியின் திரையை நாம் வேண்டிய உயரத்திற்கு உயர்த்திக் கொள்ளலாமாம். லப்டப் கணனிகளில் பரீசிலிக்கப்பட்ட இது வெற்றிகரமாக செயல்பட்டதாம்.


**டாங்கிகளைப்** போருக்கு பயன்படுத்தினால் எதிரிப்படை சிறிது பயப்படும் என்பதில் எந்த வித சந்தேகமுமில்லை. இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனி வீரர்களால் அதிகளவில் பயன்படுத்தப்பட்ட டாங்கிகளால் தான் ரஷ்யப் படைகள் நிலைகுலைந்தது என்பது இன்னுமொரு தகவல். ஆனால் இங்குள்ளதோ ரஷ்ய நாட்டு தயாரிப்பான T - 80 எனும் டாங்கியாகும். இது 12.5 செ.மீ. அளவுடைய துப்பாக்கி ஏவுகளைகளை காவிக்கொண்டு செல்லுமாம். இது பல ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு செல்லுமாம். அழிவுக்காக பார்த்தீர்களா? எதையெல்லாம் செய்கிறார்கள் என்று....




## குலுக்காத கார்

**புது** ரகங்களில் விதவிதமான கார்கள் தற்போது பாவனைக்கு வந்துள்ளது அனைவரும் அறிந்ததே. ஆயினும் இங்குள்ள கார் மிகவும் வித்தியாசமான கார். ஃபோர்ட் நிறுவனம் தயாரித்துள்ள இக் கார் மிகவும் எடை குறைந்ததாகும். இதன் என்ஜின் டீசல் மூலமாக இயங்கக் கூடியது. இக் காரின் 4 சில்லுகளும் மிகவும் மெதுவானது. இதனால் இதில் பயணிக்கும் போது சற்றுக் கூட குலுக்கம் உணரப் படாதாம்



**டன் லப்** எனப்படும் டயர் தயாரிக்கும் நிறுவனம் தனது டயர்களைச் சந்தைப்படுத்த புதிய யுக்தி ஒன்றை கையாண்டுள்ளது. அதாவது, மிகப் பெரியளவிலான டயர் ஒன்றினை தயார் செய்துள்ளது. இந்த டயர் கிட்டத்தட்ட 100 மீட்டர் விட்டம் கொண்டதாம். இதனை சுமார் 81 பேர் 100 மீட்டர் உருட்டி சாதனை படைத்துள்ளார்கள். இதுவே இன்று வரை தயாரிக்கப்பட்ட மிகப் பெரிய டயர் என்று கின்னஸிலும் இடம் பெற்றுள்ளது.





பரத் - கோபிகா
எம்டன் மகள்

# சோனியாவின் மிரட்டல்!

**கல்யாணத்திற்கு** 'கண்ணாடிக் காதலரின்' சம்மதத்தை வாங்க நூதன வழியை மேற்கொண்டுள்ளார் சோனியா அகர்வால்.

நடித்த முதல் படத்திலேயே செல்வராகவனுடன் காதல் கொண்ட சோனியா அகர்வால் அதன் பின்னர் அதிக படங்களில் நடிப்பதைத் தவிர்த்தார்.

காதலை டெவலப் செய்வதில் ஆர்வம் கொண்டார். வந்த வாய்ப்புகளையும் வேண்டாம் என்று நிராகரித்து வந்தார்.

காதலரின் அனுமதியோடு ஒரு சில படங்களில் மட்டுமே தலை காட்டினார். இதனால், நடிக்க வந்து இத்தனை காலம் ஆகியும் விரல் விட்டு எண்ணும் அளவிலான படங்களிலேயே நடித்துள்ளார் சோனியா.

செல்வராகவனும், சோனியாவும் எப்போது கல்யாணம் செய்யப் போகிறார்கள் என்ற கேள்வி எழும்போதெல்லாம் இருவரும் ஏதாவது ஒரு பதிலை சொல்லி சமாளித்து வந்தனர்.

இரு வீட்டாரும் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்து விட்ட நிலையிலும், செல்வராகவனின் இழுத்தடிப்பு மற்றும் கடுகடுப்பு காரணமாக நொந்து நூலாகி நூடுல்ஸ் ஆகி வருகிறார் சோனியா.

இடையில் சோனியாவைக் கல்யாணம் செய்து கொள்வதாக செல்வராகவன் ஓ.கே. சொல்லி விடவே, நடிக்க ஒப்பந்தமான ஒரு படத்திலிருந்து சோனியா விலகினார்.

ஆனால் செல்வா மீண்டும் 'ஜகா' வாங்கவே கடுப்பாகிப் போனார் சோனியா.

இந்நிலையில் நடப்பது நடக்கட்டும் என்று 'திருட்டுப் பயலே' படத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு சூப்பர் கிளாமர் காட்டி நடித்தார் சோனியா. டு பீஸ் உடையில் எல்லாம் வந்து குதியாட்டம் போட்டார்.

சோனியாவின் கவர்ச்சி களியாட்டம் செல்வராகவனின் வீட்டினரை எரிச்சலாக்கியுள்ளதாம்.

அதிர்ந்து போன அவர்கள், என்னம்மா இப்படிப் பண்ணிப்புட்டே என்று சோனியாவை கூப்பிட்டுக் கேட்க, உங்க பையன் தெளிவான பதில் தர்ற வரை தான் எனக்கு தோணுகிற மாதிரி நடிக்கப் போறேன்.

அவரை விரைவில் உருப்படியான பதிலைச் சொல்லச் சொல்லுங்கள் என்று கடுப்பான பதிலைக் கொடுத்துவிட்டு வந்துவிட்டாராம் சோனியா.




வடிவேலு
இம்சை அரசன் 23ஆம் புலிகேசி

---

**போ**லிஸ், கோர்ட், கேஸ் என்று மோதலும் அலைச்சலுமாக இருந்த நடிகை அனாமிகாவும் சண்டைப்பயிற்சியாளர் ஜாக்குவார் தங்கமும் சமரசம் செய்து கொண்டனராம். இந்த சமரசத்திற்குக் காரணம் நெப்போலியனும் காமெடி நடிகர் செந்திலும் செய்துவைத்த பஞ்சாயத்துதான் என்கிறது விஷயமறிந்த வட்டாரம்.

---

**ஈ**ஸ்வரிராயை ஞாபகமிருக்கிறதா? இந்த ஆந்திர அம்மணி இம்புட்டுநாள் எங்கிருந்ததோ தெரியவில்லை. ஆனால் இப்பொழுது கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் சிம்பு நடிக்கும் 'சரவணா' படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறாருங்கோ.



விக்ரம் - த்ரிஷா பீமா

# நயனுக்கு வாசு வைத்த ஆப்பு!

**வளர்த்த** கடா மார்பில் பாய்ந்தது என்பார்கள். ஆனால் இயக்குனர் பி.வாசுவை நெஞ்சில் ஏறி மிதித்தே விட்டதாம் இந்தக் 'கடா'.

அவரால் 'சந்திரமுகி'யில் அடையாளம் காட்டப்பட்ட நயன்தாரா கடுப்படித்து இழுத்தடித்ததால், தான் இயக்கப் போகும் தெலுங்குப் படத்திலிருந்து நயன்தாராவைத் தூக்கி எறிந்துவிட்டு, அவருடைய இடத்தில் மீரா ஜாஸ்மினைப் போட்டுள்ளாராம் வாசு.

சரத்குமாரின் 'ஐயா' மூலம் அறிமுகமாகியிருந்தாலும் கூட 'சந்திரமுகி'தான் நயன்தாராவுக்கு வாழ்க்கையை தூக்கிவிட்டு சூப்பர் ஹீரோயினி ஆக்கியது.

அந்தப் படத்திற்குப் பிறகுதான் நயனாவுக்கு தமிழ் சினிமாவில் பெரும் கிராக்கி ஏற்பட்டது. தனக்குக் கிடைத்த இந்தப் புகழுக்கு இயக்குநர் வாசுதான் காரணம் என நயன்தாரா வாயாரப் பாராட்டி வந்தார்.

இந்நிலையில் வாசுவுக்கு தெலுங்கில் ஒரு படத்தை இயக்கும் வாய்ப்பு வந்தது. ஓல்டு கோல்டான என்.டி.ஆர். பாலகிருஷ்ணா ஹீரோவாக நடிக்க உருவாகும் இப்படத்தில் நயன்தாராவைதான் நாயகியாக்க வேண்டும் என்று ஹீரோ சொல்லிவிட்டார்.

வாசுவும், அட இது நம்ம பொண்ணாச்சே என்று அவரை உடனே ஒப்பந்தம் செய்தார். ஆனால் அவரது போக்கைப் பார்த்து வாசு வெறுத்துப் போய் விட்டாராம்.

படத்தின் கதை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து டிஸ்கஷனுக்குக் கூப்பிடும்போதெல்லாம் நயன்தாரா வராமல் இழுத்தடித்தாராம். மேலும் கொடுத்த கால்ஷீட்டிலும் சொதப்பல்ஸ் செய்துள்ளார்.

எப்போது தொடர்பு கொண்டாலும் நான் அங்கே இருக்கிறேன், இங்கே இருக்கிறேன் என்று பீலா விட்டுள்ளார் (அப்போதெல்லாம் சிம்புவுடன் இருந்திருப்பாரோ!)

பொறுத்துப் பார்த்த பி.வாசு பொங்கி எழுந்தார். நயன்தாராவை தூக்கி விட்டு அவரது கேரக்டரில் மீரா ஜாஸ்மினைப் போட்டுவிட்டார்.

இப்படத்தில் இன்னொரு நாயகியும் உண்டு. அவர் ஸ்னேகா. இதில் காமெடி என்னவென்றால் கிளாமர் ரோலுக்காகத்தான் ஸ்னேகாவை போட்டுள்ளார்களாம். கிளாமர் போர்ஷனையும் முழுக்க முழுக்க ஸ்னேகாவே ஆக்கிரமித்துக் கொள்கிறாராம்.



நவ்தீப் - அபர்ணா
நெஞ்சில் ஜில் ஜில்

# இடம் மாறும் சமிக்ஷா!

**அறிந்தும்** அறியாமலும், தொடர்ந்து மெர்க்குரிப் பூக்கள் ஆகியவற்றில் கவர்ச்சி திருவிளையாடல் நடத்திய ஜகஜக சமிக்ஷா, தமிழில் அதிக வாய்ப்புகள் இல்லாததால் கன்னடத்திற்கு இடம் மாறுகிறார்.

அறிந்தும் அறியாமலும் வந்த போது அதிகம் பேசப்பட்ட வர்கள் ஆர்யா, கூட நடித்த நவ்தீப் மற்றும் சமிக்ஷா.

புத்தம் புது மலரான சமிக்ஷாவின் திண திண கிளாமரை பார்த்து ரசிகர்கள் திக்கித் திணறித்தான் போனார்கள். முதல் படத்தில் முத்திரை பதித்த சமிக்ஷா, மெர்க்குரிப் பூக்களில் கிளாமர் கடலில் முழுக்க மூழ்கி ரசிகர் களைத் திணறடித்தார்.

கவர்ச்சி கரைபுரண்டோட நடித்தும் கூட சமிக்ஷாவுக்கு நிறையப் படங்கள் வந்து விட வில்லை. அம்மணி கையில்இப்போது இருப்பது மனதோடு மழைக்காலம் மட்டுமே.

கையில் படம் இல்லாவிட்டாலும் கூட சமிக்ஷாவைப் பத்தி சல புலவென்று ஏகப்பட்ட செய்திகள் வரத் தவறுவதில்லை.

அவரும் ஆர்யாவும் கிடுக்கிப் புடி நட்பில் இருப்பதாகவும், படு நெருக்கமான அவர்களது நட்பு குறித்தும் எக்குத்தப்பாக செய்திகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன.



ஸ்ரீகாந்த் - சம்வ்ருதா
உயிர்

---

'20-18' படம் எடுத்த இளம் டைரக்டர் இப்போது தன் தம்பியை வைத்து ஒரு படம் இயக்கி வருகிறார். இந்தப் படத்தின் நாயகிக்கு ஒரு வெளிநாட்டு நவீன செல்போன் ஒன்றை வாங்கிக்கொடுத்திருக்கிறாராம் டைரக்டர் தம்பி. பொழைக்கிற பொழப்ப விட்டுட்டு இப்படித் திரியிறாரே என்கிறார்கள் விஷயமறிந்தவர்கள்.

---

**தன்** கணவர் யார் என்று இன்னமும் வெளிப்படையாக கோலிவுட் இரசிகர்களுக்கு சொல்லாத மந்த்ரா, இப்போது ஐந்து மாத கர்ப்பமாக இருக்கிறார். ஒருவேளை குழந்தை ரிலீஸ் அப்ப கணவர் யார் என்பதை ரிலீஸ் பண்ணுவாரோ என்னவோ?

---

'குடைக்குள் மழை' மதுமிதா, காதல் வயப்பட்டிருக்கிறாரா என்று தெரியவில்லை. சமீபத்தில் திருப்பதிக்குப் போன மதுமிதா, கீழ் திருப்பதியிலிருந்து மேல் திருப்பதிக்கு நடந்தே சென்று பிரார்த்தனை செய்திருக்கிறார். எதற்காக இந்த பாதயாத்திரை? என்பது ஏழு கொண்டலவாடாவுக்கே வெளிச்சம்.



ஸ்ரீகாந்த் - பாவனா
கிழக்கு கடற்கரை சாலையில்



# லயா டும்... டும்...

**தெலுங்கில்** அறிமுகமாகி, தமிழில் பண்ணாரி அம்மன் என்ற படத்தின் மூலம் அறிமுகமானவர் லயா.

சொந்த ஊர் ஆந்திரா என்பதால் முதலில் களமிறங்கியது தெலுங்கில். அங்கு அவ்வளவாக முன்னுக்கு வர முடியாததால் தமிழ், மலையாளம், கன்னடம் என மாற்றி ரவுண்ட் அடித்தார்.

ரொம்ப காலமாய் நடித்து இதுவரை சுமார் 35 படங்களில் நடித்து விட்டாராம் லயா.

கேப்டனின் 'கஜேந்திரா' மூலம் தமிழில் ரீ-எண்ட்ரி கிடைத்தது. ஆனால் அதுவும் பெரிய அளவில் கைகொடுக்கவில்லை. மிகுந்த பாடுபட்டு சரத்குமார் நடித்த 'சாணக்கியா' படத்தில் செகண்ட் ஹீரோயின் ரோலை அமுக்கினார்.

அதில் மெயின் ரோலில் நடித்த நமீதா படம் பார்த்த எல்லோரையும் அள்ளிக் கொண்டு போய்விட, ஒப்புக்கு சப்பாணியாக வந்த லயா எடுபடாமலேயே போனார். அதன் பிறகு தமிழில் எந்தப் படமும் கிடைக்கவில்லை.

ரொம்ப நொந்து போய் இருந்தவருக்கு அழகிய தமிழே எனதுயிரே என்று ஒரு படத்தில் புக் ஆக வாய்ப்பு வந்தது. ஆனால், படத்தை பூஜையோடு நிறுத்திவிட்டுப் போய்விட்டார்கள்.



ரமேஷ் - நமீதா
நீ வேணும்டா செல்லம்

---

**யார்** சொன்னார்களோ....எவர் சொன்னார்களோ தெரியவில்லை. சமீபகாலமாக மீராஜாஸ்மின் தீவிரமான முகாம்பிகை தாயாரின் பக்தையாகிவிட்டார். பிறப்பில் கிறிஸ்துவான அம்மணி, அடிக்கடி முகாம்பிகை கோயில் போகக் காரணம் அவரது ஆஸ்தான இயக்குநர் லோகிதாஸாகத்தானே இருக்க முடியும். வேறு யார், எவராகவும் இருக்க முடியாது என்கிறது கோடம்பாக்கம்.

---

**பா**ரதிராஜா 'பரத்தை' வைத்து ஒரு படத்தை இயக்க பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

---

**குடிசை** ஜெயபாரதி இயக்கத்தில் சத்தியராஜ் ஒரு கலைப்படத்தில் கதாநாயகனாக நடிக்க ஒப்புக்கொண்டுள்ளார். குருஷேத்திரம் என பெயர் சூட்டப்பட்டிருக்கும் இந்தப் படத்தில் ரோஜாதான் கதாநாயகி.



ரிச்சட் - மதுமிதா
நாளை

விரைவில் இலங்கை தொலைக்காட்சிகளில் சிறந்த திரைக்கதைக்கான விருது பெற்ற இயக்குநர் 'காதல் கோட்டை' அகத்தியனின் தொலைக்காட்சி தொடர் அப்பாவுக்காக..

* நடித்த நடிக, நடிகைகள் :- நிழல்கள் ரவி, மோகன் சர்மா, சதீஸ், விஜி, மோனிக்கா, கௌதம், முரளிகுமார், யோகேஸ்வரி, லஷ்மிபிரியா, ராஜசேகர், தரணி, மனோகர், ஆர்.என்.ஆர், சுமதிஸ்ரீ, அச்சமில்லை கோபி, பாண்டு, பானுமதி, பாலு ஆனந்த், எம்.எல்.ஏ. தங்கராஜ், பிரேமி, வெங்கடேஷ்.

* பெண்களின் பிரச்சினைகளைச் சொல்லும் மனைவி, கல்கி, கோலங்கள், கணவருக்காக (மெட்டி ஒலி) ஆகிய சின்னத்திரைகளில் ஆண்களின் வாழ்க்கை நிலையும், சினிமா நடிகையின் வாழ்க்கை நிலையை சொல்லும் அற்புத தொலைக்காட்சி தொடர் அப்பாவுக்காக...

* கவிஞர் முத்துலிங்கம் பாடல் வரிகளில், பாடகி நித்தியஸ்ரீ ஆரம்பப்பாடலை பாடியுள்ளார். மிக விரைவில் இலங்கையில் ஒளிபரப்பாகவுள்ளது.

# ஒரு தொப்புள் சண்டை!

**நடித்து** ஒரு படம்தான் வந்திருக்கிறது. அதற்குள் 'பிகு பொன்னம்மா'வாக மாறி விட்டார் பாவனா. அப்படி நடிக்க மாட்டேன், இப்படி நடிக்க மாட்டேன் என்று கண்டிஷன் போடுகிறாராம் இந்த கேரளத்து லேட்டஸ்ட் ஒயிலாள்.

சித்திரம் பேசுதடி வந்தாலும் வந்தது, ஓடினாலும் ஓடியது, ஹிட் ஆனாலும் ஆனது. அதில் நடித்த பலருக்கு ஏகப்பட்ட கிராக்கி ஆகிவிட்டது.

ஒரு பக்கம் குத்துப் பாட்டுக்களில் குத்திக் கலக்க ஆரம்பித்துள்ளார் மாளவிகா. மறுபக்கம் கானா உலகநாதன் கலக்க ஆரம்பித்துள்ளார். ஹீரோயினாக நடித்த பாவனாவும் இப்போது பிசியான நடிகையாகி விட்டார்.

பிசியான நடிகையாக மட்டுமல்லாது பிகுவான நடிகை என்ற பெயரையும் பெற்று வருகிறார் பாவனா. அம்மணி கையில் இப்போது 3 படங்கள். கேரளாவில் சில படங்களில் நடித்துள்ள பாவனா, தமிழில் காட்டமாட்டேன் என்று கூறத் தொடங்கியுள்ளாராம்.

கிளாமர் எல்லாம் காட்ட மாட்டேன். ரொம்பத் தேவை என்றால் மட்டும் ஓரளவுக்கு ஓ.கே. என்று கூறுகிறாராம். சமீபத்தில் அவர் சம்பந்தப்பட்ட காட்சி ஒன்றை படமாக்கியுள்ளார்கள்.

அப்போது இயக்குநர் இந்தக் காட்சியில் உங்கள் தொப்புளில் வாய் வைத்து ஹீரோ முத்தம் கொடுப்பதாக காட்சி என்று கூறியுள்ளார்.

இதைக் கேட்டதும் டென்ஷனாகி விட்டாராம் பாவனா. என்னது, என் தொப்புளில் வாய் வைத்து முத்தம் கொடுப்பது போல காட்சியா என்று கோபமாகி விட்டாராம்.

இப்படியெல்லாம் என்னால் நடிக்க முடியாது. கண்டிப்பாக நடிக்கவே மாட்டேன் என்று கூறி விட்டு போய் உட்கார்ந்து விட்டாராம்.



ப்ரீத்தி சர்மா

---

**இ**துநாள்வரை சிம்புவின் காரியதரிசி...அதுதாங்க மேனேஜராக இருந்தவர் அவரது தந்தை டி.ராஜேந்தர். இப்பொழுது நயன்தாராவின் சிபாரிசின் பேரில் நயனின் மேனேஜர் அஜீத்தை தனது மேனேஜர் ஆக்கிக்கொண்டுள்ளார் சிம்பு. பின்னே சிம்புவுடன் 'வல்லவன்' டிஸ்கஷனில் எல்லாம் கலந்துகொண்டு கலக்கிவரும் நயன்தாரா சொன்னால் சிம்பு செவிமடுக்காதிருப்பாரா?

---

# ஷகீலாவுக்குப் போட்டி மம்தா

**ஷகீலா** இடத்தை நிரப்ப போகிறார் என்று மம்தா மோகன்தாஸைப் பார்த்து மலையாளப் படவுலகமே புல்லரித்துப் போய்க் கிடக்கிறது.

அந்த 'மம்மதா' இப்போது தமிழ் ரசிகர்களின் நாடி, நரம்புகளை சூடாக்குவதற்காக 'சிவப்பதிகாரம்' மூலம் தமிழில் காலெடுத்து வைக்கிறார்.

லங்கா என்ற மலையாளப் படம் மூலம் நடிப்புச் சேவைக்கு வந்தவர் மம்தா மோகன்தாஸ். படு க்யூட் பேபியாக இருக்கும் மம்தா, லங்காவில் காட்டிய கிளாமரைப் பார்த்து மலையாள நாடே இன்னும் பிரமித்துப் போய்க் கிடக்கிறது.

படம் சரியாக ஓடாவிட்டாலும் கூட மம்தாவின் கிளாமர் காட்சிகளை ரசிகர்கள் வேண்டி விரும்பிப் பார்த்தனர்.

படத்தை விட மிக பரபரப்பாக ஓடிய மேட்டர், படத்தின் ஹீரோவான சுரேஷ் கோபிக்கும், மம்தாவுக்கும் இடையே பற்றிக் கொண்ட சூடான காதல்தான். இருவரும் பின்னிப் பிணைந்து போய் விட்டார்கள் என்று பரவிய செய்தியால் சுரேஷ் கோபி குடும்பமே இரண்டு பட்டுக் கிடக்கிறது.

ஆனாலும் இதைப் பற்றிக் கவலைப்படாமல் கோபியுடன் இன்னும் டாக்கிக் கொண்டுதான் இருக்கிறாராம் மம்தா.

இப்ப நம்ம மேட்டருக்கு வருவோம். சிவப்பதிகாரம் என்ற வித்தியாசமான கதையை படமாக்குகிறார் கரு. பழனியப்பன். நல்ல தமிழ்ப் படங்களைக் கொடுப்பவர்களின் வரிசையில் பழனியப்பனுக்கும் ஒரு இடம் உள்ளது.

பார்த்திபன் கனவு, என்ற அருமையான படத்தைக் கொடுத்தவர்தான் பழனி. அவரது இயக்கத்தில் சதுரங்கம் விரைவில் ரிலீஸ் ஆகவுள்ளது.

இப்போது சிவப்பதிகாரம் என்ற படத்தை இயக்கவுள்ளார் பழனியப்பன்.

இப்படத்தில் ஹீரோவாக நடிக்கப் போவது விஷால். வித்தியாசமான கதைக்களம் என்பதால் வித்தியாசமான ஹீரோவான விஷாலை போட்டுள்ளார் பழனியப்பன்.

அவருக்குச் ஜோடியாக வருகிறார் மம்தா. கிளாமர் காட்ட கொஞ்சம் தயங்காத மம்தா இப்படத்தில் படு வித்தியாசமான ரோலில் வருகிறாராம். சொந்தக் குரலில்தான் பேசுவேன், சம்மதிக்க வேண்டும் என்று முன்பே பழனியப்பனிடம் கூறி விட்டாராம். அவரும் ஓ.கே.சொல்லி விட்டாராம்.



ஸ்ரீகாந்த் - பாவானா
கிழக்கு கடற்கரை சாலையில்




## சயனம்

என் கிராமம்
இன்னும் சயனித்தே
கிடக்கின்றது!

தட்டியெழுப்ப
கரங்களின்றி
அலாதியாக
படுத்துறங்குகிறது.

உலகம் எப்படியெல்லாமோ
மாறிவிட்டது
எனதூர் மட்டும்
மாறாமல் அப்படியே
படுத்துறங்குகிறது.

தூர்ந்து மண் நிரம்பிய
குளமும்...
சிதைந்து குன்றும்
குழியுமான
வீதியும்...
ஆற்றுக்குக் குறுக்கே
உடைந்த
பாலமும்...
இன்னும் அப்படியேதான்!

மின்சார வாடை
முகராமல்...
இருள் சூழ்ந்து
பேய்கள் நடமாடும்
இரவுப்பொழுதுகள்
இன்னும் மாறவில்லை.

கால்களிருந்தும்
முடமாக...
ஊனமாக
விழிகளிருந்தும்
குருமாக...
செவிகளிருந்தும்
செவிடாக...
உள்ளமிருந்தும்
சடமாக...
படுத்துக்கிடக்கிறது
என் கிராமம்.

யார்யாரெல்லாமோ
வந்து போனார்கள்
பல வண்ணக்கொடிகளால்
ஊரைத் துண்டாடினார்கள்

ஆனால்...
தட்டியெழுப்பத்தான்
கரங்கள் இன்னும்
உயரவில்லை!

*–அநுராதபுரம் ரஹ்மத்துல்லாஹ்.*

## போர்க்கால எச்சங்கள்

ஆன்ம ஞானத்தின்
கோரப் பிடிக்குள்
சிக்கித் தவிக்கின்றது
சமாதானம்.

காற்றை கிழித்து வந்து
காதைத் துளைக்கிறது
கறை படிந்த
போரின் வேதம்.

மூளைச் செல்களுக்குள்
நொய்.... என்கிறது
முடுக்கி விடப்பட்ட
யுத்தப் பிசாசு.

பாறை முகடுகளை
பார்த்துக் கிடக்கின்றன
சல்லடையாக்கப்பட்ட
சலனமில்லாச் சடலங்கள்.

மாய மாளிகைக்குள்
முடங்கிப் போயின
மானிட நேயங்களின்
மகத்தான எண்ணங்கள்.

இறைவா...
இனியும் போகட்டும்
இப்பூமியை விட்டு
இந்தப் போர்க்கால
எச்சங்கள்.

*–திலீப் ஏ சமது, மூதூர் – 07.*

## இறை நம்பிக்கை

பார்வைகளுக்கு
புலப்படாத - அணு
காபனாகி - காற்றாகி
ஒளியாகி....
அண்டம், பூமி தோன்றி
நேர் - எதிர் கொண்ட
ஒவ்வொரு அணுவும்
பிரிகையாகி
முதல் அமீபா உருவாகி
கோடி கோடி உயிர்க்கருவாகி
இறுதியில்
குரங்கு - மனிதனாகி...
இது விஞ்ஞான பரிணாமத்தின்
வளர்ச்சி -
ஒரு ஆன்மீகத்தின் கேள்வி
முதல் அணு
எப்படி, எங்கிருந்து வந்தது?
என்பதுதான்.

*–உம்முஷல்மா பாறுக், மாவோ.*

## பிஞ்சுப் பிரபஞ்சம்

இடிந்து போய் நான்
உட்கார்ந்த இரவுகள்,
கண்ணீர் வற்றிக்
கடலெடுத்து அழுத
கணங்கள்,
படித்த பாடங்கள் மறந்து
கவிதைகளாய்
விடையளித்த பரீட்சைகள்,
உனக்குப் பின்னால்
ஓடிய மனது,
சூனியமாய்த் தெரியும்
எதிர்காலக் கனவு
இன்னுமின்னும் நான்
அலட்சியப்படுத்திய - என்
நகர்வுகள் எல்லாம்
என் பெண்ணென்ற
பிஞ்சுப் பிரபஞ்சம் நீ தந்தது.

விட்டில்களோடு பேசிய
இரவுகளில் எல்லாம்
தொலைபேசிச் சிணுக்கத்தை
காதுகள் கவனிக்கும்
இலையுதிர் காலத்தில்
மலர்களை மலர்த்தி,
இசைபாடும் என் மனதை
ஈ மெயிலில் கண்டு நீ
அழுததாய் சொன்னபோது,
அர்த்தமிழந்து போனேன்
நீ அழக்கூடாது
என் அண்சமவெளிகளில்
வெள்ளம் போட்டு விடும்.

*–வை.சாரங்கன்*

## கந்பக... கருவறுப்பு!

'கற்பக விருட்சம்' என
கௌரவ முத்திரையுடன்
கர்வத்தோடு - நாங்கள்
தலை நிமிர்ந்து
நின்றதெல்லாம்...
ஒரு காலம்!

இன்றோ,
பற்பலரின் விடாய்
தீர்க்க,
பாலியல் அரும்பாத
எங்கள்
நுங்குகளி தலைகள்
பரிதாப கரமாய்
படுபாதகரால்
பகிரங்கமான முறையில்
பலிக் கிடங்கில் போட்டு,
சீவப்படுகின்றன!

பழம்படு பனையின்
பரம்பரை மூர்த்தங்கள்
பருவ வயதடையாமலே,
பாதியில்
சிதைக்கப்படுவதைப்
பலர்
பொறுக்கவொண்ணாமல்
புறுபுறுத்தாலும்...
பயபக்தியோடு
பொத்திக் கொண்டனர்
வாயை!

எங்கள் கருவறை
சினைகளால் உப்பி...
பருத்த வேளையிலே
தான்...
வந்தான்
ஆளன் ஒருவன்!

வேட்டை நோக்கோடும்
வெக்கை
தாங்கவொண்ணா
வேக்காட்டோடும்,
காட்டு வழிவந்த...அந்த
நாட்டுப் புறத்தான்,
விடாய் தீர்க்கவும்,
வயிற்றுளைச்சல்
'லடாய்' போக்கவும்
வேண்டும் நுங்கு என்று
எங்கள்
குல வாரிசைக்
கருவறுக்கத்
தொடங்கினான்...
நாங்கள் மூளியானோம்!

*–ஏறாவூர் அனலக்தர்.*

## சாகாத சாதி

அன்று,
ஏழைகள் நாங்கள்
இந்தியாவின்
தென்பகுதி
கிராமத்து
கிராமங்களில்
சாதிக் கொடுமைக்கு
அல்லல் பட்ட
தருணத்தில்
அழைத்து வந்தான்
வெள்ளைக்கார
துரைமார்
அடிமைக் கூலிகளாக;
அடிமைக் கூலிகளாக
நாங்கள் வந்த
வேளையிலும்
எங்களோடு பின்னி(ப்)
பிணைந்து உடலோடு
ஊடுருவி வாழ்ந்த
கரகாட்டத்தையும்
காவடி ஆட்டத்தையும்
கையோடு ஏந்தி
வந்தோம்.
இன்றும்
ஆட்டத்துக்கு
நடுவே
எங்கள் மத்தியில்
சாதிக் கொடுமை
சாகவில்லை -
தேர்தல்
காலத்தில் எங்கோ
உதிர்ந்த
சூரியனைப் போல
வரும் அரசியல்
வாதிகள்
சாதிப் பெயரைச்
சொல்லி
வாக்கு கேட்கிறான்.
(அப்) பாவிகளான
நாங்கள்
என்ன செய்ய?

*–கே.பி.பி.புஷ்பராஜா.*

## தவிப்பு...

என் விழிகளுடன் வந்து
விழுந்தவள் - நீ
அதனால்
எழுந்திருக்க இயலாது
தவிப்பது நான்

என் இதயத்துக்குள்
வந்து அமர்ந்தவள் - நீ
ஆனால் அதனை
வெளிப்படுத்த முடியாமல்
தவிப்பவன் நான்

என் கனவுகளில் வந்து
கலந்தவள் - நீ
ஆனால்...
கண்ணுறங்காது தவிப்பது
நானடி பெண்ணே

என் வாழ்வோடு வந்து
காதலை விதைத்தவள்
நீயாச்சே...அதனை
உன்னிடத்தில் சொல்ல
முடியாமல் தவிப்பவன்
நானாச்சே...

*–ஹனீபா ஷாஜஹான், பிறைந்துரைச்சேனை.*

## விலகிச்செல்லும் உறவுகள்...

ஆரம்பப் புள்ளியை
மறந்துவிட்டு
காரணமின்றியே
விலகிச்செல்லும் சில
உறவுகள்!

சிறுசச்சரவுக்காக
சண்டையிட்டு
தமக்கிடையே
பகைவேலி போட்டு
ஒற்றுமைக்
கயிறறுத்து
உறவுப்
பாலமுடைத்து
நீங்கிச்செல்லும்
உறவுகள்!

குடும்ப உறவு களைந்து
சகோதரத்துவ பந்தம்
பிடுங்கி
மாதா பிதாக்களை
மறந்து
காதலைக் காப்பாற்றவென
ஒரேயொரு உறவுடன்
ஓடிப்போகும்
உறவுகள்!

*–அநுராதபுரம் ரஹ்மத்துல்லாஹ்.*

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

**இந்திய தமிழ் திரையுலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு சிலர் தன்னுடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு அந்த வகையில் திரையுலகத்தில் காலடி வைத்து தன் புகழை உயர்த்திக் கொண்ட கவிஞர் மு.மேத்தா அவர்கள் எழுதிய சில கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவரின் கவிதையில் இருக்கம் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.**

### நந்தவன நாட்கள்

படுத்திருந்த
பாய் மீது
சின்னச் சின்னச்
சிறகு முளைத்தது.
சட்டென்று
தலையணை
அரியணையானது!

விடியலில்
மலரொன்று
முன்கூட்டியே
முகம் மலர்ந்தது.

காற்றுவந்து - என்
காதோடு சொல்லியது :
நீ
வந்து கொண்டிருக்கிறாய் -
என்று!

சாலைகள்
தகவல் அனுப்புகின்றன...
நட்சத்திரங்கள்
தங்களுக்குள்
கிச்சு கிச்சு மூட்டிக்கொண்டு
கேலி செய்கின்றன!

மது வழிந்துவிட்டது...
கோப்பையே
குதிக்கத் தொடங்கியதால்!

பறிக்க வருகிறவனை
எதிர்பார்த்துப்
பூந்தோட்டம்
பரபரக்கிறது...

ஒரு கொடி
வேலியைத் தாண்டிட
வேளை பார்க்கிறது

காவல்காரர்களை
ஏமாற்றிவிட்டு
இதயம் - ஒரு
கடத்தல்காரனை
எதிர்பார்க்கிறது...

காற்று வந்து
காதோடு சொல்லியது :
நீ
வந்து கொண்டிருக்கிறாய்
என்று!

### இதயம் இங்கே இருக்கிறது

வெளிப்படையாக
எழுதி வைத்தேன்
என் சோகத்தை!

அஞ்சல் உறையில்
மடித்து அனுப்பி வைத்தாய்
உன்
மௌனத்தை!
கண்கள் மிகவும்
கவலைப்படுகின்றன
எங்கே
ஒளித்து வைத்திருக்கிறாய்
என்னுடைய
உறக்கத்தை?

இளையவன் நீ
இல்லாததால்

முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.

படுக்கை என்னைப்
பயமுறுத்துகிறது!

அணைக்காத
காரணத்தாலேயே
ஆட்டம் போடுகின்றன
சின்ன வயசு
தீபங்கள்!

உலகத்தில்
உண்மை
ஒவ்வொரு இதழாக
உதிர்ந்து கொண்டிருக்கிறது...
ஆர்ப்பாட்டமாக
மலர்கின்றன
ஆயிரம் பொய்கள்!

துயரங்கள்
வழக்குத் தொடுத்தன...
காயங்கள்
சாட்சியளித்தன...

நீதிமன்றத்தில்
உன்னை
நேரில் பார்த்ததும்

எல்லா வழக்குகளையும்
தள்ளுபடி செய்து விட்டதே.

### தெருவில் வரும் திருநாள்

படுக்கையில் கடிக்கும்
மூட்டைப் பூச்சிகளாய்
இந்தப்
பெண்களின்
பெயர்கள்...

திடீரென்று
வந்துவிட்ட
திருநாள் போல்
தெருவிலே அவர்களின்
வருகை...

அந்தப்
புரட்சிக் கொடிகள்
அசைகிற போதெல்லாம்
ஆண்களின்
கண்களுக்குள்ளே
கலகம்...
கல்யாணச் சந்தடியில்
காணாமற் போய்விட்ட
கைக் குழந்தை போல
இந்த
இளைஞர்களின்
இதயம்...

அழகான பெண்களெல்லாம்
ஒரே மாதிரிதான்
அவர்கள் பாட்டுக்குப்
போய் விடுவார்கள் -

பக்கத்தில் நடக்கும்
அடுப்புகளையெல்லாம்
பற்ற வைத்துவிட்டு!


படுக்கையில் கடிக்கும்
மூட்டைப் பூச்சிகளாய்
இந்தப்
பெண்களின்
பெயர்கள்!



### முதல் கையடக்கத் தொலைபேசி

முதன்முதலில் பாவிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி எது தெரியுமா? அமெரிக்காவின் லூசென் தொழில்நுட்ப நிறுவனம் தயாரித்த தொலைபேசிதானாம். இதன் அளவு தற்போது உள்ள கையடக்கத் தொலைபேசியின் அளவை விட 3 மடங்கு பெரியதாம். இதன் பற்றரியினை பாவிப்பவர் தோளில் சிறிய பை போல சுமந்து செல்ல வேண்டுமாம். ஆயினும் இத் தொலைபேசி 1970 களில் இலங்கை மதிப்பில் ரூபா 15 இலட்சத்துக்கு விற்கப்பட்டதாம். தற்போது.....

### முதன் முதல் ஓவன்!



தற்போது அநேகமாக பாண் மற்றும் கேக் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் ஓவன் எனப்படும் வெதுப்பிவகைகள் பல ரகங்களில் உருவாக்கப்பட்டு தற்போது மைக்ரோவேவ் ஓவன்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஆயினும் இவற்றின் வரலாறு மிகப் பழைமையானது முதன் முதலில் கண்டு பிடிக்கப்பட்ட மைக்ரோவேவ் ஓவன் ஆனது 1946 யில் தான் வெற்றிகரமாக அதன் செயற்பாட்டை ஆரம்பித்ததாம். அமெரிக்கரான பேர்சி ஸ்பென்சரால் கண்டு பிடிக்கட்ட இது, தற்போது சற்று மாறுதலுக்கெல்லாம் உட்பட்டு இப்போது நவீன தொழில்நுட்பத்தோடு வெளிவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.




இன்று நாம் தரவுகளைச் சேகரித்து வைக்கக்கூடிய விதத்தில் இருக்கும் CD எனப்படும் இறுவட்டு வகைகள் 1980 ஆண்டளவில் பரீச்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டு 1983ஆம் ஆண்டில்தான் வெற்றிகரமாக செயல்படுத்த முடிந்ததாம். இவ்விறுவட்டுக்களை முதன்முதலில் கண்டு பிடித்த நிறுவனமாக Sony நிறுவனம் திகழ்கின்றது. ஆயினும் தற்போது அந்த இறுவட்டுக்கள் பாவனையிலிருந்து விலகி DVD எனப்படும் புதிய வகையான தட்டுக்கள் பாவனையில் வந்துள்ளன.




# விரும்பும் நேரத்தில் வேலை

**காலையில்** எழுந்தால் அலுவலகம், மாலையானால் வீட்டு வேலை என்று இருக்கும் பெண்கள் எத்தனைப் பேர். காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை சுமார் 10 மணி நேரம் அலுவலகத்தில் பெண்கள் வேலை



பார்க்கின்றனர். இவர்களால் தங்களுக்கென்று நேரம் ஒதுக்கவே முடிவதில்லை.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு தருவது ஃப்ளெக்ஸி - டைம் வேலை, அதாவது உங்களுக்கு விரும்பும் நேரத்தில் வேலை செய்வது. வெளிநாடுகளில் 90 சதவீதப் பேர் இவ்வாறு பணிபுரிகின்றனர். வேலை தேடும் போது கீழே உள்ள குறிப்புகளை நினைவில் கொண்டால் விரும்பும் நேரத்தில் செய்யும் வேலை கிடைப்பதோடு அதில் சிறப்பாகச் செயல்படவும் முடியும்.

***1. எந்த மாதிரி இடங்களைத் தேர்வு செய்வது :*** சில இடங்களில் குறிப்பாக வங்கிப் பணி, அரசு சேவை, மருத்துவமனை போன்ற இடங்களில் அதிக நேரம் பணி புரிய வேண்டும். சில இடங்களில் நீங்களே சில நேரங்களில் அதிகமாகவும், சில நேரங்களில் குறைவாகவும் பணிபுரியக் கூடிய இடங்களும் உண்டு. அப்படிப்பட்ட அலுவலகங்களைத் தேர்ந்தெடுங்கள்.

வணிக இணைய நிறுவனம், விளம்பர நிறுவனங்கள், காப்பீட்டுத் துறை, கல்வி, சமூகச் சேவை ஆகியவற்றில் உங்கள் வசதிக்கேற்ற நேரத்தில் வேலை செய்யலாம்.

2. பொருத்தமான சம்பளம் : உங்கள் சம்பளம், உங்கள் நேரம் மற்றும் வேலை ஆகியவற்றைப் பொறுத்தது. நீங்கள் அதிகமான நேரம் அலுவலகத்தில் இல்லை என்றாலும் கொடுத்த வேலையை முடித்து விடுவதாக உங்கள் அதிகாரியை நம்பச் செய்யவும்.

***3. காரியத்தில் கண்ணாய் இருத்தல் :*** நீங்கள் உங்களுக்கு ஒத்து வரும் நேரத்தில் பணி புரிந்தால், உங்கள் வேலையை உண்மையான அர்ப்பணிப்போடு புரியவும். அதை முழு ஈடுபாட்டுடன் செய்யவும். உங்கள் வேலையே உங்களைப் பற்றிய மதீப்பீட்டை உருவாக்கும். உங்கள் ஈடுபாடு உங்களை வெற்றியாளராகச் செய்வதோடு, உங்களை மேலும் முன்னேற்றும்.

***4. நேர அவகாச வேலையின் பலன்கள்*** : இதைப் போன்ற வேலையில் ஈடுபடுவதால், நீங்கள் முன்னேற முடிவதோடு உங்கள் கணவர் மற்றும் குழந்தைகளுடன் நேரமும் செலவிட முடியும். உங்கள் குடும்பத்தின் கடமைகளையும் திறமையாக நிறைவேற்ற முடியும்.


# திருடர்கள் ஜாக்கிரதை!

**வீட்டில்** இருக்கும் பொழுதோ, வெளியே போகும் பொழுதோ வீட்டில் உள்ள பொருட்கள் திருட்டுப் போகாமல் எப்படிக் காப்பாற்றுவது என்பது நம் மனதில் ஒரு பெரிய கேள்விக் குறியாக உள்ளது. வீட்டை திருடர்களிடமிருந்து காக்க ஒரே வழிதான் உள்ளது. அது நாம் சாமர்த்தியமாக இருப்பது தான்.

பணம், நகை, பத்திரங்கள் போன்ற விலை உயர்ந்த பொருட்களை வீட்டில் வைப்பதைத் தவிர்த்து, வங்கி போன்ற பத்திரமான இடத்தில் வைப்பது நல்லது.

டி.வி., நகை என்று எது வாங்கினாலும் அதை அக்கம் பக்கத்தில் அனைவரிடமும் கூறி, பெருமைப்படுவதை தவிர்ப்பது நல்லது.

கதவுகளையும், ஜன்னல்களையும் சரியான நிலையில் வைக்கவும். உடைந்த கண்ணாடிகளையும்,



பழுதான கதவுகளையும் உடனடியாக மாற்றவும்.

புதிய வீட்டிற்கு மாறியவுடன் பூட்டுகளை மாற்றவும். வீட்டில் தனியாக இருக்கும் போது கதவுகளைப் பூட்டி வைக்கவும்.

# வீட்டிலிருக்கும் போது கவனிக்க வேண்டியவை :

**யார்** வெளியே கதவைத் தட்டுகிறார்கள் என்பதை உறுதி செய்துகொண்ட பின் கதவைத் திறக்கவும்.

வீட்டில் உள்ள பொருட்களைப் பழுதுபார்க்க வருபவர்கள் மற்றும் இதர பொருட்களை விற்க வருபவர்களின் பெயர், நிறுவனம் ஆகியவற்றைச் சரி பார்த்துக் கொண்டு வீட்டின் உள்ளே விடவும்.

தொலைபேசியில் முன் பின் தெரியாதவர்களிடம் வீட்டில் உள்ளவர்களைப் பற்றிய தகவல்களைக் கூறுவதைத் தவிர்க்கவும்.

வெளியூர் செல்ல வேண்டும் என்றாலே அனைவருக்கும் ஏற்படும் பொதுவான பயம் திருட்டு என்பது தான். இந்தப் பயத்தை விரட்ட சரியான வீட்டுப் பாதுகாப்பு முறைகளால்தான் முடியும்.

***வீட்டை விட்டுச் செல்லும்போது :***

ஒன்று அல்லது இரண்டு விளக்குகளை எரிய விட்டுச் செல்லவும்.

டைமர் இருக்கும் தொலைக்காட்சி



அல்லது வானொலியை "ஆன்" செய்து வைக்கவும்.

தபால்களையும், செய்தித் தாள்களையும் நிறுத்தாதீர்கள். அதற்குப் பதிலாக உங்கள் பக்கத்து வீட்டாரை எடுத்து வைக்கச் சொல்லவும். இதனால் நீங்கள் வீட்டில் இல்லை என்பது யாருக்கும் தெரியாது.

வீட்டில் யாரையும் தங்கவைக்க முடியவில்லை என்றால், திருடர்களிடமிருந்து வீட்டிற்குப் பாதுகாப்புத் தரும் எச்சரிக்கை மணியை பொருத்துவது நல்லது.

எல்லாவற்றையும் விட முக்கியமானது உங்கள் அக்கம் பக்கத்தாரோடு நட்போடு இருப்பதுதான். அவர்கள்தான் உங்களுக்கு எந்தச் சமயத்திலும் உடனடியாக உதவக் கூடியவர்கள்.

நாம் முன் ஜாக்கிரதையாக நடப்பதால் மட்டுமே வீட்டில் ஏற்படும் திருட்டைத் தடுக்கலாம்.

# டைனிங் ரூமின் அழகு

**டைனிங்** ரூம் சாப்பிடுவதற்குத்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதே சமயத்தில் அது சாப்பிடுவதற்கு மட்டும்தான் என்பது சரியல்ல. இது குடும்பத்தின் அனைவரும் ஒன்றாக அமர்ந்து பேசி மகிழும் இடமாகும்.

எதை எவ்வாறு அலங்கரிக்க வேண்டும் என்பது முக்கியமல்ல. இதன் அலங்கரிப்பு உங்கள் விருந்தாளிகளும், குடும்பத்தினரும் ஓய்வாக உட்கார உதவ வேண்டும். அது தான் முக்கியம். மேசையின் அளவு, வடிவம்,



நாற்காலிகள் போடும் முறை ஆகியவற்றில் நிறைய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பாரம் பரிய வடிவங்கள் மாறி இப்பொழுது பல வீடுகளில் நவீன வடிவங்களில் நாற்காலி களையும், மேசைகளையும் காணலாம்.

சிலர் இந்த அறையில் டி.வி.யை வைக்க விரும்பினாலும், பலர் இதை விரும்பு வதில்லை. இதற்குக் காரணம், சாப்பிடும் பொழுது நிகழும் உரையாடலுக்கு இது தடங்கலாக அமையும் என்பதுதான்.

சாப்பாட்டு அறை உங்கள் சமைய லறைக்கு உள்ளேயே இருந்தாலும், அதற்கு தனி இடம் ஒதுக்கி அலங்கரித்தால் அழகாக இருக்கும். லிவிங்-கம்-டைனிங் ரூமில் டைனிங் ரூமை மறைக்கும் வகையில் ஸ்கிரீன் போட்டு வைக்கலாம். ஆனால் பலர் இதை விரும்பு வதில்லை. வரவேற்பறையை ஒட்டி இருப் பதால் இதை அழகாக அலங்கரிப்பது மேலும் முக்கியமாகிறது.

இடமிருந்தால் கரண்டி, கோப்பை, தட்டு ஆகியவை வைக்க ஒரு அலமாரியை வைப் பது நல்லது. அழகான டைனிங் ரூம், சாப் பாட்டில் மேலும் சுவையைச் சேர்க்கும்.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

22

பெயர் : ....................

முகவரி : ....................
....................
....................

தே.அ. அட்டை இல : ....................

கையொப்பம் : ....................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போது மானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 22**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
23.05.2006

பரிசுப் போட்டி இல - 20
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**ரஸ்னா தாஜுடீன்,**
225/1, பள்ளிவாசல் வீதி, கல்ஹின்ன.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

## மில்க் சாக்லேட்

***தேவையான பொருட்கள் :-***

| | |
|---|---|
| பால் பவுடர் | - 1 கப் |
| சீனி | - 1 கப் |
| வெண்ணெய் | - 2 மேசைக் கரண்டி |
| கோக் பவுடர் | - 1 1/2 மேசைக் கரண்டி |
| பால் | - 2 மேசைக் கரண்டி |
| வறுத்த முந்திரி, திராட்சை | - தேவைக்கேற்ப. |


***செய்முறை :-***

மேற்சொன்ன எல்லாப் பொருட்களையும் ஒரு பாத்திரத்தில் போட்டு கரண்டியால் நன்கு கட்டி இல்லாமல் கலக்கி, அடுப்பில் வைத்து விடாமல், மிதமான தீயில் கிளறவும். ஒட்டாத பதம் வரும் போது வறுத்த பருப்புகளைக் கொட்டிக் கிளறி, நெய் தடவிய தட்டில் கொட்டி நன்கு ஆற விடவும்.

நன்கு ஆறிய பின் உருட்டும் பதம் வந்து விடும். அந்தச் சாக்லேட்டை தட்டில் இருந்து எடுத்தவுடன் நன்கு உருட்ட வரும். அதை சப்பாத்திக் கல்லில் லேசாகத் தேய்த்து காட்பரீஸ் போல பீஸ் செய்யலாம்.




**கொஞ்ச** நாட்கள் வரையில்தான் இது. பிறகு எதுவும் கிடையாது. கடல் கடந்த சிறைவாசத்துக்கு முதல் படி இந்தச் சிறை. சிகரெட்டை மிக அனுபவித்துப் புகைத்தேன். ஒரு பாக்கெட்டின் விலை ஆறு ஃபிராங்க் அறுபது சதம். இரண்டு பாக்கெட்



வைத்திருக்கக்கூடிய பணத்தை நான் செலவழிக்கத் தொடங்கினேன். இல்லாவிட்டால் விசாரணைகளுக்கான செலவுகளுக்காக அதை விரைவில் பறிமுதல் செய்து விடுவார்கள்.

ரொட்டிக்குள் தேகா ஒரு குறிப்பு வைத்து அனுப்பியிருந்தான். பேன் அகற்றும் இடத்துக்கு வரும்படி சொல்லியிருந்தான் அதில். 'தீப்பெட்டிக்குள் மூன்று பேன்கள் வைத்திருக்கிறேன்' என்று அவன் குறிப்பிட்டிருந்தபடி, தீப்பெட்டியைத் திறந்து பார்த்தேன். குண்டு குண்டாய் மூன்று பேன்கள் இருந்தன. அவன் திட்டம் எனக்குப் புரிந்துவிட்டது. வார்டரிடம் அந்தப் பேன்களைக் காட்டினேன்.

அடுத்த நாள் என்னையும், என் படுக்கைத் துணிமணிகளையும் நீராவி அறைக்கு அனுப்பி வைப்பார்கள். கைதி பேன் இல்லாமல் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பது சட்டம்! மறுநாள் அந்த நீராவி அறைக்கு என்னை அனுப்பினார்கள். தேகாவைச் சந்தித்தேன். வார்டர் யாரும் அங்கே இல்லை.

நண்பன் தேகா தந்திரமாக அனுப்பி வைத்த பேன்களைக் காட்டியதால், பேன்களைக் கொல்வதற்காக அமைக்கப்பட்ட நீராவியறைக்குச் செல்ல வழி கிடைத்தது. அங்கு அவனைத் தனியாக சந்திக்க முடிந்தது.

"தேகா, ரொம்பத் தாங்ஸ், உன்னால்தான் எனக்குப் பணக் குழாய்

**எழுதியது: ஹென்ரி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

கிடைத்தது," என்றேன்.

"வலிக்கவில்லையே?" என்றான்.

"இல்லை."

"லட்ரீனுக்குப் போகும் ஒவ்வொரு தடவையும் நன்கு கழுவி விட்டுப் பிறகு செருகிக் கொள்."

"செய்கிறேன். தண்ணீர் புகாதபடி குழாய் நல்ல டைட்டாய்த்தான் இருக்கிறதென்று தோன்றுகிறது. போன வாரம் பூரா வைத்திருந்தும் நோட்டு மடிப்போடு அப்படியே இருக்கிறதே."

"தொல்லை எதுவும் இல்லை?"

"இல்லை... நீ என்ன செய்வதாயிருக்கிறாய் தேகா?"

"எனக்குக் கடல் கடந்து கயானாவுக்குப் போக இஷ்டமில்லை. பைத்தியம் பிடித்தவன் மாதிரி பாசாங்கு பண்ணி, எட்டு அல்லது பத்து வருஷம் ஃபிரான்ஸிலேயே இருந்துவிடப் போகிறேன். செல்வாக்குள்ளவர்கள் தொடர்பு எனக்கு உண்டு. குறைந்தபட்சம் ஐந்து வருஷம் தள்ளுபடி வாங்க முடியும் என்னால்."

"உனக்கு என்ன வயது?"

"நாற்பத்திரெண்டு."

"அப்படியென்றால் நீ மூளையில்லாமல் பேசுகிறாய்! உன் பதினைந்து வருஷத் தண்டனையில் பத்து வருஷத்தைச் சிறையில் கழித்தாய் என்றால், நீ வெளியே வரும்போது கிழவனாகியிருப்பாயே? ஏன், கடல் கடந்த சிறைக்கு வர உனக்குப் பயமாயிருக்கிறதா?"

"கயானாவில் படுபயங்கரம். ஒவ்வொரு வருஷமும் நூற்றுக்கு எண்பது பேர் செத்துப் போகிறார்கள். முந்தின கும்பல் மொத்தமும் இறந்ததும் அடுத்த கும்பல் புறப்படுகிறது. ஒவ்வொரு கும்பலிலும் 1800 முதல் 2000 பேர் வரை இருக்கிறார்கள். போகிறவனுக்கு, பெரு வியாதி வரும். அல்லது மஞ்சள் காமாலை வரும். அல்லது ஒரு வகை பேதி - அதற்கு மருந்தே கிடையாது. அல்லது மலேரியா. இதிலிருந்தெல்லாம் நீ தப்பிவிட்டதாக வைத்துக்கொள். நீ பணம் பதுக்கி வைத்திருப்பது தெரிந்தால் எவனாவது உன்னைக் கொலை செய்து விடுவான். அல்லது தப்பியோட முயன்று அதில் சாவாய். பட்டாம்பூச்சி, நான் சொல்வதை கேள். உன்னை அதைரியப்படுத்த நான் முயலவில்லை. கயானாவில் கொஞ்ச காலம் - ஐந்து அல்லது ஏழு வருஷம் - இருந்து விட்டுப் ஃபிரான்சுக்குத் திரும்பிய பல பேரை எனக்குத் தெரியும். அதனால்தான் எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். அவர்கள் அத்தனை பேரும் இடிந்து ஒடிந்து போய், இரத்தம் ஒழுகும் சீக்காளிகளாய்க் கிடக்கிறார்கள். வருடத்தில் ஒன்பது மாதம் ஆஸ்பத்திரிகளில்தான் அவர்களுக்கு வாசம். சில பேர் நினைக்கிற மாதிரி அங்கிருந்து தப்பி வருவது ஒன்றும் சின்னப்பிள்ளை விளையாட்டில்லையாம். அவர்கள் சொல்கிறார்கள்.

"நீ சொல்வதை நம்புகிறேன் தேகா. ஆனால் என்னிடம் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அங்கே போய் நான் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்க மாட்டேன். அதைப் பற்றிச் சந்தேகமே வேண்டாம் உனக்கு. நான் ஒரு மாலுமி எனக்குக் கடலைப்பற்றித் தெரியும். சீக்கிரமே தப்பி விடுவேன். உன் சமாச்சாரம் என்ன நிஜமாய் உன்னால் பத்து வருட கடுங்காவலைத் தாங்க முடியுமா? ஐந்து வருடம் அவர்கள் தள்ளுபடி செய்கிறதாகவே வைத்துக் கொள், அதுகும் நிச்சயம் இல்லை தனியறையில் பைத்தியம் பிடிக்காமல் உன்னால் இருக்க முடியுமா? இப்போது என்னை வைத்துக் கொள், என் அறையில் புத்தகம் கிடையாது. வெளியே போகவர முடியாது யாரோடும் பேசுவதற்கில்லை. இந்த மாதிரி ஒவ்வொரு நாளும் 24 மணிநேரம்! நினைத்துப் பார் ஒவ்வொரு மணிக்கும் 600 நிமிடம் இருக்கின்ற மாதிரித் தோன்றும் நான் சொல்லுகிற கணக்கு ரொம்பக் கம்மி.

இருக்கலாம் ஆனால் நீ வயதில் சின்னவன் எனக்கு 42 வயதாகிறது என்றான் தேகா "உண்மையைச் சொல் தேகா எதைக்கண்டு நீ இவ்வளவு பயப்படுகிறாய் மற்றக் கைதிகளைக் கண்டுதானே?"

"உண்மையைச் சொல்லுகிறேன் பட்டாம்பூச்சி! நான் ஒரு பணக்காரன் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் ஐம்பதாயிரமோ ஒரு லட்சமோ என் உடம்புக்குள் மறைத்து வைத்திருக்கிறேன் என்று அவர்கள் நினைக்கிறார்கள்" ஆகவே என் கழுத்தை அறுப்பதற்குத் தயங்க மாட்டார்கள்.

"அப்படியானால் நமக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வோம் கஜானாவுக்குப் போவதைத் தவிர்ப்பதற்காக நீ பைத்தியம் போல் நடிப்பதில்லை என்று எனக்கு வாக்குக் கொடு. எப்போதும் உனக்குத் துணையாக இருப்பேன் என்று நான் வாக்களிக்கிறேன் நாம் இருவரும் ஒருவர் மற்றொருவருக்கு ஆதரவாக இருக்கலாம் நான் பலசாலி எப்படி சண்டை போடவேண்டும் என்று சின்னவனாய் இருந்த போது நான் கற்றுக் கொண்டவன். கத்தியை கையிலே பிடித்தால் எவனும் கிட்ட வரமுடியாது மற்றக் கைதிகளைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம் நம்மைக் கண்டு பயப்படுவார்கள்."

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# டைட்டானிக்

## உயிருடன் இருந்த இறுதிப் பயணியும் மரணம்

**வரலாற்றில்** மறக்கப்படமுடியாத உலகப் பிரசித்தி பெற்ற டைட்டானிக் கப்பல் அனர்த்தத்தில் உயிருடன் இருந்த கடைசி சாட்சியான லிலியன் அஸ்பிளான்ட் எனும் மூதாட்டி தனது 99 ஆவது வயதில் இம்மாதம் 7ஆம் திகதி அமெரிக்காவின் மன்செஸ்டர் நகரில் காலமானார். அவரது இறுதி விருப்பப்படி, அவர் உயிருடன் இருக்கும்வரை டைட்டானிக் கப்பலில் உயிர் பிழைத்த விடயம் மறைக்கப்பட்டு, அவரது மறைவுடன் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.



1906ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி கார்ல் செல்மா தம்பதியினருக்கு மூன்றாவதாகப் பிறந்த இரட்டைப் பிள்ளைகளுள் ஒருவரே லிலியன் ஆவார். அதன்பின்னர் எட்கர் எனும்




இளைய மகனும் அத் தம்பதியினருக்குப் பிறந்தான்.

பிரித்தானியாவில் வசித்து வந்தாலும் லிலியனின் குடும்பத்தார் சுவீடன் நாட்டினைச் சேர்ந்த ஸ்மாலாண்ட் வம்சவாவளியினர் ஆவர். தந்தையாராகிய கர்ள் அஸ்பிளான்ட் சாதாரண தொழிலாளியாக இருந்த போதும் அவர்கள் உறவினர்கள் மிக வசதியாக அமெரிக்காவில் வசித்து வந்தனர். தாயாராகிய செல்மாவின் இரு சகோதர்களும், கார்ள்சின் ஒரு சகோதரியுமான மூன்று பேர் அமெரிக்காவின் வோர்செஸ்டர் நகரில் ஏற்கனவே குடியேறி செல்வச் செழிப்புடன் வசித்து வந்தனர்.

இந்நிலையில் கார்ள் தமது குடும்ப நிலை குறித்து அவர்களுக்கு கடிதம் எழுதியதைத் தொடர்ந்து உடனடியாக அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்து வருமாறு அவர்களினால் பதிலும் பணமும் அனுப்பிவைக்கப்பட்டது. இந்நிலையிலேயே கார்ள் குடும்பத்தினர் தமது 5 பிள்ளைகளுடன் உலகையே வியக்க வைத்த டைட்டானிக் கப்பலில் அமெரிக்காவிற்கான தமது பயணத்தினை 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி ஆரம்பித்தனர்.

உலகையே உலுக்கிய அந்தக் கோர விபத்து 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி நிகழ்ந்தது. பாரிய பனிப்பாறையில் மோதிய டைட்டானிக், மூழ்கத்



தொடங்கியவுடன் போதிய உயிர்காப்புப் படகுகள் இல்லாத நிலையில் முதலில் பெண்களையும் சிறுவர்களையும் காப்பாற்றும் பணி தொடங்கியது. இதன்படி 3ஆம் வகுப்பில் பயணம் செய்த லிலியன் குடும்பத்தார் உட்பட அனைவரும் கப்பலின் மேல் தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு தாயாரான செல்மா,லிலியன், கடைசித் தம்பி எட்கர் ஆகிய மூவரும் உயிர் காப்பு படகுகளில் இறக்கப்பட்டனர். அப்போது தந்தையார் கார்ள், இரு அண்ணன்மார் மற்றும் தன்னுடன் ஒட்டிப் பிறந்த பீலிக்ஸ் ஆகியோர் கப்பலின் மேல்தளத்தில் நின்று வைத்த கண் வாங்காமல் தங்களைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் தான், தன்னில் மிகவும் செல்லம் வைத்திருந்த தகப்பனாரை நோக்கி கதறி அழுததாகவும் லிலியன் நன்றாக நினைவு கூர்ந்திருந்தார். ஆனால் சிறிய பிள்ளையாகிய தம்பிக்கு அவை எதுவும் ஞாபகம் இல்லை.

அனைத்து உயிர்காப்புப் படகுகளும் இறக்கப்பட்ட பின் கப்பலில் இருந்த அனைவரும் இனி தப்புவதற்கு வழியில்லை எனும் நிலையில் புகழ் பெற்ற கிறிஸ்தவ பாடல் ஒன்றினை பாடிக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் ஏறக்குறைய செங்குத்தாக மூழ்கியிருந்த டைட்டானிக் இரண்டாகப் பிளந்து கடலில் முற்றாக மூழ்கியது. அந்த அதிர்ச்சியில் மூர்ச்சையான லிலியன் கடும் குளிராலும் தாக்குபட்டுப் நியுயோர்க்கில் புகழ் பெற்ற சென் வின்சன்ட் வைத்தியசலையிலேயே நினைவு முற்றாக திரும்பியதாக கூறியிருந்தார்.

டைட்டானிக் கப்பலில் பயணம் செய்தவர்களில் 1490 பேர் மரணமடைந்ததும் 711 பேர் கார்வெதியா எனும் சரக்குக் கப்பலினால் மீட்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

உயிர் தப்பிய 711 பேரையும் பொறுப்பேற்ற அமெரிக்க அரசாங்கம் அவர்களை தங்கள் பிரஜைகளாக அறிவித்ததுடன் உதவிகளையும் வாரி வழங்கியது. இதன்படி லிலியன் தாயார் செல்மா. தம்பி எட்கர் ஆகியோருக்கு வோர்செஸ்டரில் வசதியான வீடும் 2 ஆயிரம் டொலர் (1912இல்) நிவாரணமும் கிடைத்தன.

டைட்டானிக் கப்பல் விபத்தினைப் பற்றி யாராவது கதைத்தால் அதிர்ச்சியடைவதும் மூர்ச்சையாவதும் லிலியனுக்கு அடிக்கடி



ஏற்படலாயிற்று. எனவே அந்த சம்பவத்தை பற்றி பேசுவதையே குடும்பத்தார் முற்றாக நிறுத்தி விட்டிருந்தனர். இதன் காரணமாகவே ஒரு கட்டத்திற்கு பின் வெளி உலகிற்கு அவர்கள் டைட்டானிக் கப்பலில் பயணித்த விடயம் தெரியாமற்போயிற்று.

லிலியனின் தாயார் தனது 90 ஆவது வயதில் 1964ஆம் ஆண்டு காலமானார். ஆனால் ஏனோ லிலியனும் தம்பியாரான எட்கரும் இறுதிவரை திருமணம் செய்து கொள்ளவில்லை. எட்கர் தனது 74 ஆவது வயதில் ஏற்கனவே காலமாகிவிட்டார்.

டைட்டானிக் கப்பலில் தனது தந்தை, 3 சகோதரர்கள் உட்பட உடைமைகள் அனைத்தையும் இழந்து நிர்க்கதியான லிலியனுக்கு அமெரிக்காவில் குவிந்த உதவிகளினால் கவரப்பட்டோ என்னவோ புகழ்பெற்ற ஆயுள் காப்புறுதி நிறுவனம் ஒன்றிலேயே லிலியன் பணியாற்றினார். அதுவும் 1971ஆம் ஆண்டு ஓய்வு பெற்றபின் வீட்டுத்தோட்டத்தில் பூக்கன்றுகள் வளர்ப்பதிலேயே தனது முழுக்கவனத்தையும் செலுத்தியதாக லிலியவின் உறவினர்கள் கூறுகின்றனர்.


டைட்டானிக் திரைப்படம் வெளியிடப்பட்டபோது கற்பனைப் பாத்திரங்களான ஜெக், ரோஸ் ஆகிய காதலர்களை உலகமே காதலித்தது. ஆனால் கடந்த வாரம் டைட்டானிக்கின் நிஜ பாத்திரமான லிலியன் அஸ்பிளான்ட் காலமான செய்தி பகிரங்கமானபோது அமெரிக்காவே ஒரு கணம் உறைந்து போனதாக நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**சிரிப்பு 06**

# "வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



**ஆட்டோ** கிட் ரேஸஸ் அட் வெனீஸ் (Auto Kid Races At Venice)படம் பிடிப்புத் தொடங்கியது. வெறுப்பின் காரணமாக மேக் ஸென்னட் சாப்ளினை மட்டும் படப்பிடிப்பு குழுவோடு அனுப்பிவிட்டுக் கையை உதறிவிட்டார். வெனீஸ் கடற்கரை சிறுவர்கள் மோட்டார் பந்தயம் ஆரம்பமாகிறது. அதைக் காணப் பெருங்கூட்டம் அந்தப் பந்தய சாலைக்கு இரண்டு பக்கங்களிலும் கூடியிருக்கிறார்கள். பந்தயத்தை படமெடுக்க ஒரு இயக்குநரும், காமெராமேனும் காமெராவோடு சாலையோரத்தில் தயாராக இருக்கிறார்கள். அங்கு சாப்ளின் எல்லாவற்றையும் கவனிக்கிறார். சரியான நிமிடத்தில் சாப்ளின் காமெரா லென்ஸிற்கு முன்னால் போய் நிற்கிறார், தான் படத்தில் வர வேண்டும் என்ற



எண்ணத்தோடு! இயக்குநர் சாப்ளினை தள்ளி விடுகிறார். அடுத்த வண்டி வரும்பொழுது மீண்டும் வந்து நிற்கிறார். கோபமடைந்த இயக்குநர் சாப்ளினை எட்டி உதைக்கிறார். கீழே விழுந்து விட்டான். அவனைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்று அந்த இயக்குநர் சந்தோஷப்படும் பொழுது அடுத்த கார் வரும் பொழுது ஒரு நொடியில் சாப்ளின் மீண்டும் எழுந்து நிற்கிறார் காமெராவிற்கு முன் வண்டியை மறைத்துக் கொண்டு! இப்படி பல வண்டிகள் வருகின்றன. அவைகள் எல்லாம் சாப்ளினால் மறைக்கப்படுகின்றன. கடைசி காரும் சென்று விட்டது. முடியை பிய்த்துக் கொண்டு அந்த இயக்குநர் பைத்தியம் பிடித்தவர் போல் குதிக்கிறார். அப்பொழுது சாப்ளின் காமெராவிற்கு மிகவும் அருகில் சென்று தன் முகத்தை பல கோணல்கள் ஆக்கிக் கொண்டு அழகு காட்டுகிறார்.

(இந்தப் படத்தை, இந்தப் புத்தகம் எழுதும் நேரத்தில் மீண்டும் நான் பார்க்க நேர்ந்தது. சில ஷாட்டுகளில் சிலர் சாப்ளினின் சேஷ்டைகளைப் பார்த்து ரசித்துச் சிரிப்பது தெரிகிறது.)

படம் முடிவடைந்தது. அதைப் போட்டுப் பார்த்த மேக் ஸென்னட்டிற்கு அடி வயிற்றில் பற்றி எரிந்தது. படத்தை முதலீடு செய்து எடுத்து விட்டதினால் வியாபார ரீதியில் அதை வெளியிட்டார். நியூயோர் நகரத்தில் கொட்டகைகளில் சிரிப்பு அலைகள் ஓயவே இல்லை. படம் மகத்தான வெற்றி. பாமரங்கள் மட்டும் அல்லாமல் படித்தவர்களும் வந்து பார்த்து வயிறு குலுங்க சிரித்தார்கள். யார் இந்தப் புது நடிகர்? அவனுடைய நடை, உடை, முக சேஷ்டைகள் எல்லாமே புதுமையாகவும் சிரித்துக் கொண்டே இருக்கும்படியாகவும் உள்ளதே என்று பத்திரிகைகளும் புகழ்ந்தன.

தன் கல்லாபெட்டி நிறைவதைப் பார்த்த மேன் ஸென்னட்டிற்கு இது கனவா, நனவா என்ற நிலைமை. குப்பை என்று நினைத்த படம் கூரையை பெயர்த்துக் கொண்டு டாலர்கள் கொட்டியதை அவரால் நம்ப முடியவில்லை.

இந்தப் படம் சாப்ளினை வெற்றிப் படிகளில் ஏற்றி வைத்தது. படம் வாங்கும் வினியோகஸ்தர்கள், திரைப்பட அரங்கு சொந்தக்காரர்கள் சாப்ளினுடைய அடுத்த படம் எப்பொழுது வரும் என்று மேக் ஸென்னட்டை துளைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

சாப்ளினின் நகைச்சுவை வழி தனியானது. நிதானமாகச் செல்வது. ஆகவே அவரைத் தனியாக விடுவது என்பதை உணர்ந்தார், மேக் ஸென்னட். அதன் விளைவு விரைவிலேயே சாப்ளின் கதை, திரைக்கதை எல்லாவற்றையும் தானே அமைத்து நடித்து இயக்கவும் தொடங்கினார். பின்னாளில் மேக் ஸென்னட்டை பற்றிப் பேசும் பொழுது சாப்ளின் சொன்னார்: என்னுடைய வெற்றிக்கு முக்கியமான காரணம், என் திறமைகளை விட, என்ன திறமை என்னிடம் இருக்கிறது என்று ஸென்னட் தெரிந்து கொண்டதுதான்! இது நூற்றுக்கு நூறு உண்மை.

சாப்ளின் சின்ன சின்ன விஷயங்களையெல்லாம் நகைச்சுவையாக சேர்த்துத் தருவார்...சாப்ளின் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்லத் திரும்பும்பொழுது ஒரு காலில் நின்று கொண்டு ஐஸ் ஸ்கேட்டிங் செல்வது போல் செல்வார்.

இது அவர் சிறுவயதில் பழகிக் கொண்ட ஒரு யுக்தி. ஒரு உணவு விடுதியில் சாப்பிட்டுக் கொண்டிருப்பார், கைவிரல்கள் அழுக்காகி விடுகின்றன. குழாயைத் திருப்பினால் அதில் தண்ணீர் வராது. சுற்றி பார்க்கும் பொழுது ஒரு வயதானவர், அவருக்கு நீளமான தாடி. மது அருந்தி விட்டு கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருப்பார். சாப்ளின் அவருக்கு அருகில் சென்று தன் ஹேட்டை கழற்றி அவரை வணங்குவார். அதைக் கண்டு கொள்ளும் நிலையில் இல்லை, அந்த வயதானவர். உடனடியாக சாப்ளின் அவருடைய தாடியில் தன் கையைச் சுத்தம் செய்து விடுவார். அதுவும் அவருக்குத் தெரியாது. அந்த வயதானவரை மீண்டும் வணங்கிச் சென்று விடுவார். இப்படி பலவகையான நகைச்சுவைக் காட்சிகள்.



இவைகள் எல்லாம் அதற்கு முன்பு யாரும் செய்ததில்லை. ஆகவே சாப்ளினின் புகழ் உலகெங்கும் சூறாவளி வேகத்தில் பரவத் தொடங்கியது. இவனை ஏன் ஒப்பந்தம் செய்தோம் என்று தன் கன்னத்திலேயே அறைந்து கொண்ட மேக்ஸென்னட்டிற்கு சாப்ளினை அதிக சம்பளம் கொடுத்து இழுத்துச் சென்று விடுவார்களோ என்ற அச்சம் வாட்டத் தொடங்கியது. அப்படி ஒரு நிலைமை வந்தால் சம்பளத்தை அதிகரிக்க முடியுமா என்று நியூயோர்க் நகரத்திலுள்ள தன் பாகஸ்தர்களுடன் பேசத் தொடங்கினார்.



'காட் இன் ஏ காபரே' சாப்லின் இயக்கிய முதல் படம் 1914 ஏப்ரல் மாதம் வெளிவந்தது. படம் மகத்தான வெற்றி அடைந்தது.

*(தொடரும்)*

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள் 10

## அரண்மனையை அந்தப்புரமாக்கிய ஐவான் மன்னன்

**மன்னர்** ஆட்சியின்போது அரண்மனையில் அந்தப்புரம் இருப்பது அனைவரும் அறிந்த விடயமாகும். ஆனால் அரண்மனையினையே அந்தப்புரமாக்கிய மன்னன் ஒருவர் 15ஆம் நூற்றாண்டில் ரஷ்யாவினை ஆட்சி புரிந்தார். அவர் தான் ஐவான் மன்னன்.

அப்போதைய ரஷ்ய ராஜ்யத்தினை ஆண்டுவந்தவர் கிளின்ஸ்கி மன்னர் இவர் எதிர்பாராத விதமாக 1530ஆம் ஆண்டில் மரணமடைந்த போது அவரது ஒரே மகனான ஐவானின் வயது ஆக மூன்று மட்டுமே. ஐவான் பராய வயது அடையாத படியினால் அவனின் பிரதிநிதியாக கிளின்ஸ்கி மன்னனின் மனைவியும் ஐவானின் தாயாருமாகிய ஹெலன் ஆட்சி புரியத் தொடங்கினாள்.

இவ்வளவு காலமும் கிளின்ஸ்சி மன்னனின் மனைவியாக மகாராணியாக இருந்த ஹெலன் மன்னனின் மறைவிற்கு பின் தனது சுயநலத்தினை காட்டத் தொடங்கினாள். திருமணத்தின் முன்னரேயே ஹெலனுக்கு செர்னாலிச் என்ற காதலன் ஒருவன் இருந்தான். ஆயினும், பெற்றோரின் கட்டாயத்தின் பேரில், தனது விருப்பத்தினை மீறி ஒன்றும் செய்ய முடியாத நிலையிலேயே அவள் கிளின்ஸ்கி மன்னனை கரம் பிடித்திருந்தாள். தற்போதோ மன்னன் காலமான நிலையில் அடுத்ததாக முடிசூட வேண்டிய மகன் ஐவானின் பிரதிநிதியாக நாட்டு நிர்வாகமும் தனது கைக்கு வந்த நிலையில் அவளது கொட்டம் அதிகரிக்கத் தொடங்கியது.

தனது காதலன் செர்னாலிச்சை நேரடியாகவே அரண்மனைக்கு வரவழைத்த ஹெலன் எந்தவித தயக்கமோ அல்லது எவர் மீதான பயமோ இல்லாமல் தனது காதல் லீலைகளை அரங்கேற்றத் தொடங்கினாள். அரச நிர்வாகப் பிரதிநிதிகளும் ஏதும் செய்ய முடியாமல் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தனர். இவர்கள் யாவரையும் விட சிறுவனான ஐவானும் தனது தாயாரின் நடவடிக்கைகளினால் பெரிதும் மனம் வெதும்பினான், அறியா வயதில் தன் மீது அன்பை பொழிய வேண்டிய தாயார் தனது காதலனுடன் காரில் லீலைகளில் ஈடுபட்டதே, பிற்காலத்தில் ஐவானின் நடத்தை தடம் மாறியதற்கு உண்மைக் காரணமாகும்.

ரஷ்யாவில் அக்காலத்தில் போயர்கள் எனும் நிலச் சுவாந்தர்களின் செல்வாக்கு கொடி கட்டிப் பறந்தது. அரச பரம்பரையுடன் நெருங்கிய தொடர்பினை கொண்டிருந்த போயர்கள் அரச நிர்வாகத்திலும் செல்வாக்கு செலுத்துபவர்களாகவே விளங்கினர். அவர்களுக்கு ஹெலனின் போக்கு சிறிதும் பிடிக்கவில்லை. ஒன்றாக கூடிச்சதித்திட்டம் தீட்டிய போயர்கள் உணவில் விஷம் வைத்து ஹெலனை கொலை செய்தனர். இது மட்டுமல்ல கள்ளக்காதலனான செர்னாலிச்சை சிறையில் அடைத்து பட்டினி போட்டே சாகடித்தனர்.

அதன்பின் ரஷ்ய ஆட்சியில் தலையிட்ட போயர்கள் ஆட்சியில் தமது அதிகாரத்தை செலுத்தினார்கள். அவர்களின் ஆட்சியில் மக்கள் மிகவும் புறக்கணிக்கப்பட்டனர். சர்வாதிகார ஆட்சியாக இல்லாத போதும் தமது நலன்களை மட்டுமே போயர்கள் முதன்மைப் படுத்தியதனால் மக்கள் சொல்லொன்னா துயரங்களுக்கு உள்ளானார்கள். அரண்மனையில் இருந்த ஐவானும் புறக்கணிப்பட்டான். அவனில் அன்பு செலுத்தவோ அல்லது அரச நிர்வாகத்தை போதிப்பதற்கோ எவரும் இருக்கவில்லை.

மேலும் பராயமடையாத தனது பெயரை பாவித்தே போயர்கள் ஆட்சி நடாத்தியதும் ஐவானின் மனதை நெருடியது. தாயின் காதல் லீலைகளினால் ஏற்கனவே மனம் புண்பட்டிருந்த அவனுக்கு தற்போதைய அரச நிர்வாகத்தினரது எதேச்சதிகாரப் போக்குமே அவனது முரண்பட்ட மனப்பாங்கிற்கு காரணமாகி பின்னாளில் காமக் கொடியவனாக அவனை மாற்றி விடக்காரணமாகியது என வரலாறு கூறுகின்றது.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## இந்தியாவின் கறுப்புப் பூனைகள் கமாண்டோ அணி கொழும்பில்!

**இலங்கை** - இந்திய ஒப்பந்தத்துக்கு முன்னோடியான நகல் யோசனைகளைத் தயாரிக்கும் பணியில் அமைச்சர் காமினி திசாநாயக்காவும் இந்திய உயர்ஸ்தானிகர் தீக்ஷித்தும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். அப்போது, அமைச்சர் லலித் அதுலத் முதலியும் அவரோடு இணைந்து பல அமைச்சர்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். புலிகள் இயக்கம் நிபந்தனையற்ற விதத்தில் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென்று அமைச்சர் அதுலத் முதலி கூறினார். அத்துடன் வடக்கு - கிழக்கு இணைப் புத் தொடர்பாகப் புதிய யோசனையொன்றினையும் அவர் முன்வைத்தார். இரண்டு மாகாணங்களுக்கும் இரண்டு வெவ்வேறு மாகாண சபைகளை அமைப்பதென்றும் ஆனால், இரண்டு சபைகளுக்கும் ஒருவரையே முதலமைச்சராக நியமிப்பதென்றும் அவர் யோசனை கூறினார். இரண்டு சபைகளும் வெவ்வேறாகக் கூட்டங்களை நடத்தலாமென்றும் ஆனால், முதலமைச்சர் இரு கூட்டங்களுக்கும் தலைமை வகிக்கலாமென்பதுமே அதுலத் முதலியின் யோசனையாகும். அது சாத்தியமற்றதென்று தீக்ஷித் நிராகரித்தார்.




இதற்கிடையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, தனது கடும்போக்கு நிலைப்பாட்டினைச் சற்றுத் தளர்த்தத் தொடங்கினார். ஆனால் சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் மகா சங்கத்தினர் ஆகியோர் கடும் எதிர்ப்புகளை வெளிப்படுத்தத் தொடங்கினர். நாட்டில், குறிப்பாகக் கொழும்பில் இந்திய எதிர்ப்பு உணர்வு உசுப்பி விடப்பட்டது. இலங்கைக் கடற்பரப்புக்கு வெளியே இந்திய கடற்படைக் கப்பல்கள் நிறுத்தப்பட்டிருந்தன. அதன் விமானப் படையும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. 'கறுப்புப் பூனைகள்' என்றழைக்கப்படும் இந்தியாவின் நன்கு பயிற்சிபெற்ற கமாண்டோ படையணியொன்று இலங்கைக்கு அனுப்பி வைக்கப் பட்டது. இந்திய உயர்ஸ்தானிகரின் கொழும்பு வாசஸ்தலமான இந்தியா இல்லத்தில் இப் படையினர் தங்கியிருந்தனர். இந்திய

நகல் யோசனைகள் ஜனாதி பதியிடம் கையளிக்கப்பட்டன. ஆனால் அடிப்படை ஒப்பந்தம், பொதுவான கொள்கைகளையும் பரந்த எண்ணக் கருத்துக்களையும் மட்டுமே கொண்டிருக்க வேண்டுமென்றும் இந்த ஒப்பந்தத்துக்குப் புறம்பாக இரகசியமான பின்னிணைப்பு ஒன்று இருக்க வேண்டுமென்றும் ஜனாதி பதி ஜெயவர்த்தனா தெரி வித்தார். இந்தப் பின்னிணைப்பில் மிக முக்கிய விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி யோசனை தெரிவித்தார். சிங்கள மக்களினதும் இந்தியாவிலுள்ள தமிழர்களின் கருத்துக்களையும் உள்வாங்கி இலங்கையும் இந்தியாவும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதில் குறிப் பிடப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார். இந்த நகல் ஒப்பந்தம் ஜனாதிபதி செயலகத்தில் மேலும் திருத்தியமைக்கப்பட்டது. அத்துடன் இரகசியமான பின்னிணைப்பும் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

தீக்ஷித் இக் கட்டத்தில் மீண்டுமொரு பிரச்சினையைக் கிளப்பினார். இனப்பிரச்சினை தொடர்பான சகல விடயங்களும் நகல் ஒப்பந்தத்திலும் பின்னிணைப்பிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால், இலங்கை - இந்திய இரு தரப்பு உறவுகள் குறித்து இந்தியாவுக்குள்ள பிரச்சினைகள் குறித்தும் இந்தியாவின் அரசியல் மற்றும் பந்தோபஸ்து விடயங்கள் தொடர்பாகவும் எதுவுமே கவனத்தில் எடுக்கப்படவில்லையென்பதை தெரிவித்தார் தீக்ஷித். எனவே இந்தியாவின் நலன் சார்ந்த விடயங்கள் குறித்து மற்றொரு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார் தீக்ஷித் அல்லது வெளிவிவகாரம் தொடர்பாக இரு நாடுகளுக்கு மிடையில் செய்து கொள்ளப்பட்ட கடிதப் பரிமாற்றங்களில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதே தீக்ஷித்தின் கோரிக்கை. இவை குறித்து தீக்ஷித் விளக்கமாகச் சொன்னார்.

பிரிட்டன், பாகிஸ்தான், இஸ்ரேல், தென்னாபிரிக்கா உட்படப் பல நாடுகளிலிருந்து வருகை தந்து, இலங்கையில்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

தங்கியிருக்கும் வெளிநாட்டு இராணுவ மற்றும் புலனாய்வு அதிகாரிகளின் தொகை குறைக்கப்பட வேண்டுமென்பது அவரது கோரிக்கை



இந்திய உயர்ஸ்தானிகர்களின் கொழும்பு வாசஸ்தலம் கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் இது அமைந்துள்ளது. இலங்கை –இந்திய ஒப்பந்தத்துக்கு முன்னதாகவே 'கறுப்பு பூனைகள்' கமாண்டோ அணி இங்கு நிலைகொண்டது.

உயர்ஸ்தானிகராலயமோ அல்லது இந்தியாவின் அரச நிறுவனங்களோ தாக்கப்படும் பட்சத்தில், நடவடிக்கை எடுப்பதற்காகவே இப் படையணி அனுப்பப்பட்டதாகப் பேசப்பட்டது. கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தையும் பனாகொட இராணுவ முகாமையும் தாக்கி இந்தியா கைப்பற்றப் போவதாகப் பரவலாக வதந்திகள் நிலவின.

அமைச்சர்கள் லலித் அதுலத் முதலி மற்றும் ஹமீத் ஆகியோரின் எதிர்ப்புகளைக் கவனத்திலெடுக்க வேண்டாமென்று அமைச்சர் காமினி திசாநாயக்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் கூறினார். அமைச்சர் காமினி தயாரித்த நகல் ஒப்பந்தம் குறித்து அன்றைய தினமே ஜனாதிபதி, காமினி, தீக்ஷித் ஆகிய மூவரும் கலந்துரையாடினர். ஜூலை 14ஆம் திகதி இச்சந்திப்பு நடைபெற்றது. அத்துடன் வடக்கு, கிழக்கிலிருந்து படையினரை வாபஸ் பெறக் கூடாது, அதிரடிப் படையைக் கலைக்கக் கூடாது போன்ற அமைச்சர் லலித்தின் நிலைப்பாடுகள் தொடர்பாக பாதுப்பமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகலயுடன் கலந்தாலோசித்துக் கள நிலைமைகளைத் தீக்ஷித் தெரிந்து கொண்டார். ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் யோசனைப் படியே இச் சந்திப்பு இடம்பெற்றது.

அமைச்சர்கள் தொண்டமானும் கே.டபிள்யூ. தேவநாயகமும் அமைச்சர் காமினியின் நகல் யோசனைகளுக்கு வலுவான ஆதரவு தெரிவித்தனர். நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் மேலும் சில யோசனைகள் நகல் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டன.

சிங்களத்தோடு தமிழையும் அரச கரும மொழியாக்கு வதற்கு

**(அரசியல் தொடர்)**

ஜனாதிபதி ஜெயவர்த்தனா இணக்கம் தெரிவித்தார். வடக்கு - கிழக்கு மாகாணங்களை ஒரு நிர்வாக அலகின் கீழ் இணைப்பதற்கும் ஜனாதிபதி ஒத்துக் கொண்டார். தமிழ் மக்களை ஒரு தேசிய இனம் என்றும் வடக்கு - கிழக்கு அவர்களின் பாரம் பரியப் பிரதேசங்களெனவும் அவர் ஏற்றுக்கொண்டார். திருத்தப்பட்ட

களில் ஒன்று. இலங்கை தனது வெளிநாட்டு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளை மீளமைக்க வேண்டும். அதாவது அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல், சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுடன் கொண்டுள்ள ஈடுபாடுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் இந்தியாவுடன் விரோதம் கொண்டுள்ள வெளிநாட்டு சக்திகள் இலங்கையின் துறைமுகங்களையும் விமான தளங்களையும் பாவிக்க அனுமதிப்பதில்லையென்ற உறுதிமொழியை இலங்கை இந்தியாவுக்கு வழங்க வேண்டும். திருகோணமலையிலுள்ள பெற்றோலிய தாங்கிகளை இந்தியாவின் பயன்பாட்டுக்கு வழங்குவதென்று இலங்கை 1985ஆம் ஆண்டு வழங்கிய உறுதிமொழியைக் கௌரவிக்க வேண்டும். 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' போன்ற வெளிநாட்டு ஒலிபரப்பு நிலையங்கள் அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளின் இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது.

இவையே இந்தியாவின் அரசியல், பந்தோபஸ்துச் செயற்பாடுகளைப் பாதிக்கக் கூடிய விடயங்களென்று சுட்டிக்காட்டினார் தீக்ஷித்.

கடைசி நேரத்தில் முன்னுரைக்கப்படும் அதிக பட்சக் கோரிக்கைகள் இவையென ஜனாதிபதி ஜெயவர்த்தனா பதிலளித்தார். இந்திய அமைச்சர் சிதம்பரம் 1985ஆம் ஆண்டு தன்னைச் சந்தித்துப் பேசியபோதே இதே கோரிக்கைகளை முன்வைத்தாரென்றும் ஜனாதிபதி கூறினார். ஜனாதிபதி இந்த யோசனைகள் குறித்து அமைச்சர்கள் காமினி திசாநாயக்காவுடனும் ரொனி டீ மெல்லுடனும் கலந்தாலோசித்துவிட்டு, இது குறித்த நகல் கடித மொன்றினைத் தயாரிக்குமாறு தீக்ஷித்தைக் கேட்டுக் கொண்டார். இதற்கிடையில் இந்தியாவின் அக்கறைக்குரிய வெளிநாட்டு விவகாரங்கள் தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் பரிமாறப்பட்ட கடிதங்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி அறிவித்தார்.

(தொடர்ந்து வடியும்....)




கொஞ்ச நேரத்துக்குள்ள, என்னைவிட சக்தி வாய்ந்த வேறு யாரோ சேர்ந்துட்டாங்க!"

"அது யாராக இருக்கும்?" - சந்து நாயர் கேட்டார்.


"கண்டுபிடிக்கணும். அப்படியொரு சக்தி அவன்கூட இருக்கிற வரைக்கும் நம்மளால எதுவும் செய்ய முடியாது" - கோவிந்தன் ஏமாற்றத்துடன் பேசினான்.

"கோவிந்தன் குறிப்பிட்ட பெண் யார்?" சந்துநாயர் கேட்டார்.

"அதை நாம கண்டுபிடிச்சிடலாம்!" ஜயந்தன் அவருக்கு உற்சாகம் ஊட்டினார்.

மறுநாள் காலை ஜயந்தன் குளித்துவிட்டு வந்தார்.

காலைப் பலகாரம் சாப்பிடுவதற்கு முன்பாக ராசிப்



"ஒரு யானையையே எதிர்த்து நின்ன உன்னால அவனோட துணையை ஒண்ணும் பண்ண முடியலையா என்ன?" -ஜயந்தன் கொக்கி போட்டார்.

"அதுதான் உண்மை. பன்னிரெண்டு யானைகளை எரிச்சுடுற அளவுக்கு அவ உடம்பில சூடு தெரிஞ்சது. அது சாதாரணமான சக்தியாத் தெரியலை. அதனால அந்த சக்தியோட மூலத்தைக் கண்டுபிடிக்கணும்! அப்புறம் அதை

**எழுதுவது**
**சிவன்**

அழிக்கணும்!"

கோவிந்தன் பேச்சைக் கேட்ட ஜயந்தன் நெற்றியைச் சுளித்தபடி அவனைப் பார்த்தான்.

இந்தத் தடவை நிச்சயமாகக் காரியம் முடிந்துவிடும் என்றுதான் ஜயந்தன் நினைத்தார். ஆனால், நடந்திருப்பதோ நினைத்ததற்கு மாறாக!

"சரி கோவிந்தா நீ புறப்படு" - ஜயந்தன் விடை கொடுத்தார்.

கோவிந்தன் அங்கிருந்து கிளம்பினான்.

அதன் பிறகு சந்து நாயரும், ஜயந்தனும் அடுத்தபடியாக என்ன செய்யலாம் என்பதைப்பற்றித் தீவிரமாக விவாதிக்கத் தொடங்கினர்.

பலகையை எடுத்து வைத்து சோழிகளைப் பரப்பினார்.

சற்றுநேரக் கணக்கிடலுக்குப் பிறகு அவரது முகம் பிரகாசம் அடைந்தது.

"ஆள் யாருன்னு தெரிஞ்சுபோச்சு!" ஜயந்தன் கூறினார்.

"யாருன்னுதான் சொல்லுங்களேன்!" சந்து நாயர் ஆவலுடன் கேட்டார்.

"கோயிலில் இருக்கிற பகவதியின் அருகில்தான் இடம் தட்டுப்படுகிறது. அதனால் நம்மளோட விசாரணையை அங்கதான் தொடரணும்!" - ஜயந்தன் கூறினார்.

"அதுக்கு நாம என்ன செய்யணும்?"

"நேரா கோயிலுக்குப் போக வேண்டியதுதான். மிச்சத்தை அங்க போன பிறகு பார்த்துக்க வேண்டியதுதான்!" -ஜயந்தன் பதிலளித்தார்.

சந்து நாயரும் ஜயந்தனும் சோழி குறிப்பிட்ட திசையில் கோயிலை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

"உங்க ஊர்க் கோயிலுக்குத்தான் இப்பப் போறோம்!" -ஜயந்தன் கூறினார்.

"ஏற்கெனவே நாம அங்க ஒரு தடவை போயி..."

"போனோம். ஆனா. அப்ப நம்மகிட்ட சரியான ஆதாரம் எதுவும் இல்லாம இருந்தது".

இருவரும் அந்த இரவு நேரத்திலேயே கோயிலை அடைந்தனர். எங்கும் இருள் பரவி இருந்தது. வெளிச்சத்தின் எந்த ஓர் அடையாளமும் அந்தப் பகுதியில் இல்லாமலிருந்தது. காற்றே இல்லாத போதிலும் அசைந்து கொண்டிருந்த ஆலமரத்தின் இலைகள் மட்டும் என்னவோ ரகசியம் பேசிக் கொள்வது போல் சலசலத்தன.

மிகவும் மென்மையாக எழுந்த அந்த ஓசை மட்டும், அந்த இடத்தின் மர்மத்துக்கு ஏதோ ஓர் அசைவை ஏற்படுத்துவது போலிருந்தது.

ஜயந்தனும், சந்து நாயரும் அந்த ஆலமரத்தின் அடியில் நின்றிருந்தனர். அங்கிருந்து பார்த்தால் கோயிலின் வடிவம் நிழல் உருவம் மாதிரி தெரிந்தது. கருவறை மட்டுமே மீதமிருந்த அந்த பகவதி கோயில், ஓவியன் ஒருவன் வரைந்த நிழல் சித்திரம் போல் அழகாகக் காட்சி அளித்தது.

"நின்று கொண்டே இருந்தால் எப்படி?" -சந்து நாயர் கேட்டார்.

"அந்த பகவதியின் சக்தியை இல்லாமல் செய்ய வேண்டும்!"

"அதெப்படி? சாத்தியமா?"

"என்னிடம் அதற்கான வேலையிருக்கிறது". -என்றவாறே ஜயந்தன் தனது கையிலிருந்த வெண்கலச் சொம்பு ஒன்றைக் காட்டினார்.

"இதுக்குள்ள என்ன இருக்கிறது?" சந்து நாயர் பயத்தில் சற்று விலகி நின்றவராகக் கேட்டார்.

"ஒரு மிருகத்தோட ரத்தம். அதுவும் வெறுக்கப்படும் ஒரு மிருகத்தினுடையது. இது தேவியின் சிலை மீது விழுந்தால், தேவியின் சக்திகள் அழிந்துவிடும்". - ஜயந்தன் நம்பிக்கை நிறைந்த குரலில் பேசினார்.

"எனக்கென்னவோ பயமாக இருக்கிறது!" -சந்து நாயர் பின்னுக்கு நகர்ந்தபடி பேசினார்.

"நீங்க எதுக்காகப் பயப்படணும்? நான்தான் உங்க பக்கத்திலேயே இருக்கிறேனே சக்தியைக் குறைக்கவும், அதிகப்படுத்தவும் என்ன செய்யணும்கிறதை நான் கற்று வைச்சிருக்கிறேன். இது மாதிரி எவ்வளவு இடங்கள்ல செஞ்சிருக்கிறேன்!"

ஜயந்தன் கயிறு ஒன்றினால் வாய்ப் பகுதியைக் கட்டி வைத்துப் பிடித்திருந்த செம்புடன் கருவறைய்ய நோக்கி நடந்தார். என்ன நடக்கப் போகிறது என்பது தெரியாமல் பயத்துடன் சந்து நாயர் நின்ற இடத்திலேயே அசையாமல் நின்றார்.

அடர்ந்து பரவிப் படர்ந்திருந்த ஆலமரத்தின், இருண்ட பகுதிகளிலிருந்து வெளவால் கூட்டம் ஒன்று சட்டென்று குரல்

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# தியானம் ஒரு மனப்பயிற்சி

**சில** விஷயங்கள், நமக்கு அருகில் இருக்கும்போது அதன் முக்கியத்துவம் நமக்குப் புரிவதில்லை. நமக்கு எளிதில் கிடைக்கக்கூடிய பொருள் என்பதனால் ஒருவகை அலட்சியம் - உதாசீனம் - நம்மிடை மேவுகிறது. சில மனிதர்களின் அருமை பெருமைகளை அவர்கள் அருகில் இருப்பதனால் நாம் உணர் வதில்லை. நாம் பார்க்கும் வேலையிடத்தும், நாம் நெருங்கிப் பழகும் மனைவி, மக்களிடத்தும், கண வனிடத்தும் இத்தகைய 'அசிரத்தை' சகஜமாக எழுகிறது. அதே போலத்தான் தத்துவங்களும். அவற்றை நம் முன்னோர் நமக்காக எழுதி வைத் துவிட்டுப் போயிருக்கிறார்கள். சொல் லிக் காட்டியிருக்கிறார்கள் என்பதனால் அந்த 'தெரிந்த விஷயம்' நாம் அதைப் பூரணமாக உணர முடியாதபடி செய்து விடுகிறது. காந்தியம், யோகம், தியாகம், பரம்பொருள், தியானம் என்கிற பல வார்த்தைகளையும் நாம் கேட்டுக் கேட்டு அவற்றில் நமக்கு அலட்சியம் - ஏன் வெறுப்புக்கூடத் தோன்றுகிறது. அவையெல்லாம் அர்த் தமில்லாத வெறும் வார்த்தைகளாக நம் முன் நின்றுவிடுகின்றன. அதனால் அதன் பொருளையும் அதன் பய னையும் பெரும்பாலோர் உணர் வதில்லை; ஆழ்ந்து சிந்திப்பதில்லை.


யோகம், தியானம், முத்திநிலை என்கிற வார்த்தைகளைப் பற்றித்தான் நான் மனதில் கொண்டு இதை எழுது கிறேன். காதல் என்பதைக் கதையில் படிப்பதற்கும், நேரில் அனுபவிப் பதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. சீனியைத் தாள் பொட்டலத்தில் பார்ப் பதற்கும் வாயில் போட்டுச் சுவைப்பதற்கும் எவ்வளவோ வேறுபாடு இருக்கிறது. சுவைத்தவர்கள் 'சொல்ல இயலாது' என்கின்றனர். சுவைக் காதவர்களோ 'சோம்பேறிகள்' என்றோ 'கதைக்கிறார்கள்' என்றோ கூறித் தங்கள் அறியாமையை, அனுப வமின்மையைப் பெருமையாக்கிக் கொள் கின்றனர். இருளடைந்த நாடிதென்று எவரோ சொன்னார். இருளும் ஒரு பெருமை என எண்ணி வாழ்ந்தேன் என்று நம் அறியாமையைப் பெருமையாக எண்ணி இறும்பூதெய்துகிறார்களே அவர்கள் திருந்த விரும்பாதவர்கள்; திருத்த முடியாதவர்கள்.

நம்மை நாமே அறிந்து கொள்ளும் முயற்சியை ஏன் பள்ளிக்கூடங்களில் போதிப்பதில்லை என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். 'மூலாதார சக்தி நம் மனத்தினுள் உறைந்திருக்கிறது' என்பதை ஏன் நமது குடும்ப, சமுதாயச் சடங்குகள் நமக்குப் போதிப்பதில்லை என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன். சில இடங்களில், சில குடும்பங்களில் இது நிலவுகிறது. ஆனால், காலம் போகிற போக்கில் இந்த அடிப்படை உண்மைகள் வேகமாக முக்கியத்துவத்தை இழந்து வருகிறது.

"சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது. சத்தாகி என் சித்தமிசை குடி கொண்ட அறிவான தெய்வமே தேசோ மயானந்தமே!" என்று தாயுமானவர் பாடினாரே அந்தச் சிந்தையை அடக்கும் திறனைத்தான் 'நம்மை நாமே அறிந்து கொள்ளுதல்' என்று குறிப்பிடுகிறார்கள்.

இவைபற்றி விஞ்ஞானிகள் கூறு வதைக் கேட்கலாம். அமெரிக்காவில் ஹார்ட்வார்ட் பல்கலைக் கழகத்திலும் கலிபோர்னியா பல்கலைக் கழகத்திலும் பலரைத் தியானம் செய்யுமாறு கூறி அவர்களது ரத்த அழுத்தம், இதயத் துடிப்பு, ஆசனவாயின் வெப்பநிலை, தோலின் உணர்வு (எதிர்ப்புச் சக்தி), மூளையின் மின் துடிப்பு முதலியவற்றை மருத்துவக் கருவி கொண்டு சோதித்தனர்.

தியானத்தின்போது நமது ஒக்ஸிஜன் தேவை (மூச்சிழுக்கும் காற்றில் உள்ள) குறைந்தது. அதே போல வெளிவரும் மூச்சில் கார்பன்டை ஒக்சைடின் அளவும் குறைந்தது.



அதாவது மனிதன் நல்ல நினைவுடன் விழிப்பு நிலையில் இருக்கும்போது - தியானம் செய்வதன் மூலம், தூக்க நிலையையும் கடந்த ஓர் உரிய ஓய்வை உடல் பூரணமாக அனுபவிக்கிறது என்று கண்டார். நமது உடலின் உள்ளே நிகழும் உணவு மாறு பாடுகள், இரசாயன மாற் றங்கள் எல்லாம் சுமார் 20 சதம் குறைகின்றன என்று கண்டார்கள்.

இதையெல்லாம் விட தியானம் செய்ப வர்கள், தாங்கள் அனுபவித்த மனநி லைபற்றித் தெரிவித்த கருத்துக்கள், நம் கண்களைத் திறப்பனவாக இருக்கின்றன.

'தியானம் செய்யும்போது மனம் ஒரு கட்டுப் பாட்டில் இருக்கிறது. ஒரு நெறியில், ஓர் அமைதியில் எங்கோ ஏதோ ஒன்றுடன் ஐக்கியமாகி விடுகிறது. இதன் விளைவாக, செய்யும் காரியங்களில் ஒரு தெளிவு ஏற்படுகிறது. ஓர் ஆக்க சக்தி நமது வேலைகளில் வெளிப்படுகிறது. ஒரு நிதானம் நம்மிடை நிலவுகிறது. நமது சூழ்நிலை நமது கைக்குள் இருப்பதாக ஓர் உணர்வு ஏற்படுகிறது. தினம் காலை யிலும், மாலையிலும் ஒரு பதினைந்து நிமிடம் இப்படித் தியானம் செய்வது மற்ற இருபத்திமூன்றரை மணி நேரத்தையும் சிறப்பாகவும், பயனுடையதாகவும் ஆக்கிவிடுகிறது' என்கிறார்கள்.

ஹார்ட்வார்ட் மருத்துவப் பேராசிரியர் டாக்டர் பென்சன் கூறுவதைக் கேட்கலாம்; தியானத்தின்போது இதயத் துடிப்பு நிமிடத்திற்கு மூன்று தரம் குறை வாகத் துடிக்கிறது. நமது மூளை, ஒரு நல்ல தூக்க நிலையின் போது உண்டாகும் 'ஆல்பா' நிலையினை அடைகிறது. மின்சக்தியை எதிர்க்கும் சுமார் - ஒரு மரத்துப் போன தோல் உணர்வு நிலை - சுமார் நான்கு மடங்கு அதிகமாகிறது. மனிதர்கள் மிக அமைதி அடைந்தவர்களாகக் காணப் படுகிறார்கள்."

டாக்டர் பென்சனும், கீத்வாலஸ் என்ற கலிபோர்னியா பல்கலைக் கழக டாக்டர் பட்டம் படிக்கும் மாணவரும் தியானம் பற்றிச் செய்த இந்த ஆராய்ச் சியை அமெரிக்காவில் புகழ்மிக்க விஞ்ஞான ஏடான 'விஞ்ஞானம்' (Science) பிரசுரித்தது. மற்ற எல்லா மருத்துவ வெளியீடுகளும் அவர்களது பல ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டன.

சுமார் ஐந்தடி உயரமும், கீச்சுக் குரலும், வெள்ளையும் கறுப்பும் கலந்த தாடியும், ஒரு வெள்ளை வேஷ்டியினால் உடம்பைப் போர்த்தியிருக்கும் ஓர் இந்திய சாமியார் (மகரிஷி மகேஷ் யோகி) தியா னத்தின் பலனை எடுத்துச் சொன்னபோது, உலகம் சிரித்திருக்கக்கூடும். ஆனால் அந்த உண்மைகள் ஹார்ட்வார்ட், கலிபோர்னியா பல்கலைக் கழகங்களின் ஆராய்ச்சிக் கூடங்களின் முத்திரையைத் தாங்கி வெளிவந்தபோது உலகம் சற்று நின்றது. "உண்மையா.....", "அப்படியா!" என ஆச்சரியக்குறியை எழுப்பியது.

மனநிலை மூலம் உடல் மாற்றங் களைக் கட்டுப்படுத்தலாம் என்பதும், அதை அறிவுபூர்வமான நினைவு நிலையிலிருந்து சாதிக்கலாம் என்பதும் நெருக்கடியில் வாழும் அமெரிக்க சமுதாயத்திற்கு வரப்பிர சாதமாகத் தோன்றியது.

'ரிசர்ப்பின்' என்றும், 'குளோர் புரோ மைசின்' எனவும் ஏராளமான மருந் துகளைக் கோடிக்கணக்கான ரூபாய்க்கு வாங்கி, ஒரு செயற்கை அமைதி பெறுகிறது - வளர்ந்துவரும் மனித சமுதாயம். ஆனால் இதோ ஒரு சிறு குள்ள உருவம், ஒரு தாடிக்காரர், 'கெக்கெக்கே' என்று சிரித்துக் கொண்டு கூறுகிறார்.

"ஏன் மாத்திரைகள்? ஏன் வீண் பணச் செலவு? மூக்கைப் பிடித்துக் கொண்டு, அல்லது கைகளை முழங்காலின்மீது வைத்துக் கொண்டு கண்ணை மூடிக் கொண்டு தினம் பத்து நிமிடம் தியானம் செய்யுங்கள் அவ்வளவுதான்" என்கிறார்.

"எப்படி?" என்று கேட்கிறார்கள் எல்லோரும் ஆவலோடு.

"எல்லாம் ஒரு மந்திரம்!" என்று சொல்லி மீண்டும் அவர் சிரிக்கிறார்.

அது என்ன அது, மந்திரம்?

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழத்துப் போட்டி 169

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 ■ | ■ | 5 | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 ■ | | 17 | ■ |
| ■ | | 21 | 22 | 23 | 24 |
| 25 | ■ | 27 | 28 | ■ | 30 |
| 31 | 32 | ■ | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. சுக்கிரன் கோள்.
5. ஒருவகை மரம். வெற்றிமாலை என்றும் பொருள்படும்.
7. ஆதிவாசிகளின் வதிவிடங்களில் ஒன்று.
10. பிரிவு அல்லது குழு என்று கூறலாம். (குழம்பியுள்ளது).
13. எரிகின்ற விறகினை இவ்வாறு கூறுவர். (குழம்பியுள்ளத)
21. நவரத்தினங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது).
27. அருகி வரும் மொழிகளில் ஒன்று. (திரும்பியுள்ளது).
31. மின்னலின் வெளிப்பாடு. (திரும்பியுள்ளது)
34. மனைவி (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. கோபம்.
2. கோட்பாடு என்றும் கூறலாம். (குழம்பியுள்ளது).
5. வைத்தியம் சார்ந்த நூல்.
6. முடி அல்லது குடுமி என்று பொருள். (தலைகீழ்)
15. நித்திரை என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது).
22. அக்கிரமம் அல்லது ஆத்மா என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது).
24. இசைக்கு இது அடிப்படையானது. (குழம்பியுள்ளது).
25.சோம்பல் என்றும் பொருள்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 167க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

செல்வி.ஏ.ஜே.பாத்திமா பஸ்னா, 61/1A/1, மகாபுத்கமுவ, முல்லேரியா

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. சாஹுல் ஹமீட் பௌஸியா, 84, பீரிஸ் மாவத்தை, களுபோவில.
2. இஷாரா பேகம் ஜமீல், 390 A, செமனரிவத்த வீதி, தென்னங்கும்பர.
3. அனீஸா அல்.ஆஸாத், புன்னைக்குடா வீதி, ஏறாவூர் - 03.
4. எம்.எம்.எம். இஸ்ஹாக், நடுத்தீவு, மூதூர் - 07.
5. எம்.சீ. கலீல், 72, ஹபினா வீதி, கல்முனை - 05.
6. நா.லுபோஜிதா, 200, பாடசாலை வீதி, சேனைக்குடியிருப்பு - 01, கல்முனை.
7. எம்.எப்.எம். மிஸ்காத், மாஞ்சோலைச்சேனை, சின்னக்கிண்ணியா, கிண்ணியா - 3.
8. சீ. தங்கவடிவேல், அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.
9. வ. .இளநிதி, 5, பிள்ளையார் கோவில் வீதி, கல்லடி, உப்போடை, மட்டக்களப்பு.
10. ரி.எம்.எம். அனீஸ், 378, முனையவளவு வீதி, ஏறாவூர் - 01.

## குறுக்கெழுத்துப் போட்டி 167 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கா | 2 ணை | ■ | 4 ப | 5 டை | 6 க |
| 7 ங் | 8 வி | 9 தை | ■ | 11 ள | 12 ஞ |
| 13 த | 14 வு | 15 க | ■ | ■ | 18 ட |
| 19 ம் | ■ | 21 வி | 22 ண் | 23 மீ | 24 ன் |
| ■ | 26 கா | ■ | 28 ம | 29 ன் | ■ |
| 31 சு | 32 டி | 33 வ | ■ | ■ | 36 கா |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 23.05.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-169
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்

- வழங்குவது றாஹில்

## காதல்!

உன்னை முத்தமிட
உனக்குத் தோன்றுகின்றதா?
நீ தாஜ்மஹாலாகிறாய்.
உன் கண்கள்
புன்னகைக்கின்றனவா?
நீ இதயம் திறக்க
ஆரம்பித்திருக்கிறாய்.
பூக்கள் நறுமணம் நிரப்பி
கனவு வாங்குகின்றாயா?
உன் மனது சுவாசிக்கத்
தொடங்கியிருக்கிறது.
உன் முகவரியில் நீ இல்லை.
உன் பார்வையிலிருந்து
புன்னகைப் பாசை
புறப்படுகிறது.
உன் நரம்புகளில் இனிப்பு
ஓடுகின்றது.
நீயே உனக்குத் தேனாகிறாய்.
வெகு நேரம் வரை
இரவுகளோடு
உரையாடுகிறாய்.
உறக்கம் உன்னை
ஏற்றுக்கொள்ளும் போது
கனவு விளக்கேற்றி
வைக்கிறாய்.
உன் வார்த்தைகள் அடிக்கடி
வேர்க்கின்றன.
மொழி இழந்த
ஊமையாகிறாய் நீ!
மௌன ஊர் உண்டாக்கி
அதில் நீ வாழ்கிறாய்.
நீ உன்னை வாசிக்கின்ற
போதெல்லாம் உன்
தேகத்தில் கூட பூக்கள்
பூக்கின்றன.
உனது உயிர் இன்னொன்றில்
உட்கார்கின்றது.
உன் இதயத் துடிப்புப் பிடித்து
இன்னொரு துடிப்பில்
கலக்கின்றாய் நீ!
கற்பனை நட்சத்திரங்களிடம் உன்
வானம் வசப்படுகிறது.
உன் பேனா தலைகுனியும்
போது ஒரே ஒரு நாமத்தையே
நினைக்கிறது.
அது மொழி சிந்தும் போது
உன்னிடம் கவிதைகள்
கிடைக்கின்றன.
இமைகள் விழிகள் மீது அமரும்
போதும், மொழிகள் கவிதை மீது
இறங்கும் போதும் நீ
இன்னுமொரு சாஜஹான்
ஆகிறாய்.
பூக்களோடு பேசவும் பட்டாம்
பூச்சிகளோடு விளையாடவும்
உன் மனது கட்டளை செய்கிறது.
மழை பெய்யாமலேயே நீ
குளிக்கிறாய்.
இமை திறக்காமலேயே நீ
காட்சிகளில் அமர்கிறாய்.
உன் மனதுக்குப் பசி மிகவும்
பிடித்திருக்கிறது.
விழிகளால் உண்கிறாய்.
குடிக்கக் குடிக்க உன் தாகம்
நீள்கிறது.
உன் உணர்வுகள் சிகரமாக
நிமிர்ந்திருக்கின்றன.
அதில் நீ தவம் செய்கிறாய்.
நீ உன்னை இழந்து வேறொன்று
பெறுகிறாய்.
இப்படி...
உயிர், உயிரை அடைகின்ற
முயற்சிதான் - காதல்.

# இருந்தும் இறந்தவனாய்...

“நீ எப்படி இந்த போதைவஸ்த்துக்கு அடிமையானே. இதை உனக்கு அறிமுகப்படுத்தினவங்க யாரு...? இந்தப் பழக்கத்தை உன்னால் விடவே முடியாதா...? இப்படியெல்லாம் நான் கேள்விகள் கேட்டு உன்னை தொந்தரவு பண்ணப் போறதில்லை! சோ...யூ பீல் ஃபிரி! ஜஸ்ற் என்னை உன் பிரண்டா நெனைச்சுக்கோ” என்று கூறிய பிரபல மனோதத்துவ நிபுணர் வெங்கட் சர்மாவை கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டேயிருந்தான் ரவி. அவன் முகத்தில் தெரிந்த விரக்தியின் சாயலை அவதானித்த மருத்துவர், ஒரு நிமிடம் அவனை ஓய்வெடுக்கச் செய்துவிட்டு பேசத்தொடங்கினார்.


“ரவி...நீ படிச்சவன்தானே... உனக்கு நல்லதெது கெட்டதெதுன்னு பிரித்தறியும் அறிவிருக்கு; இல்லையா...?” அவர் பதமாக பேசி அவனது கண்களை கூர்ந்து நோக்கினார். அதில் தெரிந்த ஒருவகை மிரட்சி கண்டு புன்னகைத்தார். யூ ஆர் வெரி ஹேண்ட்சம் அண்ட் லக்கி!” என்ற மந்திர வார்த்தைகளை சொன்னதுமே அவனது வதனம் மெல்ல மாற்றம் கண்டது. அவன் உதட்டோரத்தில் சிறு புன்னகை மின்னல் பளிச்சிட்டது.

குட்..., “அவனை தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தினார். அவரது கண்களில் துளிர் விட்ட பிரகாசம் ரவியின் விழிவழியே ஊடுருவி அவனுள்ளத்தில் அதிர்வலைகளைத் தோற்றுவித்தது. “வெல்... இனிமேல் நீ பொழைச்சிடுவே!” உறுதியாக சொன்னார். மனம் திறந்து பேசினார். “ரவி! லிசன்ற்டு மீ... நாம எல்லாருமே இந்த உலகத்தில் ஒரு தடவை... ஒரே தடவைதான் வாழப் போறோம்; வாழ்க்கைங்கிறது ஓர் அழகான பூஞ்சோலை ! இந்த உண்மையை நம்மில் எத்தனை பேர்வரை புரிஞ்சுக் கிட்டிருக்கோம்...!” அவனது அழிச்சாட்டியங்களுக்கு ஆணி அறைந்தாற் போலிருந்தது. அறிவின் கண்களை மூடி மறைத்துக் கொண்டிருந்த அறியாமை எனும் பனிப்படலம் மெதுவாக விலகுவது போல் உணர்ந்தான்.

போதை எனும் பெரும் மாயை ஆரம்பத்தில் சிலந்தி வலை போல் இருந்தபோது அதனுள் சிக்கி வாழ்வின் வசந்தமிழந்து - வலிமை குன்றி - அதுவே இன்று இரும்புச் சங்கிலியான பிறகு, அதனை அறுத்தெறிய முடியாமல் திண்டாடிய நேரத்தில் “போதையின் அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெறுவதற்கு, அறை கூவலிடும் மருத்துவரின் அறிவுரைகளில் உள்ளம் ஒன்றிப்போனானவன். அவனது உணர்வுகளில் ஒரு திருப்பம்! “எல்லாருடைய வாழ்க்கைக்கும் ஓர் அர்த்தமுண்டு” என்று டாக்டர் கூறிய ஆணித்தரமான கருத்தை அவனுள்ளம் ஏற்றுக்கொண்டது. சந்தர்ப்ப வசத்தால் தகாத சினேகிதர்களின் உறவால் விளையாட்டாக ஆரம்பித்த இந்தப் பழக்கம், விபரீதமாக வளர ஆரம்பித்த போதுதான் ஒரு கணம் அவன் சிந்திக்கத் தலைப்பட்டான். தன்னைத்தானே சுய பரிசோதனை செய்தான். அழிவுப்பாதையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்த மரண விளையாட்டில் ஏராளமான பணம், பொருள் செலவாகியும் வீரியம் இழந்து, இளமை கரைந்து முதுமை வந்து முற்றுகை இடுவதற்குள் ஒரு முடிவுக்கு வந்தான். எவ்வாறாகினும் இதிலிருந்து விமோசனம் பெற வேண்டுமென்ற தீர்மானத்தில் டாக்டர் வெங்கட் சர்மாவின் உதவியை நாடினான். தன்னிச்சையாக அவன் அவரைக் காண வரவே அவனை எப்படியும் குணப்படுத்த முடியுமென அவர் திடமாக நம்பினார். எப்படியும் போதையிலிருந்து மீள வேண்டுமென்ற அவனது துடிப்பையும் ஆர்வத்தையும் அவர் புரிந்து கொண்டு செயற்பட்டார்.

“ரவி...ப்ஃயூ டோன்ற் மைண்ட்...உன்கிட்ட ஒண்ணு கேட்கலாமா...?” கவிழ்ந்திருந்த அவனது தலை இருநூறு டிக்ரிதான் சுகமிருக்கு?” புருவங்கள் மேலுயர்த்தி அவன் வெறித்துப்பார்த்தான். “வட் டு யூ சே...?” டாக்டர் விடுவதாய் இல்லை. கமான் ஐ ஸே...எக்ஸ் பிளாண் டு மீ! அவனிடம் பதில் இல்லை. “ஓகே... ஓகே...ரிலாக்ஸ்! வெங்கட் சர்மா மேசை மீதிருந்த டேப்ரிக்கார்டரின் விசையை அழுத்தவும் அதிலிருந்து எழுந்த மெல்லிசை இதமாய் ஒலித்தது. அது அவன் மனதை மயிலிறகால் வருடிச் செல்வது போலிருந்தது. மெல்லிய பச்சை - மஞ்சள் நிறங்களிலான மின்குமிழ்களும் அதிலிருந்து வெளிப்படும் ஒளித்தெறிப்பும் அவனுள்ளத்தில் ஒரு கதகதப்பைத் தரவும், அமைதி கொலுவீற்றிருந்த அந்த அறைக்குள், அவனது ஆன்மா ஆசுவாசமடைந்து கொண்டிருந்தது. டாக்டரின் அணுகுமுறையினால் பையப்பைய அவன் மனம் தெளிவடையவே இருண்டு கிடந்த வதனத்தில் சிறிய ஒளிக்கீற்று முகம் காட்டியது. ஆன்மீகம் கொஞ்சம் அறிவியல் கொஞ்சம் கலந்து அங்கே அவனுக்கு சிகிச்சையளித்துக் கொண்டிருந்தார் டாக்டர் சர்மா.” இனிமேல் குணப்படுத்தவே முடியாது என கைவிடப்பட்ட பலரை தனது ஆளுமையினாலும் திறமையினாலும் குணமாக்கி அவர்களது வாழ்வில் மறு மலர்ச்சியை உருவாக்கிய பெருமை டாக்டர் சர்மாவுக்குண்டு. வெறும் பணத்துக்காக மட்டுமன்றி தார்மீக உணர்வோடு சிறந்த சேவையாற்றி வந்தார் அவர்.

ரவி...ஹவ் இஸ்யுவர் பீலிங் நவ்? ப்ரஷர் குறைஞ்சிருக்கா - மனசு தெளிவடைஞ்சிருக்கா! லுக் ரவி... நம் வாழ்க்கை நம் கையில்தானிருக்கு! அதை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதோ - அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்வதோ நம்முடைய பலத்தையும் பலவீனத்தையும் பொறுத்திருக்கு! சோ... வாழணும்னு ஆசை இருந்தால் நூறு வருடம் வேண்டுமானாலும்வாழலாம். இல்ல... சாகத்தான் வேணும்னா.... அதுக்கு இப்படி கொஞ்சம் கொஞ்சமா சாகவேண்டிய அவசியமே இல்ல...கொஞ்சம் பாய்ஷனைப் சாப்பிட்டாலே போதும்; அடுத்த நிமிடமே பரலோகம் போய்விடலாம்! யாருக்கும் எந்த சிரமமும் இல்லை; செலவும் கம்மி! வட் இஸ் யுவர் ஐடியா? இப்போ சொல்லு...நீ வாழணும்னு ஆசைப்படுறீயா - இல்ல... சாகலாமுன்னு...? முடிவை அவனிடமே விட்டு விட்டார். டிராயரை திறந்து விஷ பாட்டில் ஒன்றை வெளியே எடுத்தார். அது அவன் கண்களிலே படும் விதமாக மேசை மீது வைத்தார்.



-யாழமீர் மர்சூன்

அவனை ஒருமுறை ஏற இறங்க நோட்டமிட்டார். அவன் அதனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். இதுவரை அடங்கிப் போய் இருந்த ஆரவாரப் பேய்களின் தாண்டவம் அவனுள் பழையபடி தலைதூக்கவும் “வாழ்வா - சாவா என்ற மனப்போராட்டத்தில் சிறகொடிந்த பறவை போல் திணறினான். வியர்த்துக் கொட்டிக்கொண்டிருந்த முகத்தை கைக்குட்டையை எடுத்து துடைத்துக் கொண்டான். நீண்டதொரு பெருமூச்சை விட்டவனின் கண்களிலே விரக்தியின் சாயல்!

வெங்கட் சர்மா தனது குறுந்தாடியை வருடிக்கொண்டே சொன்னார் “எந்த ஜீவராசிக்குமே வாழணுங்ற ஆசை தான் அதிகம்! சோ...நீ கூட அப்படித்தான்; இல்லேனா நீ என்னைத் தேடிவந்திருக்கவே மாட்டேல்ல... இதோ பார் அருகில் இருந்த ரோஜா செடி மீது விஷத்தை கொஞ்சம் ஊற்றினார். மறுகணமே அது முற்றாக கருகிப்போய்விட்டது. ரவி லுக் அற் திஸ்! இற் இஸ் டெத்! கொஞ்ச நேரத்துக்கு முன்னால் எவ்வளவோ அழகா இருந்த ரோஜா...இப்போ எப்படியாச்சுன்னு பார்த்தியா...? என்று அவர் கூறக்கேட்டு கண்களில் நீர் கோர்க்க ரவி அவரை ஏறிட்டான். “டாக்டர்...!” என்றான் பீதியோடு.

எஸ் மை போய்....எவ்ரி அக்ஷன் ஹேவ் ஏ ரியக்ஷன்! இற் இஸ் ஏ சிம்பிள் லாஜிக்! இதுக்கப்புறமும் இந்த போதை உனக்கு தேவைன்னா அப்புறம் உன்னிஷ்டம்... முயற்சி பண்ணினா முடியாதது ஒண்ணுமில்லே! உனக்கு கிடைச்சிருக்கிற இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கோ. அடுத்த வாட்டி நீ இங்கே வரும்போது புது மனிதனா வருவேன்னு நம்புறேன். ஐ பிளீவ் யூ! எப்போ நீயாகவே என்னைத் தேடி வந்தீயோ அப்பவே நீ பாதி குணமாகிட்டே! எல்லாத்துக்குமே நம்ம மனசுதான் காரணம்! கண்ரோல் யுவர் ஷெல்ஃப்.

டாக்டர்...என்னால அது முடியு....? சந்தேகத்தோடு கேட்டான். கண்டிப்பா உன்னால் முடியும்! நான் ஒண்ணும் உன்னை மகாத்மாவா மாறவா சொல்றேன்...? அட்லீஸ் பொறுப்புள்ள ஒரு மனுஷனா வாழவாவது முயற்சி பண்ணலாமே...முயற்சி திருவினையாக்கும் பெஸ்ற்ஒப் லக்! எனக்கு அந்த நம்பிக்கையே இல்லாமல் போயிட்டிருக்கே டாக்டர்! “நோ...நோ...டோன்ற் சே லைக் தட்! நம்பிக்கை இல்லாமல் வாழ்க்கையே இல்ல” அவனை தைரியப்படுத்தி சிந்திக்கவிட்டார். லுக் ரவி! நான் பிரடிக்கலா இதை எதுக்கு செய்து காட்டினேன்னு இப்போ உனக்கு புரிஞ்சிருக்கும்; எதையும் அழிக்கிறது வெரி சிம்பிள்! வாழ்க்கை ரொம்ப விசாலமானது; ஒரு குறுகிய வட்டத்துக்குள் கிடந்து புழுங்காமல் பரந்த நோக்கோடு உலகை பார்க்க கத்துக்கோ - எல்லாமே அழகானதாய் தோனும்! ஐ விஸ் யூ ஆல் சக்சஸ் - டேக் கேர்! இதுவரை போதையே பாதையென வீழ்ந்து கிடந்தவனுக்கு டாக்டர் சர்மா சிறிது நேர மூளைச்சலவை செய்து வைத்ததோடு மட்டும் நின்று விடாமல் அவனுக்கு சில தேகாப்பியாசங்களையும் கற்றுக் கொடுத்தே நலிவுற்றிருந்த அவனது உடல் நிலையை தேற்றுவதற்காக வைட்டமின் மாத்திரைகள் எடுக்கச் சொல்லி சிட்டை எழுதிக் கொடுத்தார்.

ரொம்ப நன்றி டாக்டர்! ஐ வில் பீ கண்ரோல் மை ஷெல்ஃப். மனதில் புதுத் தெம்புடன் ரவி அவரிடமிருந்து விடை பெற்றான். பாதையிலிறங்கி சிறிது தூரம் நடந்திருப்பான்; திடீரென கால்கள் தடுமாறி நிலத்தில் இடறி விழ நேர்ந்த போதுதான் அவனுக்கு உண்மையே புரிந்தது. இதுநாள் வரை “உயிர் இருந்தும் இறந்தவனாய்” இவ்வுலகில் தான் வாழ்ந்து கொண்டிருந்ததை எண்ணி வெட்கித் தலை குனிந்தான் - தன் தவறை உணர்ந்து மனம் வருந்தினான்.

# கடைசி ஆசை

**புவனா** தனது சாய்மனைக் கதிரையில் சாய்ந்தபடி தனது பழைய வாழ்வை சிந்தித்தாள். அது கசப்பானது என்றாலும் இருபத்தைந்து வயதில் பெற்றோரை, உறவினரை எதிர்த்து வந்து காதலித்த வனைக் கரம் பிடித்தவள் நான்கு வருடங் களுள் இரண்டு பெண்பிள்ளைகளுக்குத் தாயுமானாள். போரும் வறுமையும் வாட்டி யது. அதனால் வறுமையைப் போக்க வெளிநாடு போக எத்தனித்த கணவனை இவள் தடுக்கவில்லை. போனவன் திரும்பி தாய்நாடு வரும்போது மூத்தமகளிற்குப் பத்து வயது, இளையவளுக்கு எட்டு வயது. வந்தவன் தனியாக வரவில்லை. இன்னொரு பெண்துணையுடன் வந்தான். புவனா எதிர்பார்க்க வில்லை தனது கண வன் தனக்கு இப்படியொரு துரோகத்தைச் செய்வான் என. கணவனின் சட்டையைப் பிடித்துக் கத்தினாள், கதறினாள். அப்போது அவன் “இந்தாபார் புவனா என்னால இந்தக்கஸ்ரத்தில ரெண்டு பெட்டைப் பிள்ளைகளையும் வைத்து காப்பாத்த முடியாது அதனால....” என்று கூறி முடிக்கும் முன்னமே புவனா தனது இரண்டு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினாள். தனது பெற் றோரிடமும் போகமுடியாமல் உறவினர் களின் நக்கல் பேச்சுக்களைக் காதில் வாங்கிக் கொண்டு எந்த வறுமையை காரணம் காட்டி தன்னையும் பிள்ளை களையும் விரட்டினானோ அவன் முன்னால் தனது பிள்ளைகளை நன்றாகப் படிப்பித்து, அவர்களை நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்து வாழவைக்க வேண்டும். அதன் பின் தான் செத்தாலும் பிரச்சினை இல்லை என்ற முடிவுடன் தன்னால் இயன்ற, தெரிந்த அனைத்து வேலை களையும் செய்து பிள்ளைகளைப் படிப்பித்து நல்ல நிலைக்கும் கொண்டுவந்து விட்டாள்.

இன்றோடு முப்பது வருடமும் முடிந்து விட்டது. மூத்தவளிற்கு நல்லபடியாக திரு மணம் முடித்துக் கொடுத்துவிட்டாள். புவனா பாட்டியும் ஆகிவிட்டாள். இன்று புவனாவின் இளைய மகளின் திருமணம். அந்த அசதி யில் இருந்த புவனா மனதுள் மறைந்திருந்த சோகத்தை பெருமூச்சுடன் நினைத்து முடிக்கும் போது, புவனாவின் மூத்தமகள் “அம்மா அம்மா வாங்கோவன் மாப்பிள்ளை வீட்டார் எல்லாம் வந்திட்டினம் தங்கச்சி யையும் வெளிக்கிடுத்தியாச்சு; என்னம்மா செய்யிறீங்க வாங்களன்” எனக் கூப்பிட வெளியில் வந்த புவனா மகளிடம் “காயத்திரி என்ர கடமையெல்லாம் இன்றுடன் முடிந்து விட்டது. உங்கட அப்பா என்ன தன்னந் தனியா தவிக்க விட்டப்பவே நான் செத் திட்டன். அதுக்கப்புறம் எனக்கு வாழ ஆசை யில்ல. ஆனாலும் உங்க ரெண்டு பேரையும் நினைச்சேன், அத்தோடு உங்கட அப்பா முன்னால, என்ன நக்கல் பண்ணின ஊர் முன்னால உங்கள நல்லா படிக்க வைச்சு நல்ல இடத்தில முடிச்சுக் கொடுக்கணும் எண்டும் அதற்குப் பிறகு நான் செத்தாலும் பிரச்சனையில்லையெண்டுதான் இறைவன் கிட்டேயும் வேண்டினேன். நான் பட்ட கஸ்ரத்திற்கு பலனும் கிடைத்தது. இப்ப என்ர கடைசி ஆசையும் நிறைவேறப்போகுது நாளைக்கே நான் செத்தாலும் பரவாயில்லை என்று முடிக்கும் முன்னர் இடைமறித்த காயா



-மதுமிதா, நாவாந்துறை.

“என்னம்மா இந்த நேரத்தில் இப்படி யெல்லாம் பேசுறீங்க” எனக்கேட்க புவனா இல்லமா நான் சொல்லுறதகேளு. நீங்க ரெண்டுபேரும் ஒற்றுமையா சகோதர பாசத் தோட வாழனும் அதே போல் யார் உதவி யெண்டு வந்தாலும் அவர்களுக்கு உங் களால இயன்ற உதவிய செய்யனும் சரியா தங்கச்சிக்கும் இதைச் சொல்லம்மா, நான் சொன்னதை கடைசி வரைக்கும் மறக்கக் கூடாது. மற்றது என்ன மாதிரித்தான் தாய் வளர்த்தாளும் தகப்பன் இருந்து வளர்ப்பது போல் வருமா என்டு கேட்டவையள் எல்லாரும் மௌனமாகி நிற்கும் அளவுக்கு உங்கள நான் வளர்த்திருக்கேன். அதேபோல இனியும் நல்லவர்களா வாழனும் சரியா. எனக்கூறிமுடித்தாள் புவனா.

கலியாணமும் நல்லபடியா எந்தவித தடங்கலும் இடையூறும் இல்லாமல் முடிந்தது. அந்த சந்தோசத்தில் களைப்பை மறந்து இருந்தவர்களை இரவு வந்து ஒவ்வொருவராகப் பிரித்தது. அப்போது புவனா தனது கடைசி ஆசையும் நல்ல படியாக நிறைவேறிய சந்தோஷத்தில் தான் 30 வருடம் பட்ட கஸ்ரம் கவலைகளினால் ஏற்பட்ட அசதி யைப் போக்க அந்த இரவு முழுமை யாக தூங்கிப் போனாள்.

சூரியன் உற்சாகத்துடன் வெளி வர காலையும் உதயமானது; திரு மண வீடும் கலகலப்பானது, எல்லோ ரும் எழும்பிவிட்டார்கள். அப்போது வெளியே வந்த புவனாவின் இளையமகள் காயத்திரியைப்பார்த்து “அக்கா இன்னும் அம்மா எழும்ப வில்லையா” எனக்கேட்க, காயாவும் இல்லடி அம்மாவுக்கு சரியான களைப்பு பாவம் தூங்கட்டும்; அவ எத்தனை வருடங்களுக்குப் பிறகு இப்பதான் நல்லா நித்திரை கொள் ளுகிறா அதுதான் நான் அம்மாவை எழுப்பவில்லை...” என்று கூறி முடிக்கும் முன்னர், ஐயோ புவ னான்ரி எங்களவிட்டு போயிற்றீங் களே என்ற சத்தம் கேட்டு எல் லோரும் ஓடினார்கள். அங்கே புவனா தனது ஆசை, கடமை நிறைவேறிய சந்தோசத்துடன் இந்த உலகு கொடுத்த உறவுகளை விட்டு விட்டு பிரிந்து சென்றிருந்தாள். அவள் பிரிந்து சென்றாலும் அவள் வாழ்ந்த முறை அவள் சொன்ன ஒவ்வொரு நல்ல விஷயங்களும் அவள் பிள்ளைகளிடம் மட்டுமல்ல ஏனையோரின் மனங்களிலும் நீங்காத நினைவுகளாக பதிந்திருந்தது.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

# சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

வான்முகில் தருகின்ற ஒவ்வொரு மழைத்துளியும் தூய்மையானதுதான். ஆனாலும் அவை சேர்கின்ற இடத்தைப் பொறுத்தே அதன் பெறுமதி நிர்ணயிக்கப்படுகிறது. சாக்கடையில் வீழ்வது சாக்கடையாவதும், கிணற்றில் வீழ்வதும் குடிநீராகவும் மாறுவது போல், மனித உருவம் பெற்றுவிட்டால் மட்டும் மனிதன் என்னும் பெரு நிலையை அடைய முடியாதென்பது சான்றோரின் கருத்து. அதில் மேலும் ஓர் எடுத்துக்காட்டாக கூறுவதாயின் ஒரு குடம் பாலைக் கெடுக்க ஒரு துளி விஷம் போதுமானதே.

*"நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்*
*அல்லற் படுப்பதூஉம் இல்"* — *குறள் - 460*

நல்லினத் தொடர்பைக் காட்டிலும் ஒருவனுக்குச் சிறந்த துணையுமில்லை; தீய இனத்தைவிடத் துன்பத்தை விளைவிப்பதும் வேறில்லை.

# பிரிவுத்துயர் தாளேன்

தருவது **கற்பகன்**

**பூங்கொடியை** விட்டுப் பிரிந்த செண்பகவல்லி இல்லத்தை அடைந்ததும் தனிமை அவளை ஆட்கொண்டபொழுது, மாலைப்பொழுதின் மயக்கம் அவளைப் படாத பாடு படுத்தியது. அந்த நிலையிலிருந்து விடுபட ஏதாவது வழி உண்டா என்று எண்ணிய அவள், மனதில் அருள்வர்மனின் நினைவு மீண்டும் மீண்டும் அலை மோதிய போது, கால்கள் அவளை அறியாமலேயே மலர் வனத்தைநோக்கி நடக்கலாயிற்று.

அருள்வர்மனோடு அவள் களித்திருந்த காலங்களை எண்ணி ஏங்கியது அவளது மனம். வழக்கமாக அவள் மனதுக்குப் பிடித்த அந்த ரோஜாச் செடியருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். மாலையில் மலர்கின்ற மந்தாரையின் மணம் அந்த வேளையிலும் மனதுக்கு ஒருவித இன்பத்தைத் தந்தபோதிலும், அதை நுகர்வதற்கு ஆண்துணை அருகிலிருந்தால் எத்தனை இன்பமளிக்கும் என்றெண்ணிய போது அவள் மனதிலி



ருந்து எழுந்த ஏக்கங்கள் நெடுமுச்சாக வெளியேறிக் கொண்டிருந்த வேளையில்தான், அவள் அமர்ந்திருந்த மலர்வனத்தின் முன்னாள் நீண்டு வளைந்திருந்த சாலையில் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் புழுதியைக் கிளப்பிக் கொண்டு வரும் ஓர் வெண்புரவியின் மேல் ஆஜானுபாகு போன்றதோர் உருவம் அமர்ந்திருப்பதை அவதானித்தாள். "யாராக இருக்கும் அவர்தானோ?" என்று கேள்வி எழுந்து மறைவதற்குள் புரவியின் குளம்பொலி அவள் காதில் விழத் தொடங்கிவிட்டது. அவள் கண்களையே அவளால் நம்பமுடியவில்லை. வாடிக்கிடந்த அவள் மலர் முகம் கதிரவனைக் கண்ட செந்தாமரை போல் மெல்ல மெல்ல மலர்ந்தது. புரவியை விட்டிறங்கிய அருள்வர்மன், தன் உடைகைளச் சரி செய்து கொண்டு செண்பகவல்லியை நிமிர்ந்து பார்த்தான். அதற்கு மேலும் அவளால் அவனை எதிர்கொண்டு நோக்க முடியவில்லை. காற்றின் வேகம் தாங்காமல் தொட்டால் சுருங்கிச் செடி தலைகுனிவது போல் அவள் தலை தானாகவே தரையை நோக்கியது. அவளை அறியாமலேயே அவள் செம்பவள இதழ்கள் துடித்தன. என்றுமே இல்லாததோர் பதற்றம் அவளை வந்தடைந்தது. யாரோ புதியவரைக் கண்டது போன்றதோர் நாணம் அவள் முகத்தில் செம்மை படர்வதிலிருந்து அறிய முடிந்தது.

இத்தனையும் கணப்பொழுதில் நடந்து முடிந்தவை.

அருள்வர்மன் மெதுவாக அருகில் வந்து செண்பகவல்லியின் கைகளைப் பற்றினான். அவன் கை பற்றியதும் அந்த நொடிப்பொழுது செண்பகவல்லியின் உடலில் மின்சாரம் தாக்கியது போல் ஓர் பெரும் அதிர்வலை மோதி மறைந்தது. அந்த நிலையில் அவளால் எதுவும் பேசமுடியவில்லை; அதற்கு அவள் முற்படவுமில்லை.

மௌனம் காத்து நின்ற அவளின் தாடையை மெல்ல நிமிர்த்திய அருள்வர்மன், செண்பகவல்லி என்று அழைக்க நினைத்தவனுக்கு உதடுகள் அசைந்ததேயல்லாமல் ஓசை வெளி வரமறுத்தது. மெதுவாக அவளைத் தன் மார்போடு அணைத்தான்.

அந்த இதமான அணைப்பில் அவள் உடலெல்லாம் ஓர் இணந்தெரியாத இன்பக் களிப்பில் துவண்டு பூரித்தது. எவ்வளவு நேரந்தான் இப்படியே நின்றார்கள் என்பது இருவராலுமே அறியமுடியாவொன்று. அருள்வர்மனின் மார்பில் தலை சாய்த்திருந்த செண்பகவல்லியின் கண்கள் குளமாகிக் கட்டிழந்து கரைபுரண்டோடியதன் விளைவு, அருள்வர்மன் அணிந்திருந்த மேலாடை நனைந்தும் தணியாத வெந்நீர் அவன் மார்பில் பட்டபோதுதான் அதன் கொதிப்பின் தன்மையை அவனால் உணர முடிந்தது.

தன் மார்போடிணைந்திருந்த செண்பகவல்லியின் மலர் முகத்தை மெதுவாக நிமிர்த்தினான் அருள்வர்மன். அவள் மலர் முகத்திலிருந்து சிந்துகின்ற பனித்துளிகள் மறைந்தோடி, மழை அற்றுப்போய், வரண்டு கிடந்த நிலத்தில் மழை நீரோடிய தடங்கள் தென்பட்டன. அதிகாலை வெள்ளியை ஒத்த கண்கள் அனல் பட்ட மலராகக் காட்சியளித்தன. தேன் சிந்தும் செம்பவளம் செம்பருத்திக் கொப்பாகிவிட்டது. இத்தனை மாற்றங்களும் எதனால்? என்ற கேள்வி அவன் மனதில் எழுந்தபோது அவன் முகத்தையே உற்று நோக்கிய வண்ணமிருந்த கண்கள் ஒளி பெற தொடங்கியது.

அத்தான்! என்ற அமுதமொழி அவள் வாயிலிருந்து வெளிவந்த நேரம் கண்களில் கோர்த்திருந்த முத்துக்கள் உருண்டோடி அருள்வர்மனின் கைகளில் விழுந்த பொழுது அவை தீப்பொறி பறந்து விழுந்தது போலிருந்தது. ஏன் என்ற கேள்வியை அருள்வர்மனின் புருவங்கள் மேலெழுந்து பதிந்ததிலிருந்து புரிந்து கொண்ட செண்பகவல்லி, ஒன்றுமில்லை என்பதற்குப் பதிலாக தலையசைத்தாள். "அப்படியானால், ஏனிந்தக் கண்ணீர்?" இத்தனை காலமாக இதயத்தினுள் தேக்கிவைத்திருந்த வேதனையென்னும் எரிமலையை மோதிக் கண்வழியே வெளிப்படுத்துகிறதே கண்ணீர் அதனால்தான் இத்தனை சூடாக இருந்ததோ தெரியவில்லை.

அருள்வர்மனின் வருகையால் செண்பகவல்லியின் இதயத்தில் குமுறிக் கொண்டிருந்த எரிமலை குளிர்ச்சியடையத் தொடங்கியிருந்தது. அவள் கயல்விழிகள், ஆற்றாமையால் அழுத அவலக் கண்ணீர் இன்று ஆனந்தக் கண்ணீராக மாறியிருந்தது. அந்திவானம் கறுக்கத் தொடங்கியது. அயலவர்கள் எவருமில்லைத் தடுப்பதற்கு ஆரத் தழுவி நின்ற உடல்கள் அணைவதில் நெருக்கம். அன்பின் உச்ச நிலையில் இருந்த உள்ளங்களின் ஆவல் கரைபுரண்டன.

அத்தான்! என்ற சிணுங்கல். அன்பே என்பது பதிலுரை. இவைகளெல்லாம் அந்தி வேளையின் முகவுரைகள். இத்தனை காலமாக அடக்கி வைத்திருந்த ஆசைகளையெல்லாம் கொட்டித் தீர்த்தான் அருள்வர்மன். ஆசைக் கடலில் மூழ்கிக் கிடந்த செண்பகவல்லியும் திழைத்தாளேயன்றிக் களைக்கவில்லை.

கரும்பைக் கண்ட களிறானான் காளை; கனியைக் கண்ட கிளியானாள் கன்னி. அவள் செம்பவள இதழ்கள் துடித்தன. சீரான பல் வரிசை அதன் செம்மையைக் குறைத்தன. வெளுத்தது செவ்விதழ்கள்; தென்றல் வீசத் தவறவில்லை. ஆனால் தேகத்தில் நீர்த்துளிகள் முத்துக்களாய் உருண்டோடியதைக் கவனிப்பாரில்லை.

அந்தி முதல் அர்த்தசாமம் வரை அன்புப் பிணைப்பில் மூழ்கி அயர்ந்திருந்த வேளை, எங்கிருந்தோ எழுந்த சேவலின் கூவல் பனி மூட்டத்தைப் பயன்படுத்தியதோ என்னவோ அருள்வர்மனின் காதில் முரசொலித்தது. அரை உறக்கத்திலும் அவன் விழிப்புணர்வை வெளிப்படுத்தியது. செண்பகவல்லி இன்னும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். கசங்கிய மலராக அல்ல கட்டிலில் சயனிக்கும் கைக்குழந்தைக்கு ஒப்பான பாவனையில் அவள் கண்களைத் திறந்தால் கலைந்து விடுமோ உறக்கம் என்ற எண்ணம் அவனை வருத்திய போதிலும் காலையானால் காட்டிக் கொடுத்துவிடுமே களவை என்பதனால் மெதுவாகக் குனிந்து அவள் உச்சியில் முத்தமிட்டான். உஷ்ணக்காற்று அவள் முகத்தில் பட்டதும் கண்களை மெல்லத்திறந்தாள் செண்பகவல்லி.

செண்பகவல்லி இன்னும் தூக்கமா? நாழியாகிவிட்டது என்றான் பரிவோடு. உம்.. எனக்குத் தூக்கம் வருகிறது என்றவள், அருள்வர்மனின் தோள்களை தன் இரு கைகளாலும் பற்றித் தன் மார்போடிணைத்தாள். செண்பகவல்லி என்ன இவள் இன்னும் சிறு குழந்தை போலல்லவா நடந்து கொள்கிறாளே. மெதுவாக எழுந்த அருள்வர்மன் பொழுது புலர்வதற்குள் அவ்விடத்தை விட்டகல வேண்டுமே என்ற அவசரம் ஒருபுறம், அவளைத் தூக்கத்திலிருந்து எழுப்ப வேண்டுமே என்ற கவலை மற்றொருபுறமாக சங்கடப்பட்டுக் கொண்டிருந்தவனுக்கு திடீரென ஒரு உபாயம் தோன்றியது.

வேறு வழியின்றி "செண்பகவல்லி எழுந்திரு" பூங்கொடி வருவது போலத் தெரிகிறது என்று சொல்லி முடிப்பதற்குள் துள்ளி எழுந்த செண்பகவல்லி, தன் உடைகளை சரி செய்தவாறு எங்கே? என்றவளை நோக்கிய அருள்வர்மன் கலகலவென்று சிரித்துவிட்டான். இதைக் கேட்டதும் செண்பகவல்லிக்கு நித்திரைக் கலக்கம் சென்றவழி தெரியாது சென்றுவிட்டது. போங்கள் நான் உங்கள் அருகில் இருப்பதே உங்களுக்குப் பிடிக்கவில்லை என்று சிணுங்கினாள் செண்பகவல்லி. இதைக் கேட்டதும் அருள்வர்மன் குழைந்தான். அருகிலென்ன என் உள்ளத்திலேயே குடி கொண்டுவிட்ட உனக்கு, அருகில் எதற்கு இடம் என்று அவள் கூந்தலை இலேசாகத் தடவி விட்டான். நாழியாகிறது நான் சென்று வரட்டுமா? என்ற கேள்வி செண்பகவல்லியின் தலையில் ஓர் பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டது போலிருந்தது. "இல்லை உங்களைப் போகவிடமாட்டேன்" என்றவள் அவன் இரு கைகளையும் பற்றிக் கொண்டாள்.

*"வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்*
*அதற்கன்னள் நீங்கும் இடத்து"*
*அதிகாரம் - 113 குறள் - 1124*

## சிந்தியா பதில்கள்

**சிந்தியா, இன்னும் இரண்டு வருடங்களில் விண் கல் ஒன்று பூமியைத் தாக்கப் போவதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்களே, நீங்கள் எங்கே இடம் பெயரப் போகிறீர்கள்?**
-எம்.கேசவன், மருதானை.

அது சரி, உங்களுக்கு யார் சொன்னது? இலங்கைப் பக்கமாகத்தான் விண் கல் தாக்கப்போகிறதென்று. இருந்தாலும் இரண்டு வருட அவகாசத்தில் யோசித்து ஒரு முடிவு செய்யலாம்.

**மஹேல ஜெயவர்தனா பொறுப்புடன் ஆடுகிறார் என்று தெரிகிறது. தொடர்ந்தும் ஆடுவாரா?**
-ப.திருச்செல்வம், பேசாலை.

தலைமைப் பொறுப்புடன் ஆடுகிறார் போல் தெரிகிறது. அது தொடருமா என்பது சந்தேகம்தான்.



**ஈராக்கில் வெடிக்கும் தொடர் குண்டுகள் எதனை வெளிப்படுத்துகின்றன?**
-எம்.ரி.ரிஷ்வான், பேருவளை.

ஈராக் மீதான தாக்குதலில் ஆரம்பத்தில் இருந்த தவறைத்தான் - "முதற் கோணல் முற்றும் கோணல்" என்பார்களே அப்படித்தான்.

**அண்மையில் வெளியான திரைப்படங்களில் குறிப்பிட்டு இரசிக்கக் கூடிய படம் எது?**
-எஸ்.திவ்யா, பாண்டிருப்பு.

"திருட்டுப்பயலே" "சித்திரம் பேசுதடி" - இரண்டும் பரவாயில்லை. "இம்சை அரசன் 23ஆம் புலிகேசி" வரும்வரை பார்க்கலாம்.

**போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கே பாதுகாப்பு இல்லாத நிலைமை எதன் வெளிப்பாடு?**
-ரி.தயாபரன், உவர்மலை.

ஒப்பந்த காலத்தில் ஜனநாயக அரசியல் போராளிகளும் பொதுமக்களும் படுகொலை செய்யப்பட்டபோது, பாதிக்கப்பட்ட தரப்புகள் நியாயம் கேட்டபோது எரிக் சொல்ஹெய்ம் சொன்னார்: இந்தப் படுகொலைகளும், வன்முறைகளும் உலகளாவிய வகையில் ஒப்பிட்டுப் பார்த்தால் மிகக்குறைவானதுதான் என்று. அதேபோல் அப்போது கண்காணிப்புக் குழு ஒரு அறிக்கை வெளியிட்டது. கொலையாளி அடையாளம் காணப் படாதவரை நிரபராதிதான் என்று. இவ்வாறான அசமந்தப்போக்கும் மேதாவித்தனமும் தான் இப்போது குற்றவாளிகளைக் கண்டு அஞ்சவும், பணியிலிருந்து பின்வாங்கவும், பாதுகாப்புக் கேட்கவுமான துன்பியல் சூழலைத் தோற்றுவித்துள்ளது. அவர்கள் மிரண்டு போயிருப்பதைப் பார்த்தால் ஒரு கட்டத்தில் பெட்டி படுக்கையோடு நாட்டை விட்டு ஓடவும் வாய்ப்பு உண்டு.

**அதிகமாகப் பேசாதவர்களை புத்திசாலிகள் என்று நினைத்துக் கொள்வேன் நிறை குடம் தளும்பாது என்பது என் முடிவு. இது சரியா? பிழையா?**
-எஸ்.கண்ணன், கந்தளாய்.

வெறும் குடமும் தளும்பாதே! அதை எப்படி நினைத்துக் கொள்வது?

**பெருகி வரும் மக்கள் தொகையைக் குறைக்க என்ன செய்ய வேண்டும்?**
-எம்.மதன்குமார், தில்லையடி.

ஒன்றும் செய்யக்கூடாது.

**யாழ்தேவி ரயில் சேவை ஆரம்பித்து 50 வருடப் பூர்த்தி கொண்டாடியதாக செய்திகள் வெளிவரும் நிலையில், அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரேதான் யாழ்ப்பாணத்திற்கு ரயிலில் போனதாக எனது அம்மம்மா சொல்கின்றார். எது உண்மை?**
-சி.ஷிரோனி, நம்பைக்குளம்.


இரண்டுமே உண்மைதான். யாழ். தேவி என பெயர் சூட்டப்பட்டுத் தான் 50 வருடங்கள் ஆகின்றன.

**முரசு - 660 இதழில் தாக்குதல் வியூகங்கள் எப்படி தயாராகின்றன என மதியூகியார் விலாவாரியாக அலசியுள்ளாரே, தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தாக்குதல் திட்டமுறைகளை வெளிப்படுத்தியதற்காக மதியூகியாரைக் கைது செய்யலாம் தானே?**
-இ.ராமமூர்த்தி, நாவல்நகர்.

அப்படிப் பார்த்தால் தேசியப் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவித்திருக்கும் ஒப்பந்தத்தை செய்திருப்போரை என்ன செய்வது? மதியூகியார் குறிப்பிட்டிருப்பது சொற்பம் தான்.

**பாகிஸ்தான் அரசு இலங்கைக்கு வழங்கிய புத்தர் சிலை எலும்புகள் தெரியும்படி வித்தியாசமாக இருப்பதை அவதானித்தீர்களா?**
-அமீர் ஹம்ஸா, மல்வானை.

புத்தர் சிலை என்பது ஒரு உருவகம். பௌத்தர்களுக்கு அவரின் போதனைகளே முதலிடத்தைப் பிடிக்கின்றன, நீங்கள் குறிப்பிடுவது உபவாச புத்தர்



(Fasting Buddha). இதனைவிட சிரிக்கும் புத்தர், துயிலும் புத்தர் எனப் பல வடிவங்கள் உலகின் பல்வேறு நாடுகளிலும் உள்ளன.

**பிரிட்டிஷ் மகாராணியார் தனது 80 ஆவது வயதினைக் கொண்டாடினார் என செய்திகளில் பார்த்தேன். அவர் எப்போது ஓய்வு பெறுவார்.**
-டிலானி ரட்ணம், தெஹிவளை.

பிரிட்டிஷ் அரச சட்டமுறைப்படி அவர் உயிரோடு இருக்கும் வரை மகாராணி பதவியை வகிக்கலாம். அதேவேளை இன்று நினைத்தாலும் சாள்ஸை மகாராஜா வாக முடி சூட்டலாம். இங்கிலாந்து பல்கலைக்கழக மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றின்படி இளவரசர் அன்றூ மகாராஜாவாக வர வேண்டும் என்று இளசுகள் விரும்புகிறார்களாம்.

**யாழ். குடாநாட்டில் கொத்துக் கொத்தாக கொலைகள் விழுகின்றன. யார்தான் இக்கொலைகளைச் செய்கின்றார்கள்?**
-எஸ்.சாய்ராம், வவுனியா.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று வந்துவிடக் கூடாது என எண்ணுவோர்.

**புலிகள் எவ்வளவுதான் வேண்டுகோள் விடுத்தும் யாழ்.மாவட்ட மக்கள் வன்னிக்கு இடம் பெயரவில்லை. என்ன காரணமாக இருக்கலாம்?**
-லே.பரமன், நூரளை.


இடம் பெயர்ந்த பின் மீண்டும் இடம் பெயருவதிலும் பார்க்க, இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் நலம் என எண்ணியிருக்கலாம்.

## 100 மீற்றர் ஓட்டத்தில் உலகச் சாதனை

**100** மீற்றர் அதிவேக ஓட்டப் போட்டிகளில் அமெரிக்க வீரர்கள் தான் தற்போது அதிகம் முதலிடத்தை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் 100 மீற்றர் ஓட்டத்தில் முதல் இடத்தை பிடிப்பவர் உலகின் அதிவேக ஓட்டப் பந்தய வீரர் அமெரிக்காவை சேர்ந்த ஜஸ்டின் கேட்லின் ஆவார். 2004ஆம் ஆண்டு ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் சாம்பியன் பட்டம் பெற்றார்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹெல்சிங்கில் நடந்த உலக தடகள போட்டியில் அவர் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றார்.

தோசாவில் நேற்று நடந்த கத்தார் கிராண்ட் பிரீ பந்தயத்தில் 100 மீற்றர் ஓட்டத்தில் கேட்லின் புதிய உலக சாதனை படைத்தார். அவர் பந்தய தூரத்தை 9.76 வினாடியில் கடந்து உலகின் அதிவேக ஓட்டப் பந்தய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.




கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஏதென்ஸில் நடந்த போட்டியில் ஜமைக்கா வீரர் அசாயாபா போவேல் 9.77 வினாடியில் கடந்ததே இதற்கு முன்பு சாதனையாக இருந்தது.

புதிய உலக சாதனை படைத்தது குறித்து 24 வயதான கேட்லி கூறும்போது, "மிக மகிழ்ச்சி அளிக்கிறது. 3 ஆவது முறையாக கத்தார் போட்டியில் பங்கேற்று உள்ளேன். இது மிகவும் முக்கியமானதாகி விட்டது. எதிர் காலத்தில் தொடர்ந்து சிறப்பாக ஓடி சாதனை புரிவேன்" என்றார்.

நைஜீரியாவைச் சேர்ந்த ஒலுசோஜி 9.84 வினாடிகளில் கடந்து 2 ஆவது இடத்தையும் அமெரிக்க வீரர் கிராபோர்ட் 10.08 வினாடியில் கடந்து 3 ஆவது இடத்தையும் பிடித்தனர்.

### இலங்கை – இந்தியா.....

5ஆம் பக்கத் தொடர்ச்சி.....

இணைத்தலைமை நாடுகளின் இலங்கை தொடர்பான முன்னெடுப்புகளுக்கு இந்தியா இதுவரை காலமும் வழங்கிய ஒத்துழைப்பை நீடிக்கப் போகிறதா? அல்லது இந்தியாவின் தனித்துவத்தை எதிர்காலத்தில் வெளிக்காட்டப் போகிறதா? என்ற கேள்விக்கு இந்தியா பிராந்திய சூழ்நிலையை கவனத்தில் கொண்டு சில முடிவுகளை எடுக்கவுள்ளதாக அறிய முடிகிறது. அதேவேளை மே மாதம் பதினோராம் திகதி வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் விடுப்பில் சென்ற கடற்படையினரின் கப்பலை புலிகள் தாக்கிய சம்பவத்தில் கடற்படையினரின் இரு டோராப் படகுகள் தாக்கப்பட்டதோடு புலிகளின் படகுகளும் தாக்கியழிக்கப்பட்டது. படையினரை ஏற்றிய கப்பல் இந்தியாவை அண்மித்த சர்வதேச கடற்பரப்புக்கு செலுத்தப்பட்டபோது அந்தக் கப்பலை புலிகள் பின் தொடர்வார்களானால் இந்தியா தலையிடக்கூடியவாறு தனது விமானப்படையையும் கடற்படையையும் தயார் படுத்தியதாகத் தெரியவருகிறது. பின்னர் இலங்கை விமானப்படையினரின் தாக்குதலைத் தொடர்ந்து புலிகள் பின் வாங்கி விட்டனர். இதுகூட இந்தியா ஆபத்தான கட்டத்தில் அல்லது உதவி தேவையான நேரத்தில் உதவ தயாராக இருக்கின்றதையே தெளிவுபடுத்துவதாக உள்ளது.

## ஸ்போர்ட்ஸ்


ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

### உலகக் கோப்பை கால் பந்து போட்டிகள்

**உலகக்** கோப்பை கால்பந்து போட்டிக்கு இன்னும் ஒரு மாதம் கூட இல்லை. ஜெர்மனியில் அடுத்த மாதம் 9 ஆம் திகதி தொடங்கி ஜூலை 9ஆம் திகதி வரை ஒரு மாதம் போட்டி நடக்கிறது.

கால் பந்து உலகக் கோப்பை போட்டியை கால் பந்து ரசிகர்கள் மட்டும் அல்ல மற்ற விளையாட்டுகளின் ரசிகர்களும் விரும்பி பார்ப்பது உண்டு. இதனால் இப்போதே உலகம் முழுவதும் கால்பந்து காய்ச்சல் தொற்றிக் கொள்ள ஆரம்பித்துவிட்டது.

போட்டியில் வெல்லப் போகும் அணி எது என்பது குறித்து ரசிகர்கள் பந்தயம் கட்ட ஆரம்பித்து விட்டனர். நடப்பு சாம்பியனான பிரேசில் தான் இந்த தடவையும் ஜெயிக்கும் என்று பலரும் பந்தயம் கட்டி வருகின்றனர். பிரேசில் வெற்றி பெறாது என்று பந்தயம் கட்டுவோரின் எண்ணிக்கை மிக குறைவாகவே உள்ளது.




பிரேசில் அணியில் கடந்த தடவையை போலவே மிகச் சிறந்த வீரர்கள் இடம் பெற்று உள்ளனர். இந்த அணியின் வீரர் ரெனால்டியோ பிரம்மாதமாக விளையாடி வருகிறார். இதே போல் ரொனால்டோ, சுகா, அத்ரியானோ, கபு, ராபின்கோ, ரோபர்டோ கார்லஸ் என அதிரடி ஆட்டக்காரர்கள் அணியில் இடம் பெற்று உள்ளனர். வேறு எந்த நாட்டு அணியிலும் இது போன்ற சிறந்த வீரர்கள் வரிசை இல்லை.

பிரேசில் ஏற்கனவே 1958, 1962இல் தொடர்ந்தாற் போல் 2 தடவை உலக கிண்ணத்தைப் பெற்றது. இதே போல இந்த இரண்டு தடவையும் வெல்லும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

### பிறப்பெண் - 5, கூட்டெண் - 2

5, 14, 23 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 2 வருமேயானால் புதன், சந்திரன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். பார்ப்பதற்குக் குறைவான உயரத்துடனும் அழகாகவும் காட்சியளிப்பர். எப்பொழுதும் ஏதாவது ஒரு சிந்தனையிலேயே இருப்பர். பற்கள் வரிசையாகவும் பளபளப்பாகவும் காட்சியளிக்கும். சுறுசுறுப்பாக இயங்கும் இவர்கள் திடீரென்று சோம்பல் நிலைக்கு வந்துவிடுவர். இவர்களுக்குப் பெயர் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமையாவிட்டால் நன்றாக இருக்கும்போதே பல குழப்பங்கள் வந்துநீங்கும். பெயர் பொருத்தமானதாக அமைந்துவிட்டால் தான் செய்கிற உத்தியோகத்திலும் தொழிலிலும் உயர்ந்த நிலையை அடைவர்.

எதிலும் முன் எச்சரிக்கை கொண்ட இவர்கள் யாரையும் எளிதில் நம்ப மாட்டார்கள். தானே ஒவ்வொரு காரியத்தையும் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு முயல்வர். பிடிவாத குணம் கொண்ட இவர்கள் தான் எதைச் செய்தாலும் வேகமாக முடிக்க வேண்டுமென்று போராடுவர். உடல் பலம் மிகுந்தவர் போல் காட்சியளிக்கும் இவர்கள் மன பலம் குறைந்தவர்களே. இவர்களது மனநிலை திடமாகவும் சில நாட்கள் பலவீனமாகவும் மாறி மாறிச் செயல்படும். இதனால் சிலருக்கு முன்கோபம் வரும். வெளியில் ஒரு காரியம் நடக்காவிட்டால் வீட்டில் உள்ளவரை திட்ட ஆரம்பிப்பர்.

பெயர் பொருத்தமானதாக அமைந்தவர்கள் எப்பொழுதும் நல்ல ஆரோக்கியம், வீடு, நிலம், தொழில், உத்தியோகம், நல்ல வாழ்க்கைத் துணை, நல்ல குழந்தைகள் பெற்று வாழ்கின்றனர். வழக்கு தொடர்வதிலும், அதைத் தீர்ப்பதிலும், குறுக்குக் கேள்வி கேட்பதிலும், வாதம் செய்வதிலும் கைதேர்ந்தவர்கள். இவர்களது மனம் உயர்ந்த மலைப் பிரதேசங்களையும், இயற்கைக் காட்சிகளையும் கண்டு களிக்க ஆசைப்படும். வீட்டை அழகாக வைத்துக் கொள்வதிலும் ஆடம்பரப் பொருட்களை வாங்கிச் சேர்ப்பதிலும் ஆர்வம் உள்ளவர்கள். கற்பனை சக்தி அதிகம் கொண்ட இவர்கள் ஒரு பொருளைப் பார்த்தவுடன் அதைப்பற்றி ஆராய்ச்சியில் இறங்கிவிடுவர். சிலர் எழுதுவதாலும், பேசுவதாலும் புகழடைவர். எப்பொழுதும் நூதனமான பொருட்களைப் பற்றி ஆராய்ச்சி வந்து கொண்டு இருக்கும். பிறருக்கு யோசனை கூறி, பிறரைக் கவரக்கூடிய காந்த சக்தி உள்ளவராகவும், சீர்திருத்தவாதியாகவும் விளங்குவர். பழமையும், புதுமையும் கலந்து வாழ்க்கை நடத்தும் கொள்கை கொண்டவர். பேச்சாற்றல் கொண்ட இவர்கள் சில நேரங்களில் மௌனமாகவே இருந்துவிடுவர். சட்டம், சமயம், வைத்தியம், தத்துவம், கலை போன்றவற்றில் ஆர்வம் இருக்கும். இவர் களுடைய பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமானதாக பெயர் அமைந்துவிட்டால் வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை வகிப்பர்.

***தொழில்:***

இவர்களுக்கு கமிஷன், காண்ட்ராக்ட், அழகு சாதனங்கள், ஆடம்பரப் பொருட்கள், எலக்ட்ரிக் இரும்பு சம்பந்தமான தொழில் அமைந்தால் பெரும் லாபத்தைப் பெறும் பாக்கியம் உண்டாகும்.

***நோய்:***

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு அடிக்கடி சளி பிடித்தல், ஆஸ்த்மா சம்பந்தப்பட்ட நோய்கள், இரத்தக் கொதிப்பு, பைல்ஸ், வயிற்றுக் கோளாறு போன்றவை வர வாய்ப்பிருப்பதால் முன்கூட்டியே பெயரைப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் நோயிலிருந்து விடுபடலாம்.

***பெயர் அமைக்கும் முறை:***

புதன், சந்திரன் ஆதிக்கம் கொண்ட இவர்களுக்குப் புதன் ஆதிக்கமாகிய 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

***பின்பற்ற வேண்டியவை:***

யோகமான எண் - 5, 7.
யோகமான திகதிகள் - 5, 14, 23; 7, 16, 25.
யோகமான மோதிரக்கல் - வைரம், ஜிர்கான், டைகர்ஸ் ஐ, மூன்ஸ்டோன்.
யோகமான நிறம் - சாம்பல் நிறம், வெளிர் பச்சை, வெளிர் நீலம்.
ஆகாத நிறம் - சிவப்பு மட்டும்.
ஆகாத திகதிகள் - 9, 18,27.

அடுத்த வாரம் பிறப்பெண் 5, கூட்டெண் 3 பற்றிப் பார்ப்போம்.

### வீடு போவோம்.......

6ஆம் பக்கத் தொடர்ச்சி....

இப்படி சமூகத்தின் ஆக அடிமட்டத்தில் இருப்பவர்களையும், ஆக உயரத்திலிருப்பவர்களையும் பற்றி யோசிக்கும் போதுதான் எனது வீட்டு ஞாபகம் வருகிறது.

நிலத்துக்கு சீமெந்து போட்டிருந்தாலும் பக்கச் சுவர்கள் களிமண்ணில் கட்டப்பட், கூரை தென்னை கிடுகுகளினால் வேயப்பட்ட மூன்று அறைகளும் ஒரு சமையலறையும் கொண்டது எங்கள் வீடு. முன் விறாந்தை கொஞ்சம் பெரிதாக இருக்கும். பொருட்களும் சாமியறையும் புத்தகங்கள் வைக்கவும் ஒரு அறை. படுக்கைக்கு ஒரு அறை. எந்தத்தேசம் போனாலும் எந்த ஊர்போனாலும் யாருடைய வீட்டுக்குப் போனாலும் வீட்டுக்கு வந்து விறாந்தையில் விரிப்புக்கள் எதுவுமில்லாமல் வெறும் சீமெந்துத் தரையில் புரண்டு படுப்பதுதான் உலகில் எல்லாவற்றையும் விட சுகமானது. கால் நீட்டும் சுவரில் தம்பியும், தங்கைமாரும், அம்மாவும் தங்கள் கணக்கு வழக்குகளை எழுதிவைத்திருப்பது ஒரு நவீன ஓவியம் போல் இருக்கும். அப்பா பற்களை நற நற வென்று கடித்துக் கொண்டு கதவுப்பக்கமாகப் படுப்பார். கூரை முகட்டில் எலிகள் அங்கும் இங்கும் ஓடுவது போக சில எலிகள் நின்று படுக்கையில் கிடக்கும் எங்களைப் பார்ப்பதை நான் பார்த்திருக்கிறேன். பள்ளிக்கூடத்தில் தம்பி எத்தனை பேருக்கு பிஸ்கட் கடன் கொடுத்தான் என்ற கணக்கையும் அம்மா கடைக்குக் கொடுக்கவேண்டிய கடன் கணக்கையும் நான் கூட்டிக்கழித்துக் கொண்டிருப்பேன். நான் நித்திரை கொள்ளாவிட்டால் அம்மா படிக்கும்படி சொல்வார். இல்லாவிட்டால் பின்னேரம் எங்கெல்லாமோ போய் விளையாடி பேய் பிசாசைக் கண்டு விட்டு வந்து பயந்துபோய் இருக்கிறான் எண்டு அம்மா சொல்வார். அந்தநேரத்தில் படிக்க முடியாது என்பதாலும் அடுத்தநாள் விளையாட்டுக்குத் தடை வந்துவிடக்கூடாது என்பதாலும் கண்ணை மூடிக் கொண்டு அல்லது சுவர்ப்பக்கமாக திரும்பிப் படுத்துக் கொள்வேன். உலகம் விரிந்து கிடந்தாலும் என் வீட்டுக்குள் என் உரிமையும், நம்பிக்கையும் சுருங்கிக் கொண்டு கிடக்கும்.

மனிதவாழ்வு மூன்று கட்டங்கள் என்றுதான் என் அபிப்பிராயம். கீழ்மட்டம், இடைமட்டம், உயர்மட்டம். இதில் எங்கள் வாழ்க்கை இடைமட்டம். அதாவது ஒரு வசதியான மாடிவீட்டுக் காரரைப்போல் போகவும் முடியாமல் தெருவீட்டுக் காரன்போல் இறங்கவும் முடியாமல் இடையில் கிடந்து உழல்வதுதான் இடைமட்டத்தினரின் வாழ்க்கை. உலகில் பெரும் பகுதியானவர்கள் எங்களையொத்தவர்கள். அதாவது இடைப்பட்டவர்கள். அவர்களைப் பொறுத்தவரை வசதியானவர்களைப் பார்த்து பொறாமைப்படவும் முடியாது தெருவோரக் காரரைப் பார்த்து பரிதாபப்படவும் முடியாது. அப்போது இந்த மனநிலையில் என் தந்தையும் இருந்திருக்கக்கூடும். என்னைப் பொறுத்தவரை நான் எதிர்காலத்தில் அல்லது என் பிள்ளைகள் பெரியாளாக வளர்கின்ற போது ஒரு ஒற்றை மாடி வீடாவது கட்டிக் கொள்ள வேண்டும் என்பது தான்.

இப்போது யோசித்துப் பார்க்கிறேன். மனிதன் தன் பேரில் நிலத்தை வாங்கினால் என்ன, அதில் வீட்டைக் கட்டினால் என்ன அதுமனிதன் தற்காலிகமாக செய்து கொள்ளும் ஒரு ஒப்பந்தமே தவிர, நிலம்தான் மனிதனை எந்தவித ஆவணங்களும் இல்லாமல் உரிமையாக்கிக் கொள்கிறது. உணவு இல்லாமல், மாற்று உடை இல்லாமல் இருக்கமுடியும் ஒரு வீடு இருப்பவனுக்கு. ஏன் எனில் ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் அதற்குள் வாழும் குடும்பங்கள் இன்பம், துன்பம், அழுகை, கண்ணீர், சிரிப்பு, அந்தரங்கம் என்று எல்லாமே அடங்கிப்போய் விடுகிறது.

சில கல்வீட்டுக் காரர்களின் கதையைக் கேட்டிருக்கிறேன். அப்பா, தாத்தா, பாட்டி, அண்ணா சில வேளைகளில் அம்மா கட்டிய வீடு என்றும், அந்த வீட்டில் அவர்களின் வியர்வை, உழைப்பு, அன்பு, ஞாபகம் எல்லாமே இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வளவு ஏன் சிலர் அந்த பழைய வீடுகளை உடைக்காமல் தமக்குப் பிடித்தமாக பக்கத்தில் புதியதொரு வீட்டையும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்க பார் இப்பநான் சொன்னதென்னவோ அனுதாபமென்றோ இல்லா விட்டால் எனக்கும் என் மனைவிக்கும் இடையில் பிடிக்காது என்ற விரக்தியிலோ அல்ல அவளுக்கும் எனக்கும் ஒத்துப்போக வில்லையே தவிர தனித்தனியாக அவரவர் கௌரவத்தைக் குறைத்துக் கொள்ளாமல் அவரவர் சந்தோசங்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த இடைவெளிகூட பிறகு எல்லாம் சரியாகி விடும் என்று என் நண்பன் கூறியது வேடிக்கையானது.

இன்னொரு நாளில் நான் அதே தெருவால் வந்து கொண்டிருக்கும்போது பார்க்கிறேன், அதே இடத்தில் புதிய குடிசை. கார்ட்போட், பொலித்தீன் பேக் இப்போது எங்கே? காற்றில் பறந்து வந்த ஒரு விளம்பரப்பலகையால் ஒரு தடுப்பு என்று அந்தஇடம். அப்போது வெளியில் எட்டிப்பார்த்த, அன்று குழந்தையோடு ஓடிய பெண் என்னைப் பார்த்து சிரிக்கிறார். மனதில் மாடிவீட்டுக் கனவோடு தெருக்குடிசைகளைப் பார்த்துக் கொண்டு நான் அலைவது அந்தப் பெண்ணுக்குத் தெரிந்திருக்குமோ என்று நினைக்கையில் எனக்கும் சிரிப்பு வந்து விட்டது. வாழ்க்கை எனும் காட்டாறு எத்தனை கற்பாறைகளையும் காடுகளையும் சமவெளிகளையும் மேடுபள்ளங்களையும் தாண்டி பாய்ந்து கொண்டிருக்கிறதும் சொந்தமாக ஒரு வீடுபற்றிய கனவும் அதற்கான உழைப்பும் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டியதுதான்; அது ஒன்று சட்டவிரோதமோ சமூகவிரோதமோ இல்லையென்பதுதான் என் வாதம். வாழ்வோம் வாழவைப்போம்.

## இளம் வீரர்களுக்கு பயிற்சியளிப்பேன்



**கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் இளம் வீரர்களை உருவாக்கவுள்ளதாக அவுஸ்திரேலிய வீர் வோர்ன் கூறியுள்ளார்.**

**கிரக்கெட் உலகின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஷேன் வோர்ன். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 685 விக்கெட்டுகளை சாய்த்து உலக சாதனை படைத்துள்ள வொர்ன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:**

**நான் எனது வாழ்க்கை முழுவதையும் கிரிக்கெட்டுக்காக அர்ப்பணித்துள்ளேன். எனது எண்ணம், பொழுது போக்கு எல்லாமே கிரிக்கெட்டை சுற்றித்தான் உள்ளது. பந்து வீச்சில் உள்ள நுணுக்கங்களை கற்றுக்கொடுத்து இளம் வீரர்களை உருவாக்குவேன். ஓய்வுக்கு பின்னர் இதில் முழுக் கவனத்தையும் செலுத்துவேன்.**

# வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற எட்வர்ட் - டி - வேர் (கி.பி. 1550 - 1604 நூற்றாண்டு)

சென்றவாரத் தொடர்ச்சி

**சேக்ஸ்பியரின்** பெற்றோர், மனைவி, குழந்தைகள் அனைவருமே எழுத்தறிவற்றவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு மனிதன் தன் பெற்றோர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில்லை. ஒரு பெண் படிக்கத் தெரிந்தவள் என்பதற்காக மட்டுமே அவளை ஒருவன் வாழ்க்கைத் துணைவியாகத் தேர்ந்தெடுப்பதில்லை. ஆனால், எழுத்துலக மேதை எனப் போற்றப்பட்ட ஒருவர், தம் சொந்தப் புதல்வியரை எழுதப் படிக்கக் கற்பிக்காமல் வளர்ந்தார் என்பதை சிறிதும் நம்ப முடியவில்லை. சேக்ஸ்பியர், சேக்ஸ்பியராக இருந்திருந்தால், வரலாற்றில் தம் குழந்தைகளை எழுத்தறிவற்றவராக வளர்த்த உலகப் புகழ்பெற்ற ஒரே எழுத்தாளர் அவராகத்தான் இருப்பார்!

இங்கு சேக்ஸ்பியரின் விருப்புறுதி ஆவணம் (Will) பற்றிய சிக்கல் எழுகிறது. இந்த மூல ஆவணம் இன்றும் உயிர் வாழ்கிறது. இது மூன்று பக்கங்கள் நீளமுடையது. இதில் அவரது சொத்துக்கள் விவரமாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. அந்தச் சொத்துக்கள் பல குறித்த நபர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன. ஆனால், அதில் எந்த இடத்திலும் அவரது கவிதைகள், நாடகங்கள், எழுத்துப்படிகள், எழுதப்பட்டு வரும் நூல்கள், இலக்கிய உரிமைகள் எதனைப் பற்றியும் குறிப்பிடவில்லை.



அவரது சொந்த நூல்கள் அல்லது ஆய்வுரைகள் பற்றியும் எந்தக் குறிப்பும் இல்லை. அவரது நாடகங்களில் குறைந்தது 20 நாடகங்கள் அப்போது அச்சிடாமலிருந்த போதிலும் வெளியாகாமலிருக்கும் அவரது நாடகங்களை வெளியிடுவது குறித்து எவ்விதக் குறிப்பும் இல்லை; அவர் தம் வாழ்நாளில், ஒரு கவிதையை அல்லது நாடகத்தை எழுதியதற்கான குறிப்பு எதுவுமில்லை. பள்ளிக்குச் சென்றிராத, எழுத்தறிவற்ற ஒரு

## உலகை வியக்க வைத்தவர்கள்

வணிகர் எழுதிய ஒரு விருப்புறுதி ஆவணமாகவே அது அமைந்துள்ளது.

புகழ்பெற்ற ஆங்கிலக் கவிஞர் ஒருவர் இறந்தால் அவருக்கு ஆடம்பரமான ஈமச் சடங்குகள் நடத்துவதும், கவிஞர்கள் நீண்ட கவிதைகள் இயற்றிப் புகழஞ்சலி செலுத்துவதும், பெரு வழக்கமாக இருந்து வந்த ஒரு காலத்தில், 1616இல் சேக்ஸ்பியர் காலமானபோது அவருக்கு அஞ்சலி செலுத்தாமல் அறவே விட்டு விட்டது வியப்புக்குரியது. பிற்காலத்தில் வில்லியம் சேக்ஸ்பியரை வியந்து போற்றுபவராகவும் அவருடைய நெருங்கிய நண்பராகவும் விளங்கிய தன்னைக் கூறிக்கொண்ட பென் ஜான்சன்கூட, சேக்ஸ்பியர் இறந்தபோது சிறிதும் இரங்கல் தெரிவிக்கவில்லை; அவர் மரணம் குறித்து குறிப்பிடவுமில்லை. ஸ்டிராட்.:.போர்ட் மனிதருக்கும் புகழ் பெற்ற நாடகாசிரியருக்குமிடையில் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை உணர்ந்து மற்றக் கவிஞர்களும் வாளா இருந்தனர் போலும்!

மேற்சொன்ன வாதங்களே முடிவான சான்றுகள் என்று நான் கருதுகிறேன். சேக்ஸ்பியர் நாடகாசிரியர் அன்று என்பதற்கும், ‘‘வில்லியம் சேக்ஸ்பியர்’’ என்னும் பெயர் உண்மையான எழுத்தாளரை மறைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட புனைபெயர் என்பதற்கும் இதற்குமேல் சான்றுகள் தேவையில்லை. எனினும், சேக்ஸ்பியர் எழுத்தாளர்தான் என்பதற்கு எதிரான வலுவான கூடுதல் வாதங்களும் உள்ளன.

எடுத்துக்காட்டாக, பெரும்பாலான நாடகாசிரியர்களும், நாவலாசிரியர்களும் தங்கள் சொந்த வாழ்க்கையில் நடந்த பல நிகழ்ச்சிகளைத் தங்கள் படைப்புகளில் சேர்த்திருப்பார்கள். (பல சமயங்களில், இந்நிகழ்ச்சிகள் கதையின் முக்கியப் பகுதியாகவும் அமைந்திருக்கும்). ஆனால் சேக்ஸ்பியரின் நாடகங்களில், அவருடைய சொந்த அனுபவங்கள் எனக் கருதத்தக்க நிகழ்ச்சிகள் அல்லது சூழ்நிலைகள் எதுவும் காணப்படவில்லை.

**வியப்புக்கள் தொடரும்....**

# காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

நாட்டில படையினர் மேலையும், சனத்தின்ர மேலையும் தாக்குதல் தொடர்ந்த வண்ணமா இருக்குதெல்லோ. உதாலை பாதுகாப்புக்காரங்களாலை எங்கட சனம் செக்பொயிண்டுகளில ரொம்ப நேரம் மெனக் கெடுகினம். சனத்தின்ர பேராலை தாக்குதல் நடத்துறதாலதான் உந்தக் கஷ்டம் எண்டு சனத்துக்குத் தெரியுது. தெரிஞ்சு என்னதான் செய்யிறது. அரைகுறையாத் தமிழ் தெரிஞ்ச ஆமிக்காரன் ஒருவரோட நம்மவர் ஒருவர் விவாதிச்சிக்கொண்டால் எப்புடி இருக்கு மெண்டு வாத்தியார் சொல்லுறது சரிதானோ எண்டொருக்காப் பாருங்கோவன்.

***கற்பிணிப் படை***

***ராசன்** :- மாத்தையா? உங்களுக்குக் கொஞ்ச மெண்டாலும் மனச்சாட்சி இருக்கா? இல்லாட்டி மனச் சாட்சியை எங்கேயும் அடைவு வைச்சிட்டியளா?*

**சிப்பாய்** :- தம்பி என்ன கேக்கறது மனசாச்சி. யாருகிட்டக் கேக்கிறது மன சாட்சி பற்றி. நாங்க இப்ப என்ன செஞ்சது சொல்லி நீங்க மன சாச்சி பத்தி கேக்கிறது?

***ராசன்** :- உங்கட பாதுகாப்பெண்டு இந்த வயது போனதுகள், கற்பிணிப் பெண்பிள்ளைகளை யெல்லாம் வெய்யிலில வைச்சுக் கொண்டு சோதனை போடுறியளே! அதைத் தான் கேட்கிறன்.*

**சிப்பாய்** :- தம்பி நீங்க என்ன கொட்டியா? இல்லைதானே; நீங்க வேற கச்சிதானே?

***ராசன்** :- நாங்கள் சமாதானத்தை விரும்பிற கட்சி எண்டாலும், நீங்கள் அப்பாவிச் சனங்களை கஷ்டப்படுத்திறத எப்பிடி நாங்கள் சரி எண்டு சொல்லுறது? மக்கள் கஷ்டப்படுறதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இப்பிடியான வேலைகளை நீங்கள் குறைக்க வேணும் எண்டு சொல்லுறதைவிட நிறுத்த வேணும்.*

**சிப்பாய்** :- தம்பி! அந்த தமிழசெல்வன் சொல்லுற மாதிரி பொய் கதே கதைக்க வானா சரியா? அவன் சூசைட் அனுப்புறது புள்ளதாச்சி சரியா? அப்ப நாங்க புள்ளதாச்சி சொல்லி பாவம் பாத்தா நம்ம மாத்தயாதான் சாவுறது அதி சரியா? மனசாச்சி பத்தி சொல் லுறது. பிரபாகரன்கிட்ட சொல்ல வேணும், நாங்கள் மனசாச்சி பாத்துதான் அனியாயமா சாவுறது. அதிபத்தி பேப்பரிலே சரி போடுறதா?

***ராசன்** :- பேப்பரில போட்டால் புலி வந்து பேப்பர்காரரை சுட்டுப்போடும் உப்புடி எத்தினை பேரைச் சுட்டுப் போட்டாங்கள். இதெல்லாம் உங்களுக்கும் தெரியும்தானே!*

**சிப்பாய்** :- அப்பிடி என்னா புலி அறுத் தால் போட்டா படம் எடுத்திப் பெரிசா போட்டு அவனிக்கி சயிட் பண்ணறது எப்பிடி? அதி சொல்லுங்க. பேப்பர்கார சொன்னா அவனிக்கி மனசாச்சி வேணும் சரியா? அதி இல்லாமே ஒரு பக்கத்திக்கி சயிட் சரியில்லே.

***ராசன்** :- அப்பிடி எண்டு சொல்லுறதா யிருந்தால், புலியளத் தேடிப்பிடிக்கலாந் தானே? அப்ப ஒரு பிரச்சினையும் வராது. அப்பாவி மக்களுக்கும் தொல்லையில்லை. அங்க பாருங்க எத்தனை தாய்மார் குழந்தப் பிள்ளைகளோட வெய்யிலுக்க நிக்குதுகள். உங்களுக்கும் தாய் சகோதரங்கள் இருக்குத் தானே?*

**சிப்பாய்** :- யார் தம்பி இல்லை என்னு சொல்லுறது. நாங்களும் மனுசன்தான். புலி சொல்லுறது மாதிரி அந்த யோதயோ இல்லே.

***ராசன்** :- யோதயோவோ? எனக்கு விலங்க இல்லே.*

**சிப்பாய்** :- வெலங்க இல்லே. வன்னி யிலே புலி ஆக்களுக்கு சம்பளம் குடுத்து ரோட்டிலே டான்ஸ் பண்ணுறதிலே நீங்க பாக்க இல்லையா? முகத்திலே கறிபூசிகிட்டு, பெரிய பல்லு எல்லாம் வைச்சிகிட்டு வந்தி ஆடுறது.

***ராசன்** :- அட தெருக்கூத்து, புலிகளின்ர தெருக் கூத்தில வார அரக்கன் சிங்கள அரக்கன் வந்து தமிழ் மக்களக் கொல்லுற மாதிரி, நடிக்கிற அதைச் சொல்லுறியளே.*

**சிப்பாய்** :- என்ன பேரு சொன்னது?

***ராசன்** :- அரக்கன்.*

**சிப்பாய்** :- அரக்கன்; அரக்கன். அதி மாதிரி நாங்கள் இல்லே. நாங்களும் மனிசன்தான். புலி நமக்கு கிளைமர் வைச்சி நாங்கள் செத்தா நல்லமா? எங்களுக்கு அம்மா, சகோதரன் இல்லையா?

***ராசன்** :- அவங்கள் மிருகசாதியள் புலி எண்டு இரக்கமில்லாத கொடி மிருகத்தின்ர பேரவைச்சிக் கொண்டு கொலைகளைச் செய்யிறாங்கள். அப்பிடி நீங்கள் செய்யக் கூடாது. அப்பிடிச் செய்தால் அவங்களுக்கும் உங்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும் எல்லே.*

**சிப்பாய்** :- தம்பி கொஞ்சம் யோசிச்சி கதைக்கோணும் சரியா? நம்மட ஊட்டு நாய் சரி விசர் புடிச்சி நமக்கு கடிச்சா? அதிபாவம் எண்டு உட்டு நாம சாவுறதா? இல்லாட்டி மாசகணக்கிலே ஊசி போடத்திக்கி ஆஸ்பத்திரி போறதா? நம்மட நாய் நமக்கு கடிச்சாலும் பரவாயில்லே! அதி மத்தவங்களுக்கு கடிச்சா யாரு சரி பாத்துக் கொண்டிரிப்பானா? பிரபாகரன்கி சூசைட், நமக்கு மட்டுமில்லே அந்த டக்கிளஸ் தேவானந்தா மாத்தையாவுக்கும் அடிக்கப் போனுதுதானே! அதி எப்புடி சரி.

***ராசன்** :- நீங்கள் சொல்லுறதிலையும் உண்மை இல்லாமலில்லை. இந்த அப்பாவிச் சனந்தானே கஷ்டப்படுகுதுகள். அதுதான் எங்களுக்கும் கவலையா இருக்குது.*

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

(18.05.2006 தொடங்கி 24.05.2006 வரை)

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

இடபம் - சூரியன், புதன். மிதுனம் - செவ்வாய். கர்க்கடகம் - சனி. கன்னி - கேது. துலாம் - வியாழன். மீனம் - வெள்ளி, இராகு.
சந்திரன் மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.



**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பண வரவு, உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை, குடும்ப சுகம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**




**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் அலைச்சல், மனக் கவலை, செலவு மிகுதி, பிரயாண மிகுதி, பொருள் இழப்பு, குடும்பப் பொறுப்பு, உத்தியோக பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**



**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.)
தொழில் மாற்றம், பொருள் வரவு, காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் சகாயம், குடும்ப மகிழ்ச்சி, உறவினர் உதவி, உத்தியோகப் பேறு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**



**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் கஷ்டம், பெரியோர் உதவி, பணவரவு தடை, வெளியார் தொல்லை, தூர இடப் பயணம், மனப் பயம், உத்தியோகக் கஷ்டம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**



**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.)
தொழில் பகை, மனப் பயம், செலவு மிகுதி, உறவினர் உபத்திரவம், கடின உழைப்பு, கௌரவம், குடும்பப் பொறுப்பு, உத்தியோகச் சிரமம், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**



**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் நன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் உதவி, வெளியிடப் பயணம், குடும்ப நன்மை, உத்தியோகக் கஷ்டம், மேலதி காரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**



**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
தொழில் மந்தம், பணச் செலவு, மனக் குறையதிகம், தூர இடப் பயணம், பெரியோர் சகாயம், குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக மேன்மை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**



**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் பலிதம், செலவு மிகுதி, புதிய முயற்சி, கடின உழைப்பு, கௌரவம், வெளியார் தொல்லை, மனக் கலக்கம், குடும்பக் கஷ்டம், உத்தியோக மாற்றம், மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**



**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் பலிதம், காரியானுகூலம், உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி, உறவினர் உதவி, குடும்ப மேன்மை, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**



**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.)
தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி, புதிய முயற்சி, பெரியோர் உதவி, பண வரவு, காரியானுகூலம், உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 01.**



**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, பலவித பேறு, வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும், அந்நியர் சகவாசம், குடும்பக் கலகம், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**



**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி, பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும், தூர இடப் பயணம், உத்தியோக நன்மை, மேலதி காரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயி கள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)


# இதய வீணை

தினமும்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின்
உணர்வுகள்
கருத்துக்களாய் கதைகளாய்....
செய்திகளாய்...
நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6

நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது

| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |




## நினைவுகளில்

2ஆம் உலகப்போரின் கோர வடுக்கள் போரில் பங்கு பற்றியவர்களின் மனதில் இன்னும்கூட அழியாமல் இருப்பதற்கு சிறந்த உதாரணம் இது. ஜேர்மனியுடனான போரில் அதிகூடிய உயிர்ச் சேதத்தை வாங்கிக் கொண்ட நாடு ரஷ்யா என்பது அறிந்ததே. ஆயினும் போரில் ரஷ்யா வெற்றியைத் தழுவி 2ஆம் உலகப்போரை முடிவுக்குக் கொண்டுவந்தது. உக்ரேன் நாட்டில் 2ஆம் உலகப் போரின்போது உயிர் நீத்தவர்களுக்காக உருவாக்கப்பட்டிருக்கும் நினைவுச் சின்னத்தின் முன், போரில் பங்கு பற்றிய அனைத்து இராணுவ வீரர்களும் நின்று வீர மரியாதை செலுத்தி நினைவுகளை மீட்டிப்பார்த்தார்களாம்.






## தங்கப் பதக்கம்

ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கம் பெறுவது என்பது வீரர்களின் கனவாகவே இருந்து வருகிறது. தங்கப்பதக்க வரிசையில் எப்பொழுதும் அமெரிக்காவே முதலிடத்தை வகித்து வருகிறது. புதிய புதிய போட்டிகளை அறிமுகப்படுத்தினாலோ அதிலெல்லாம் அமெரிக்க வீர வீராங்கனைகளே பதங்கங்களை அள்ளிச் செல்கிறார்கள். அருகில் இருப்பவர்கள் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் அமெரிக்கா சார்பில் தங்கப்பதக்கம் வென்ற வீராங்கனைகளே. 1989 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டுவரை அமெரிக்கா 976 தங்கப்பதக்கங்களைப் பெற்றுள்ளதாம்.

## விண்கலம்

நாளுக்கு நாள் விஞ்ஞானத்தின் அதீத வளர்ச்சி காரணமாக பல செயற்கைக் கோள்கள் விண்ணுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இங்குள்ளதும் ஒரு செயற்கைக் கோள்தான். ஆனால் சாதனைக்குரிய செயற்கைக்கோள் என்னவென்றால் 2004 ஆம் ஆண்டு நாசா விண்வெளி ஆய்வு நிலையத்தினால் செவ்வாய் கிரகத்தை நோக்கி அனுப்பப்பட்ட இவ் விண்வெளி ஓடம், கிட்டத்தட்ட 2423 தொன் நிறையைத் தாங்கிச் சென்றதாம். பூமியில் இவ் விண்கலத்தை நிலைப்படுத்த 21 நிறுத்திகள் பயன்படுத்தப்பட்டது. வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்ட இவ் விண்கலம், விண்வெளி ஆய்வுகூடத்தில் இருக்கும் வீரர்களுக்கான உணவு மற்றும் இதர பொருட்களை எடுத்துச் சென்றதாம். அங்கு விண்வெளிக்கே உணவு கொண்டு செல்கிறார்கள் இங்கு.....



## உயர் மைதானம்

கனவுலகத்தைக் காண விரும்புபவர்கள் துபாய் சென்று வாருங்கள் என்று சிலர் கூறக் கேள்விப்பட்டிருக்கிறோம். அங்கு என்ன சமாச்சாரம் என்றால், அருகே உள்ளது துபாயில் காணப்படும் புறிஜ் அல் அராப் எனப்படும் ஓட்டல் ஒன்றின் ரெனிஸ் மைதானமே. இவ் ஓட்டல் ஆனது 320.9 மீட்டர் (1052 அடி) உயரமுடையது. ஓட்டலின் உச்சியில் அமைக்கப்பட்டிருப்பதே இம்மைதானம். இம் மைதானத்தில் ரெனிஸ் உலகின் தலைசிறந்த வீரராக கருதப்படும் அன்ருஅகாசியும் றோஜபெரடரும் திறப்பு விழாவிற்காக ரெனிஸ் ஆட்டம் ஒன்றினை ஆடி இருக்கிறார்கள். அது சரி பந்து கீழே விழுந்தால் யார் பொறுக்குவது?



## பந்தயம்

குதிரைப் பந்தயத்தில் தங்களை இழப்பவர்கள் பலர். ஆனால், போட்டியாளர்களுக்கு எப்பொழுதும் பணம் தான் முக்கியம் அந்த வகையில் இங்குள்ளவரும் குதிரைப்பந்தய வீரர் ஒருவர்தான். ஆனால் மிகவும் பணக்கார குதிரைப்பந்தய வீரரான இவர் ஒவ்வொரு வருடமும் துபாய் நாட்டில் நடைபெறும் சர்வதேச குதிரைப்பந்தய போட்டிகளில் பங்கேற்று, 2001 ஆம் ஆண்டு குதிரைப்பந்தய உலகக்கிண்ணப்போட்டியில் முதலிடத்தை வென்றார். இதற்காக இவருக்கு கிடைத்த பரிசுத்தொகை 6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (எமது நாட்டு மதிப்பின்படி 600 கோடி ரூபாய்). அமெரிக்காவைச் சேர்ந்த ஜெரிபேளி என்னும் இவர்தான் குதிரைப் பந்தயத்தின் மூலம் அதிக அளவில் பணம் சம்பாதித்தவர் என்று கின்னஸிலும் பதியப்பட்டுள்ளார்.





## பல நாள் திருடன்

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் செம்மறி ஆட்டுப் பண்ணைகள் பல காணப்படுகின்றன. குறித்த ஒரு நபரின் பண்ணையில் அடிக்கடி செம்மறி ஆடுகள் காணாமல் போய்கொண்டிருந்தன. இதனை அறிவதற்காக பலநாள் முயன்ற அவ் உரிமையாளர், இயலாத கட்டத்தில் தனது பண்ணையைச் சுற்றி மின்சார வேலி ஒன்றை அமைத்தார். கையும் மெய்யுமாகப் பிடிபட்ட செம்மறி ஆட்டுத் திருடன் படத்தில் உள்ளவர் தான். ஆடு ஒன்றை விழுங்கி விட்டு வெளியே வரும்போதுதான் இவர் மின் வேலியில் மாட்டுப்பட்டார்.



[illegible] மே. 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.